Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20

දිනමුරසු වාරමලර් ஜூலை 14-20, 2002 ரூபா 14/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 468



## ஆழ்கடலில் சிக்கிய ஆயுதக் கப்பல்

## அரசாங்கத்தின் சந்தேகம்!


## பாபா ஸ்பெஷல்...

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## பஜனை

பஜனை செய்வதற்கு ராகம், தாளம் ஆகியவற்றில் திறமை வாய்ந்த பாடகர்கள் மூலம் மாணவர்கள் பயிற்சி பெறுதல் வேண்டும். பஜனை செய்யும் போது இறை நாமத்தைப் பாடுகிறோம் என்ற உணர்வில் பக்தியோடு, வெட்கமின்றி உரக்கப் பாட வேண்டும். அனைவரும் ஒரே குரலில் பாட வேண்டும். பஜனை பாடும்போது ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருத்தலோ, பாடாமல் இருத்தலோ நல்லதல்ல.



அனைவரும் சேர்ந்து ஒருமுகப்பட்டு பஜனை செய்வதால் பக்திப் பரவசமான ஓர் சூழ்நிலை அமைந்து விடுகின்றது. பக்தியை வளர்க்கும் பாடல்களை மட்டுமே பாட வேண்டும். குறிப்பிட்ட பாடல்களையே பாடி நன்றாகத் தேர்ச்சி பெற வேண்டும். பல பாடல்களைப் பாடி ஒரு பாடலும் ஒழுங்காகத் தெரியாமல் இருப்பதை விட ஒரு சில பாடல்களை ஒழுங்காகப் பாடி இறையருளைப் பெற்று வாழ்வில் பயன்பெறுவோம். இசையால் இறைவனருளை எளிதாகப் பெற்று உயரலாம் என்பதற்கு நம் முன்னோர்கள் மூலம் எத்தனையோ கதைகளை அறிந்திருக்கிறோம். கடவுள் அருளைப் பெற பஜனை செய்வோமாக-

சிவஸ்ரீ அ. அரசரெத்தினம். சேனையூர்-06.

## விசுவாசம்

(யோவான் - 5:-5)

முப்பத்தெட்டு வருடங்களாக வியாதி கொண்டிருந்த ஒருவன் படுக்கையிலே இருந்தான். ஆனாலும் நம்பிக்கையில்லாமல் இருந்த அவனுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்து விசுவாசத்தைக் கொடுத்தார். அதனால் அவன் தன்னுடைய முடமான வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்றான். ஆம். எங்களுடைய வாழ்க்கையிலும் முடமான காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன.

ஆத்துமா,ஆவிக்குரிய வாழ்க்கை முடமாய் இருக்கின்றன. நிமிர்ந்து நடக்க முடியவில்லை. மற்றவர்களைப் பார்ப்பதற்கு எங்களுடைய வாழ்க்கை அருவெறுப்பாய் இருக்கின்றது. ஆனாலும் உங்கள் முடமுள்ள வாழ்க்கையை மாற்றி நிமிர்ந்து நடத்த விரும்புகிறார். அதற்கு இன்று எல்லோரும் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். ஆம். அன்று அவன் இயேசுவை விசுவாசித்து விடுதலை பெற்றான். அதைச் சொல்பவர் யார்? இயேசு கிறிஸ்து. எங்களுடைய வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து இருக்க வேண்டுமென்றால் அவரையே முழு மனதோடு விசுவாசிப்போம்.

சி.சங்கீதா, அன்லி.இல். கூரா,லெபனான்.

## நீதியைப் பற்றி அல்லாஹ்வின் கட்டளை

**“வி**சுவாசிகளே! நீங்கள் நீதத்தின் மீதே உறுதியாக நிலைத்திருங்கள். (நீங்கள் சாட்சி கூறினால் அது) உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ அல்லது உங்கள் நெருங்கிய உறவினர்க்கோ, விரோதமாக இருந்த போதிலும், அல்லாவுக்காக (உண்மையையே) சாட்சி கூறுங்கள்.

(நீங்கள் யாருக்காகச் சாட்சி கூறுகின்றீர்களோ) அவர் பணக்காரரர் என்றாலும் சரி, ஏழை என்றாலும் சரி உண்மையே கூறுங்கள். ஏனென்றால் அல்லாஹ் அவ்விருவருக்குமே மிக்க நெருங்கியவனாக இருக்கின்றான். ஆகவே நீங்கள் (உங்கள்) இச்சைகளைப் பின்பற்றி வரம்பு மீறாதீர்கள்! (தாட்சண்யத்தையோ அல்லது குரோதத்தையோ முன்னிட்டு) நீங்கள் தவறாகச்சாட்சி கூறினாலும் (சாட்சி) கூற மறுத்தாலும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிபவனாக இருக்கிறான்.

**(சூறா 4: ஆயத்து 135)**

செல்வி செய்யது புகாரி ஸஹானா,
வாழைச்சேனை.

# கவிதைப் போட்டி இல.465

### பரிசுக்குரிய கவிதை

### அரவணைப்பு

இரண்டில் ஒன்று
அஞ்சுவதற்கு நான்
ஆசிய நாட்டுத் தலைவரல்ல
கெஞ்சுவதற்கு உங்களது
பணத்தினையும்
எதிர்பார்க்கவில்லை
மிஞ்சுவது சிலவேளை
என் உடலாகலாம்- ஆனால்
சிலவேளை எஞ்சுவது
நீங்கள் அனுப்பிடும்
உளவாளிகளின்
அஸ்தியுமாகலாம்.

ஐ.நதர்சன் - கம்பளை.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### ஐயப்பாட்டிற்கிடமில்லை

அஞ்சா நெஞ்சனே
அரபுலக நாயகனே
உன்னைச் சங்காரம் செய்ய
வல்லூறாய் வட்டமிடும்
புஷ்ஷின் எண்ணங்கள்
ஈடேற முடியாத
புஷ்வாணமாகிவிடும்
என்பதில் ஐயப்பாடும் உண்டோ?

கேக்கே-டீன்,ஏறாவூர்

### வேண்டுகோள்!

ஈழத்தின் தீ இன்னும்
அணையவில்லை- அதற்குள்
மீண்டும் ஒரு தீயை
ஏன் கொளுத்த முயலுகிறீர்?
ஐயா அதை கொஞ்சம்
கீழே போடுங்களேன்!

கிருஷ்ணன் சிவா, மஸ்கெலியா.

### வேந்தனே விழித்திரு!

அமெரிக்காவும் ஐநாவும் இங்கிலாந்தும்- ஏன்
மேற்குலக நாடுகள் மொத்தமுமாய்
திமிரோடு உனைச் சீண்டிவிட்டு - தினம்
வேடிக்கை பார்த்துக் கொண்டே,
அமைதிச் செயல், இதுவென்று- உன்
அழகு ஈராக் நகரெங்கும்
தமதாதிக்கம் நிலைபெறவே - தினம்
தருணம் பார்க்கின்றனர் விழித்திரு!

க.யோகேஸ்வரன், கஹகல்லையூர்.



### காலம், முதுமை மனசுக்கில்லை...

காலம்-
என் வயசுக்கு
முதுமையை
முகவுரை
தீட்டிக் கொண்டேயிருப்பினும்
தீட்டவில்லை- இன்னும்
முதுமையை
என் மனசுக்கு...!
இதற்கு- என்
இரும்புக்கரம்
இறுகப் பற்றியிருக்கும்
இரும்பே சாட்சி!!

எஸ்.ஏ.எம். நிலாம்,கரம்பை.

### சிந்தனை செய் மனமே...!

சமாதானத்தின் தலைவாசல்
திறந்து விட்டது-அதனால்
சமர் செய்யும் எண்ணத்தைக்
கைவிட்டு விடு
சமாதானத் தென்றலின்
சுகந்தத்தை நுகர்ந்துவிடு- முடிந்தால்
தரணியெங்கும் சமாதானம்
பூக்களாய்ச் சொரிய
இறைவனை நிதம் தொழுதுவிடு.

சஹறுல் எம்.சலாஹூடீன், உக்குவெல.

### துப்பாக்கி

பாக்கி வாங்கவெல்லாம்,
ஏந்திவிட்டால் துப்பாக்கி,
எதுக்கு உலகத்துக்கு காக்கி?
இதை நீங்கள் நோக்கி,
துப்பாக்கியை எறியுங்கள் தூக்கி.

எஸ். நவரூபன், உடப்புசல்லாவ.

### பேனாக்கள்

அன்று பேனா பிடித்தகை- இன்று
துப்பாக்கி ஏந்தி நிற்கும்
இந்நிலை,
பகைவரை மட்டும் அழித்திடின் நன்று
மீண்டும் பேனாக்களைத் துப்பாக்கியாய்
மாற்ற எண்ணா போரிடின்
அது இன்னமும் நன்று.

கே.ஸ்ரீகாந், யாழ்ப்பாணம்.

# கவிதைப் போட்டி இல.468



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 20.06.2002

கவிதைப் போட்டி இல.468
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எம் சகோதரர்கள்!

அன்று....
போர்க்களத்தில் குருதிப்புனல்
ஓடுகையில் உளம் மகிழ்ந்தோம்
எதிரிகளை அழித்த சந்தோசத்தில்!
இன்று எதிரிகளும் புரிந்துணர்வின்
மூலம் எம் சகோதரர்களாகியதால்
மனம் களிப்பில் துப்பாக்கி
வெடிக்கிறது
வானவெடி விட்டு!

ஏ.எப்.எம்.றியாட், முள்ளிப்பொத்தானை.

### வியூகம்

ஊடகங்கள் அனைத்திலும்
உளவியலாய் சமாதானப் பேச்சு
உள்ளுக்குள்ளே நடக்குது ஒரு
பெரும் போருக்கான தொகுப்பு
எம் இனத்தை ஒடுக்கவென்றே
உலக நாடுகளுடன் ஒருங்கிணைவு
இதுதான் நம் நாட்டு நடப்பு.

எஸ்.கண்ணாளன், மன்னார்.

### சவால்

வருபவர்கள் வரட்டும்
சதிகள் செய்யட்டும்
ஆட்சியினைக் கலைக்கட்டும்
எனது உயிரினை உறிஞ்சட்டும்
எதற்கும் நான் தயார்
என் துப்பாக்கியும் உஷார்

ரி.சதீஸ்குமார், அரியாலை.

### வித்தியாசமானவன்

பகட்டாய் உண்டு களித்து
பாமரர்களைப் போருக்கு அனுப்பி
வீரவசனம் பேசும் தலைவன்
நானல்ல
படைகளோடு ஒருவனாக
போரினிலே தீரம் பல செய்து
பாடையில் அனுப்புவேன்
எதிரிப்படைகளை

எஸ்.சகிலா, பண்டத்தரிப்பு.

# உங்கள் பக்கம்

## பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தின் அவல நிலை

**ப**துளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தின் கல்வித் தரமும், ஒழுக்கமும் நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது. அரசியல்வாதியும் மாநகரசபை உறுப்பினருமான அதிபர், பாடசாலைக் காரியாலயத்தில் இருப்பதே இல்லை. எமது பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகப் பேசுவதற்குச் சென்றால் எப்போதும் பாடசாலைக் காரியாலயம் மூடப்பட்டே இருக்கிறது.

இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் கூடுதலான நேரத்தைக் கதைப்பதிலேயே செலவிடுகிறார்கள். இதனால், வகுப்புக்களின் பாட நேரமும் வீணாகிறது. இது பற்றி அதிபரைத் தேடிப் பிடித்து எவ்வளவு எடுத்துக் கூறியும், அதிபருக்கு மிகவும் நெருக்கமான இவர்களின் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல், கண்டும் காணாதவர் போல் இருந்து வருகிறார். பாடசாலையின் சீர்கேடு பற்றிக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்தும் கூட கல்வி அதிகாரிகள் இது பற்றி எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

நகர மத்தியில் இருக்கும் சிறந்ததொரு பாடசாலை இந்த இழிநிலைக்கு உள்ளாகி இருப்பது கண்டு பெற்றோராகிய நாம் கவலையடைகிறோம்.

மலையகக் கல்வி பற்றி மேடை அதிரப் பேசும் ஊவா மாகாணக் கல்வி அமைச்சர் இப் பாடசாலையின் அவல நிலை பற்றி மௌனமாக இருப்பது வியப்பைத் தருகிறது.

இந்த அமைச்சரின் மகனும் இப் பாடசாலையிலேயே படித்தும் கூட, ஆளுங் கட்சி அரசியல்வாதியான அதிபரிடம் ஊவா மாகாண கல்வி அமைச்சரின் பேச்சு எடுபடாதென்றோ, என்னவோ அமைச்சர் மௌனமாக இருக்கிறார் என்று, பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

இது விடயமாக ஊவா மாகாண சபை தலையிட்டுப் பாடசாலையும் கல்வித் திணைக்களமும் இணைந்து செயற்பட்டு இப் பாடசாலையைப் பழைய முன்னேற்றகரமான நிலைக்குக் கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம். செய்வார்களா?

**மாணவர்களின் பெற்றோர் சார்பில்,**
**எஸ். ரவீந்திரன்.**

# வாசக[ர்] சாலை

நேசத்திற்குரிய முரசுக்கு,

வாரத்துக்கொரு முறை நீ என் வாசலுக்கு வந்தாலும், வசந்தங்களை அள்ளி வருவதால், ஏழு தினங்களும் இமைக்கும் கணப்பொழுதுகளாகக் கடந்து விடுகின்றன. உயிரென, உணர்வென என்னில் கலந்த முரசே! உன்னை ஒவ்வொரு தினமும் மீட்டி மீட்டி வாசிக்கின்றேன். சூடு, சுவை, சுவாரசியம் மட்டுமல்ல! சுக வாழ்வும் எனக்கு உன்னால்தான் !

எம். பாஹிம் ஷேஹ் முஹம்மத்,மாவனல்லை.

தித்திக்கும் தேன் முரசே!

முதலில் எனது வந்தனங்கள். நீ சுமந்துவரும் அனைத்து விடயங்களும் எம்மை வியப்புட்டுகின்றன. அதிலும், சிந்தியாபதில், வர்ணம் தீட்டும் போட்டி, இலக்கிய நயம். கவிதைப் போட்டி, ஸ்போர்ட்ஸ் அனைத்தும் என்னை மிகமிகக் கவர்ந்தவை. அதிலும் சென்ற வாரம் கவிதைப் போட்டியில் கவிதையால் கலக்கிய கல்முனை தில்லைநாதனுக்கு எனது சிறப்பு நன்றிகள். மேலும் உனது பணி இன்னும் பல அம்சங்களுடன் தொடர எனது வாழ்த்துக்களோடு, பத்தாவது வருடத்தில் காலடி வைத்துச் சிறப்பித்துவரும் உனக்கு எனது கோடி வாழ்த்துக்கள். நன்றி.

கே.விக்னேஸ்வரன்- நெளுக்குளம், வவுனியா.



முரசே.... மனிதன் பிறந்தான்; வாழ்ந்தான்; மறைந்தான் என்ற கோவைக்குள் வாழ்பவன். மனிதன் வாழும் போது ஏதோ ஒரு துறையில் சாதனைகளை நிலை நாட்டுவான். சாதனைகள் எத்தனையோ....

அதில் ஒன்று தன் காதலியின் நினைவிற்காக சாஜஹானால் கட்டப்பட்ட ‘தாஜ்மஹால்’ இந்த மஹான் கூட சில சந்தர்ப்பத்தில் மட்டுமே மக்களால் நினைவு கூரப்படுவார் ஆனால்...

என் தினமுரசின் தந்தை அமரர் அற்புதராஜா அவர்கள் மறைந்தாலும் தினமுரசின் ரசிகர்கள் இவ்வுலகின் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ...அங்கெல்லாம் அற்புதராஜா அவர்கள் மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆம் அவர் நிலைநாட்டிய சாதனை தான் என் ‘தினமுரசு’ எங்கள் ‘தினமுரசு’.

காலத்திற்குக் காலம் மனிதர்களின் ஸ்டைல் மாறிக் கொண்டேயுள்ளது. நடிகர் ரஜனிகாந் கூட ஒவ்வொரு படத்திற்கும் தன் ஒவ்வொரு ஸ்டைலை நடைமுறைப்படுத்தினாலும் சில மாதங்களில் ரசிகர்கள் அவற்றை மறந்து விடுவர். ஆனால் என் தினமுரசியின் ஸ்டைல் யாராலும் எந்தக் காலத்தாலும் மறக்க முடியாது அது தான். ‘சூடு’, ‘சுவை’, ‘சுவாரசியம்’ இதுவே என் ஸ்டைல் என மௌனத்தால் சாதனை படைத்துள்ளான் என் தினமுரசு.

நிந்தவூர் பாரீஸ்-அகமட் ஜிந்தா, சவுதி அரேபியா.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் புலிகள் மீது கடும் விசனம்!

## பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதாக குற்றச்சாட்டு!

புலிகள் இயக்கம் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவதாகத் தெரிவித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் கிழக்கில் இடம்பெற்ற வன்முறையின் பின்னணியில் புலிகள் இயக்கம் இருந்தது என்பதில் மறைப்பதற்கு எதுவுமில்லை என்று கூறினார்.

வன்முறையைத் தூண்டிவிட்டு அழிவுகளை ஏற்படுத்திவிட்டுச் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக இப்போது ஒற்றுமையைப் பற்றியும், இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் குறித்தும் புலிகள் பேசி வருவதாகவும் அமைச்சர் ஹக்கீம் குற்றஞ்சாட்டினார்.

'தினமுரசுக்கு' கருத்து வெளியிட்ட ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் செய்ய வேண்டிய அத்தனையையும் செய்து விட்டு இப்போது நல்ல பிள்ளையாகப் பார்க்கிறது. கிழக்கு வன்செயல்களைப் புலிகள் தான் நேரில் நின்று நடத்தினார்கள்.

புலிகளின் தேசிய தலைவருடன் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கிழக்குத் தலைமை அப்பட்டமாக மீறியமையே இன்றைய நிலைக்குக் காரணம். புலிகளின் கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி கருணாவும் அருகில் இருந்த சமயத்தில்தான் அவர்களது தேசியத் தலைவருடன் நான் ஒப்பந்தம் செய்தேன். ஆனால், அவராலேயே இன்று ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது.

தெற்கில் அரசாங்கங்கள் பலவீனப்படுவது புலிகளைப் பொறுத்தவரையில் பலவகைகளிலும் இலாபகரமான விடயம்.

அதேபோல் முஸ்லிம் தலைமை பலவீனப்பட்டு பிளவுறுவதையும் புலிகள் விரும்புகிறார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் ஏக பிரதிநிதி அல்ல, முஸ்லிம்களைக் கட்டுப்படுத்த முஸ்லிம் காங்கிரஸினால் முடியவில்லை என்பது போன்ற கருத்துக்களைப் பரப்புவதன் மூலம் புலிகள் தமது தவறுகளை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

கடந்த வாரம் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன், கொக்கட்டிச் சோலைக்குச் சென்று கரிகாலனைச் சந்திக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், நான் கிழக்குத் தலைமையுடன் பேசுவதை விட பிரபாகரனுடன் நேரடியாகப் பேச விரும்புவதாகத் தெரிவித்தேன்.

தற்போதைக்கு அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எண்ணம் எதுவும் எம்மிடம் கிடையாது. பொறுப்பற்ற விதத்தில் அவ்வாறு செய்து விட்டு அடுத்து என்ன செய்வது?

முஸ்லிம் காங்கிரஸுக்குள் உட்கட்சி முரண்பாடு என்று எதுவுமில்லை. கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விடயத்தில் அரசாங்கத்திற்குச் சாத்தியமான அளவு நெருக்குத்தலை கொடுக்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். இதனை வலியுறுத்துவதற்காகவே நாம் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்....)

## மதனராஜா எம்.பி. விடுதலை

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் யாழ்பாணம் தீவகப் பகுதியில் இடம்பெற்ற கொலை சம்பவமொன்றின் சந்தேக நபரான ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மதனராஜா பிணையில் விடுலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 1ம் திகதி வவுனியா நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைவாக 3 ஆம் திகதி கொழும்பு மேல்நீதி மன்றத்தினால் இவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## பதவி விலகுமாறு

## ரவூப் ஹக்கீம் மீது அழுத்தம்

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்தத் தவறினால் தலைமைப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற அழுத்தம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது தீவிரமாக அதிகரித்து வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்களான அதாவுல்லாஹ், முஹிதீன் அப்துல் காதர் உள்ளிட்ட குழு, தலைமைப் பதவியை விட்டு விலகுமாறு ஹக்கீமுக்குத் தீவிர அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதுடன் தலைமைக்குக் கட்டுப்படாத போக்கையும் வெளிப்படுத்தி வருகின்றது. இதன் பின்னரே ரவூப் ஹக்கீம் புலிகள் குறித்த தனது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மீது பூரண நம்பிக்கை வைத்திருப்பதாகத் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்க முடியாத நிலைக்கு ஹக்கீம் தள்ளப்பட்டுள்ளமைக்கு அதாவுல்லாஹ் குழுவினரிடமிருந்து வரும் அழுத்தமே காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ■

## நாடு முழுவதிலும் ஜனநாயகம் வேண்டும்!

## புலிகளும் அதற்கு தம்மைத் தயார்படுத்துவது அவசியம்

ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள புலிகள் இயக்கம் இனிமேல் ஒருபோதும் ஆயுதம் ஏந்தாது என்று தான் உறுதியாக நம்புவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்த சங்கரி தெரிவித்திருக்கிறார்.

ஆங்கில செய்தித்தாள் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே ஆனந்தசங்கரி இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

தற்போது ஜனநாயக வழிக்கு வந்திருக்கும் புலிகள் இயக்கம் அதன் கடந்தகால தவறுகள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு முகங்கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்ற செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த ஆனந்த சங்கரி, புலிகள் அதற்கு ஏற்றவகையில் தம்மை தயார் செய்து கொள்ள வேண்டும். இலங்கை முழுவதிலும் ஜனநாயகம் காணப்படவேண்டும். நாட்டின் ஒரு பகுதியில் மாத்திரம் ஜனநாயகமும் பிறிதொரு பகுதியில் அதற்கு மாற்றமான வழிமுறையும் காணப்பட முடியாது. இத்தகையதொரு நிலைக்கு புலிகள் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்வார்கள் என்பதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். என்றும் ஆனந்தசங்கரி அந்தப் பேட்டில் கூறியிருக்கிறார். ■

## அகதி முகாமில் அமைச்சருடன் வாக்குவாதம்

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பான விவரங்களை அறிய சமீபத்தில் அங்கு சென்ற புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கும், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பணிப்பின் பேரில் இந்தியா சென்றிருந்த புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் என்.சுபைர்தீனுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதுடன் இருவரும் இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கும், சுபைர்தீனுக்கும் தனித்தனியாக அகதிகளைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால்,இருவரும் ஒரேநேரத்தில் அகதி முகாமுக்குள் சென்றதால் இருவருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. ■

## ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் சி.ஐ.டி.யினர் தேடுதல்

யாழ். பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் இரகசியப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கொழும்பு, பார்க் வீதியில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் சோதனை நடத்தினர்.

நீதிமன்ற உத்தரவுடன் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்குச் சென்ற இரகசியப் பொலிஸ் குழு அங்குள்ள பதிவுகளைப் பரிசோதித்து விட்டுச் சென்றது.

நிமலராஜன் கொலையுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் மறைந்திருப்பதாகவும் அவரைத் தேடி சி.ஐ.டி யினர் அங்கு செல்லவிருப்பதாகவும் வானொலிகளிலும் பத்திரிகைகளிலும் கடந்த ஒரு வார காலமாகச் செய்திகள் வெளிவந்த வண்ணமிருந்தன. 'மறைந்திருக்கும்' ஒருவரைத் தேடி வரப் போவதாக ஊடகங்களில் ஏராளமான பிரசாரங்களை மேற்கொண்டு, சோதனை நடத்தவரும் நாள், நேரம் என்பவற்றையும் ஊடகங்களுக்கு அறிவித்து விட்டுத் தேடுதல் நடத்திய அதிசயமான சம்பவம் இதுவென ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார். ■

## ஆழ்கடலில் சிக்கிய ஆயுதக் கப்பல்

## பாங்கொக்கில் விசாரணைக்குழு

தாய்லாந்தின் புகட் தீவுகளில் வைத்து அந்நாட்டுப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவுவதற்கெனப் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டக் குழுவொன்று தாய்லாந்து சென்றுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தாய்லாந்தின் புகட் தீவுக்குச் சமீபமாகவுள்ள கடற்பரப்பில் வைத்து நவீன ஆயுதங்களுடன் கூடிய கப்பலொன்று புகட் தீவுப் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டது. இந்த ஆயுதக் கடத்தலில் சம்பந்தப்பட்ட முக்கிய சந்தேக நபர் ஒருவரையும் பொலீஸார் கைது செய்தனர்.

இலங்கையிலுள்ள புலிகள் அமைப்பிற்கும், இந்தோனேசிய தீவிரவாதிகள் அமைப்புகளுக்கும் ஆயுதம் விநியோகித்ததாக இந்நபர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்கள் கம்போடியா வழியாகத் தாய்லாந்துத் தீவுகளுக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து இலங்கைக்கு அல்லது இந்தோனேசியாவுக்குக் கொண்டு செல்லத் திட்டமிட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த விசாரணைகளில் கவனஞ்செலுத்துமாறு பாங்கொக்கில் உள்ள இலங்கைத் தூதரகத்திடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டிருந்தது. விசாரணைகளில் பெறப்பட்ட சில தகவல்களின் அடிப்படையில் இந்த ஆயுதக் கடத்தலுடன் புலிகளுக்குத் தொடர்பிருக்கலாம் என இலங்கை அரசாங்கம் சந்தேகிக்கின்றது. இதனால், தாய்லாந்துத் தூதரகத்திலுள்ள அதிகாரிகளுடன் கூட்டாக விசாரணைகளில் பங்கெடுக்கவெனப் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டக் குழுவொன்று பாங்கொக் சென்றுள்ளது. ■

## 2000 இலங்கையர் பங்கேற்பு

இம் மாதம் 18ஆம் திகதி கனடாவில் ஆரம்பமாகும் உலக இளைஞர் தின நிகழ்ச்சிகளில் இலங்கையைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் கத்தோலிக்கத் தொண்டர்கள் கலந்து கொள்ள விருப்பதாக ரொரண்டோ கத்தோலிக்க சபை தெரிவித்துள்ளது.

28 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இம் மாபெரும் மாநாட்டில் உலகெங்கிலும் இருந்து சுமார் மூன்றரை இலட்சம் இளைஞர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாநாட்டு நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

## முன்னாள் புலி உறுப்பினரும் மனைவியும் சுட்டுக் கொலை!

அரலகன்வில பொலிஸ் பிரிவில் உள்ள சொரிவில என்ற இடத்தில் கடந்த 6 ஆம் திகதி இரவு கொல்லப்பட்ட துரைராஜா பிரேம்தாஸ் என்ற நபர் முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர் என்றும் அவரை மீண்டும் இயக்கத்தில் சேருமாறு விடுக்கப்பட்ட உத்தரவை மீறியமைக்காகவே அவர் கொலை செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு பிரேம்தாஸும், அவரது மனைவி பரமேஸ்வரியும் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த சுமார் 25 பேர் அடங்கிய குழு ஒன்று வீட்டைச் சூழ்ந்து கைக்குண்டொன்றை வீசியதுடன் தாறுமாறாகத் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இதனால் பிரேம்தாஸும் அவரது மனைவியும் கொல்லப்பட்டனர். வீட்டில் மேலும் 3 குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தன. அவர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

பிரேம்தாஸ் பல வருடங்கள் புலிகள் இயக்கத்தில் இருந்தவர். பின்னர் அதிலிருந்து விலகி விவசாயம் செய்து கொண்டு அவரது குடும்பத்துடன் சொரிவிலவில் வசித்து வந்தார். ■

## அமைச்சர் ஹக்கீமுக்கு அனுமதி மறுப்பு

கிழக்கு மாகாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றுவதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து சபையில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

கிழக்கு நிலைமை குறித்து உரையாற்ற ஹக்கீம் எழுந்த போது, சபாநாயகர் அவருக்கு அனுமதி மறுத்தார். இதன் காரணமாக ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து செவ்வாய்க்கிழமை காலை சபை அலுவல்கள் ஐந்து நிமிட நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் தாம் அமைச்சர் என்ற வகையில் இல்லாமல் கட்சித் தலைவர் என்ற அடிப்படையிலேயே உரையாற்ற எழுந்ததாகக் குறிப்பிட்டார்

கிழக்கு மாகாண வன்முறைகள் குறித்து அரசாங்கம் அடுத்த வாரமளவில் அறிக்கை ஒன்றை வெளியிடுமெனப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சபையில் அறிவித்தார். ■

# முரசம்

## சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாத விடயங்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாத மூன்று முக்கிய விடயங்கள் கடந்த வாரங்களில் நிகழ்ந்துள்ளன.

பிரதமர் நாட்டு மக்களுக்கு தொலைகாட்சியில் தோன்றி நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கி வீழ்ந்துகொண்டிருக்கிறதெனத் தெரிவித்த விடயங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடியவையல்ல.

அதேபோல் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வெளியிட்டுள்ள யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய விபரங்களும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடியவையல்ல.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்து முடிந்திருக்கும் கலவரங்களும் அதனால் விளைந்திருக்கும் நம்பிக்கையீனங்களும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடியவையல்ல.

ஆட்சி பீடம் ஏறும்போது நாட்டைப் பொருளாதார சுபீட்சத்துக்கு இட்டுச் செல்வாரென்ற நம்பிக்கையை வழங்கிய பிரதமர், யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு அதனால் சேமிக்கப்பட்ட நிதியை பொருளாதார மீட்சிக்குப் பயன்படுத்துவாரெனக் கூறியதற்கு மாறாக, யுத்த நிறுத்தம் அமுலிலிருக்கும் போதும் பொருளாதாரம் வீழ்ந்து விலையேற்றங்கள் உச்சமடைவதை அனுமதித்திருப்பது கவலையளிக்கிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் இன்று 83ஆயிரம் ரூபாய்க்குக் கடனாளிகள் என்று அவர் உரைத்திருப்பது பெருமைப்படுவதற்குரிய விடயமல்ல. இத்தகைய கடன் பளுவின் மத்தியிலும் இன்றைய அமைச்சர்கள் பெருந்தொகையில் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வது பொறுப்பற்றதனத்தைக் காட்டுகிறது. ஆக்கபூர்வமான எந்தப் பொருளாதாரத் திட்டத்தையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்க வில்லையென்பது ஏமாற்றத்தைத் தருகிறது. இதேவேளை சமாதானத்தில் நம்பிக்கை கொண்டு பொருளாதாரச் சுமைகளைச் சகித்து வந்த மக்களுக்கு அந்தச் சமாதான முன்னெடுப்புகளே ஆட்டம் காணும் நிலைக்குச் சென்றுகொண்டிருப்பது பெரும் அதிர்ச்சியான விடயம். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இரு தரப்பிலும் பெருவாரியான யுத்த நிறுத்த மீறல்களை வெளிப்படுத்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக பெருமளவான முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன, இவை நீறுபூத்த நெருப்பாக உள்ள பதற்ற நிலைமையையே வெளிப்படுத்துவதாக உள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால் இந் நெருப்பு சிறு காற்றுக்கும் பற்றி எரியும் சுவாலையாகப் பிறிட்டுவிடலாம்.

இதேவேளை கிழக்கு கலவரங்கள் ஏற்படுத்தியுள்ள நிலைமை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் இக்கட்டுகளைத் தோற்றுவிக்கக் கூடியவகையில் முஸ்லிம்கள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. நாம் பலமான ஒரு அரசியல் தீர்வை எய்த வேண்டுமாயின் அதற்கு தமிழ் முஸ்லிம் ஐக்கியம் இன்றியமையாததாகும். எனவே நாட்டில் நிலவும் இப் பாரதூரமான நிலைமைகள் தொடர்பாக மிகுந்த அக்கறை காட்டி சீர்படுத்த வேண்டியது உடனடி அவசியம்.

இல்லையேல் நிலைமை கட்டுமீறிச் சென்றுவிடும். இறுதியில் மக்களே அதன் பலிக்கடாக்களாவார்கள்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நெருங்கிவரும் நெருக்கடிகள்
# அரசாங்கம் ஆட்டங்காணுமா?

நரன்

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகத் தன்னைச் சந்திக்க லண்டன் வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கெசனைச் சந்திக்க மறுத்துள்ளார்.

நோர்வே வழங்கிய கேள்விக் கொத்துக்கு, அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றும் வரை பதிலளிக்கப் போவதில்லையெனத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் 2 ம் திகதிக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சகல சரத்துக்களும் பூரணப்படுத்தப் படவேண்டும் என்ற காலக்கெடுவைச் சுட்டிக்காட்டி அதற்குள் அரசாங்கம் தனது உத்தரவாதங்களை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரோன் ஃபர்ஹவ்டே "ஒப்பந்தப்படி இக் காலக் கெடுவுக்குள் அரச படைகள் கோயில்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து விலகிக் கொள்வது மிகச் சிரமமான காரியம்" எனப் பரிந்துரைத்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரோன் ஃபர்ஹவ்டே வெளியிட்ட அறிக்கையில் புலிகள் 56 யுத்த நிறுத்த மீறல்களையும், அரசாங்கம் 20 யுத்த நிறுத்த மீறல்களையும் இதுவரை செய்துள்ளதாகத் தீர்ப்பளித்துள்ளதுடன் இதுவரை தமக்குக் கிடைத்த 380 முறைப்பாடுகளில் 270 புலிகளுக்கு எதிரானவையெனவும் 110 அரசாங்கத்துக்கு எதிரானவையெனவும் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகளில் 21 ஆட்கடத்தல் தொடர்பானவையெனவும், 11 தொல்லைகள் தொடர்பானவையெனவும், 7 நிதி அறவீடுகள் தொடர்பானவையெனவும் கூறியுள்ளார்.

அதேவேளை அரசாங்கத்துக்கு எதிரான முறைப்பாடுகளில் தொல்லைகள் 6, நடமாட்டத் தடைவிதிப்புகள் 6, மீன்பிடித் தடைகள் 5 எனவும் தெரிவித்தார்.

இதுவரை யுத்த நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் சுமுகமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதெனவும் பேச்சுவார்த்தையை நோக்கி நினைத்த வேகத்தை விட முன்னேற்றங்கள் நிகழ்ந்து வருகின்றனவெனவும் நோர்வே நடுவர்கள் தெரிவித்து வந்த கருத்தை இவ் அறிக்கை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இரு தரப்பும் ஒருபுறம் பேச்சுவார்த்தைக்குத் தாம் தயாரென்று வெளிக்காட்டிக்கொண்டு, மறுபுறத்தில் யுத்த நிறுத்தம் முறிவடைந்தால் தங்கள் தரப்பு நியாயங்களுக்கான தயாரிப்பாக யுத்த நிறுத்த மீறல்களை வரிசைப்படுத்தும் ஒரு போட்டியில் இறங்கியுள்ளதை இங்கு காணக் கூடியதாக உள்ளது.

இதற்கிடையில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் ஒன்றன்பின் ஒன்றாகப் பல்வேறு முரண்பாடுகள் தலைதூக்கி வருகின்றன.

வாகரைக் கடலில் கப்பல்கள் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம், திருகோணமலைக் கடலில் பயணித்த புலிகள் படகு கைப்பற்றப் பட்ட சம்பவம், புலிகளின் கடற்பயணங்களுக்கு கடற்படை அனுமதி மறுத்து வருவது, கிழக்கில் விசேட அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட சச்சரவுகள், வேலணையில் கடற்படையினரால் புலிகள் தாக்கப்பட்டதாக அண்மையில் மேற்கொள்ளப்படும் ஹர்த்தால்கள் என்பவை அதிகரித்துவரும் உரசல்களை வெளிப்படுத்துகின்றன.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒருபுறம் வைத்துவிட்டு புலிகள் மறுபடி யுத்தத்தில் இறங்காது தடுக்கும் ராஜதந்திர நடவடிக்கைகளாக, அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் பல்வேறு மறைமுக நோக்கம் கொண்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இது புலிகள் தரப்பில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் தலைவர் கூறாவிட்டாலும் பல்வேறு அடுத்த மட்டத் தலைவர்களிடமிருந்து இவ்வாறான நடவடிக்கைகள் குறித்த அதிருப்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மத்தியில்தான் அண்மைக்காலத்து அரசியல் குழப்பங்களும் தலைதூக்கியுள்ளன.

கிழக்கில் நிகழ்ந்த கலவரங்கள் இவற்றில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன.

இக் கலவரங்களையடுத்து புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் ஏறத்தாழ முறிந்த நிலைக்கு உள்ளாகியுள்ளது.

அதுமட்டுமன்றி அரசாங்கம் - முஸ்லிம் காங்கிரஸ் உறவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் உத்தரவாதம் அளிக்கக்கூடிய தகுதியை இழந்துள்ளது.

அப் பாதுகாப்புக்கு அரச படைகள் அப் பகுதிகளில் நிலைகொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

அதேவேளை அரச படைகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினடிப்படையில் பொது இடங்கள் கோயில்கள், பாடசாலைகளிலிருந்து விலக வேண்டுமென்பதை புலிகள் விடாப்பிடியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இவ் எதிர்மறையான இரு நிர்ப்பந்தங்களுக்கும் மத்தியில் சிக்குண்டுள்ள அரசாங்கம், எவ்விதத்திலும் ஒப்பந்தத்தை மீற முடியாத கடப்பாட்டை உடையதால், முஸ்லிம் காங்கிரஸின் நிர்ப்பந்தத்தை நிராகரிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது.

அதேவேளை கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் புலிகளே அச்சுறுத்தலாக உள்ளார்களென முஸ்லிம் காங்கிரஸ் மறைமுகமான வார்த்தைகளால் கடுமையாகக் குற்றம் சாட்டி வருகிறது.

இந் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் தொடர்பு கொண்ட போது, அவரைக் கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர் கரிகாலனுடன் பேசும்படி கூறப்பட்டபோதும், தான் புலிகள் தலைவர் பிரபாகரனைத் தவிர புலிகளின் இதர தலைவர்களுடன் பேசப்போவதில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கரிகாலன் முஸ்லிம் காங்கிரசை விடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் சகல முஸ்லிம்களுக்குமான ஏக பிரதிநிதியல்ல எனத் தாமே தெரிவித்துள்ளதால் தாம் ஏனைய முஸ்லிம்களுடனும் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பும் இக் கருத்தும் முஸ்லிம் காங்கிரசுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள புலிகளின் கறாரான செய்தியாகவே அமைந்துள்ளது.

இது, எதிர்வரும் பேச்சுவார்த்தைகளில், அல்லது எதிர்பார்க்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்களின் சார்பான பிரதிநிதித்துவத்தை முஸ்லிம் காங்கிரசுக்கு மறுக்கக்கூடிய நிலைமையைக் கோடிட்டுக்காட்டுகிறது.

இதேவேளை கிழக்கு மாகாணக் கலவரங்கள்

> **இந் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை ஆக்க பூர்வமான ஏதேனுமொரு நடவடிக் கையில் இறங்க வைக்க வேண்டும் அல்லது அரசாங்கத்தை விட்டு விலக வேண்டும் என்ற பெரும் நெருக்கடி முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரசுக்கு உள்ளேயே தோன்றியுள்ளது.**

தொடர்பாகவும் புலிகள் தொடர்பாகவும் அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை வலியுறுத்துகின்ற அதேவேளை தாம் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எதையும் செய்யமாட்டோமெனவும் கூறிக்கொள்கின்றனர்.

அவ்வாறான ஒன்று, வெறுமனே அரசாங்கத்தைக் கவிழ்ப்பதாக மட்டுமன்றி இன்றைய சமாதான முயற்சிகளை முறியடிப்பதாகவும் அமைந்துவிடுமெனவும், அதனால் சமாதானத்துக்குக் குழிபறித்த பழி தம்மீது விழுந்து விடுமெனவும் உணர்வதாலேயே முன்யோசனையுடன் முஸ்லிம் காங்கிரஸ் இதைத் தெரிவித்துள்ளது.

சமாதானத்தை முறியடித்த பழி முஸ்லிம் காங்கிரசுக்கு ஏற்படக்கூடாதென ரவூப் ஹக்கீம் முன்னரும் பலதடவைகள் கூறியுள்ளார்.

எனினும் முன்னர் தாமே முஸ்லிம் மக்களின் நியாயபூர்வமான பிரதிநிதிகள் என்ற கோதாவில் புலிகளுடன் செய்துகொண்ட பிரபா - ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பையும் உரிமைகளையும் உத்தரவாதப் படுத்திக்கொள்ளத் தவறிவிட்ட பழியையும் அது தற்போது சுமப்பதற்குத் தயாராக இல்லை.

இந் நிலையில் முஸ்லிம் காங்கிரஸுக்குப் பாரிய அரசியல் சிக்கல் தோன்றியுள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உகந்த வகையில் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டுமென அது அரசாங்கத்தைக் கோரியுள்ள போதும் இதற்கு நோர்வே மத்தியஸ்தர்களும் புலிகளும் இணங்கப் போவதில்லையென்றுகூறி அக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்து விட்டது.

இதுவும் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுப்பவர்களாகக் காட்ட முற்பட்டு மேலும் கையாலாகாதவர்களாகவே ஆகிப்போன நிகழ்வாகிவிட்டது.

இந் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை ஆக்க பூர்வமான ஏதேனுமொரு நடவடிக்கையில் இறங்க வைக்க வேண்டும், அல்லது அரசாங்கத்தை விட்டு விலக வேண்டும் என்ற பெரும் நெருக்கடி முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரசுக்கு உள்ளேயே தோன்றியுள்ளது.

இதன் விளைவுகள், முஸ்லிம் காங்கிரஸ் நேரடியாக இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு வழியில் அரசாங்கத்தை விட்டு விலகவே வேண்டுமென்ற உந்துதல்களையே வழங்குகின்றன.

அதனால் அரசாங்கம் கொண்டுவரவுள்ள, மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் பிரேரணை, தேர்தல் சீர்திருத்தப் பிரேரணைகள், ஜனாதிபதி மீதான, பிரதம நீதியரசர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் போன்றவற்றில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை ஆதரிக்காது போகலாம்.

இவ்வாறான முஸ்லிம் காங்கிரசின் பின்வாங்கலொன்றால் அரசாங்கம் கவிழும் நிலை ஏற்பட்டால் தமிழ் கூட்டமைப்பினர் அரசாங்கத்துக்குக் கைகொடுக்க முன்வந்துள்ளனர்.

எனினும் இந் நிலை, சந்தர்ப்பத்துக்குக் காத்திருக்கும் ஜனாதிபதிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அரசியல் சதுரங்கமாடுவதற்கான ஒரு வாய்ப்பைத் தானாகவே திறந்துவிட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ்போலவே மறுபுறம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் அதிருப்திகள் தலைதூக்கியுள்ளன.

மேல் கொத்மலைத் திட்டம் அவருக்கு ஒரு அரசியல் சவாலை முன்னிறுத்தியுள்ளது.

அதேவேளை அண்மையில் அவர் பொலிஸ் நிலையத்தில் அவமதிக்கப்பட்டதான சம்பவம் அவரது ஈகோவுக்கு ஒரு சவாலாகியுள்ளது.

இதேவேளை அரசாங்கம் மறுபுறத்தில் அவரது அரசியல் எதிராளியான சந்திரசேகரனுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதான மனக்கசப்பும் அவருக்கு உண்டு.

இதேவேளை புலிகளும், தன்னைவிட சந்திரசேகரனுக்கே அங்கீகாரம் அளித்துள்ளதென்ற மனப்பாதிப்பும் அவருக்கு உண்டு. அண்மையில் அவுஸ்திரேலியாவில் நிகழ்ந்த பொங்குதமிழ் நிகழ்ச்சியில் சந்திரசேகரனுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட அதேவேளையில் ஆறுமுகனுக்கு அழைப்பு விடப் படவும் இல்லை என்பதை இங்கு எடுத்து நோக்க முடியும்.

ஹக்கீம் போலன்றி ஆறுமுகன் பொதுஜன ஐக்கிய முன்னணியை விட்டு ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தாவியதற்கு எவ்வித அரசியல் முரண்பாடுகளும் காரணமாக இருக்கவில்லை.

அதனால் மீண்டும் அரசமைக்கும் நிலை பொ.ஐ.மு விற்கு வருமானால் ஆறுமுகன் அதற்கு மாறுவதற்கான முடிவை மிக சுலபமாகவே எடுத்துக் கொள்ள முடியும்.

இவை ஒருபுறமிருக்க, பேச்சுவார்த்தையை இனியும் இழுத்தடிக்க முடியாத நிலைமைகள் அரசாங்கத்துக்குத் தோன்றியுள்ளன.

புலிகள் தமது அதிருப்தியைப் பகிரங்கமாகவே தெரிவிக்க ஆரம்பித்துவிட்ட நிலை ஒரு துர்க்குறியாகவே எழுந்துள்ளது.

அதேவேளை நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் அசாதாரணமான நிலைமைக்கு இட்டுச் செல்கின்றன.

பிரதமரே மக்கள் முன்தோன்றி நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிபற்றி நம்பிக்கையின்மைகளை வெளிக்காட்டியதுடன் மக்கள் ஒவ்வொருவரும் எண்பத்து மூவாயிரம் ரூபாய்களுக்கு கடனாளிகளாக அறிவித்துள்ளார்.

இன்றே சமாதானம் தோன்றி துப்பாக்கி வேட்டுக் கேட்காவிடினும் நாடு 2008ம் ஆண்டு வரை கடனாளியாவுள்ளது. இதுவரையான கடன்களுக்கு வட்டியாக மாதாமாதம் 5000கோடி கட்ட வேண்டியுள்ளது.

நாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடன்தொகை ஒரு லட்சத்து அறுபத்து நாலாயிரம் கோடியாக இன்று உள்ளதென்ற தூக்கிவாரிப்போடும் செய்தியை வெளியிட்டுள்ளார்.

இத்தகைய பொருளாதார நெருக்கடி தோற்றுவிக்கப்போகும் விளைவுகள் இன்னொரு புறத்தில் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

இந் நிலையில் பொ.ஐ.மு விற்கு பல்வேறு அரசியல் வியூகங்கள் காத்திருக்கின்றன,

அவை எப்படி வெளிக் கிளம்பப் போகின்றன என்பதையே இப்போது அரசியல் அவதானிகள் உற்றுநோக்கியபடி இருக்கிறார்கள். ■

அண்டை மண்டலத்திலிருந்து

# வை.கோ.வின் தலை தப்புமா?

ஆர். கண்ணன்

தமிழகத்தில் மீண்டும் இலங்கை விவகாரம் விஸ்வரூபமெடுத்துள்ளது. இலங்கைப் பிரச்சனையில் புலிகளைத் தீவிரமாக ஆதரிப்பதைத் தவிர வேறெந்த ஆய்வையும் மேற்கொள்ளாதவரான வைகோ, தமிழக அரசின் கோபப் பார்வைக்கு இலக்காகியுள்ளார்.

ஜூன் 29ஆம் தேதி மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, வழக்கம்போல் புலிகளை ஆதரித்துப் பேசியது இப்போது பிரச்சனையாக்கப்பட்டுள்ளது. அக் கூட்டத்தில் வைகோ பேசும்போது "நான் நேற்றும் விடுதலைப் புலிகளை ஆதரித்தேன், இன்றும் ஆதரிக்கிறேன், நாளையும் ஆதரிப்பேன்" என்று பகிரங்கமாக ஆர்ப்பரித்தார்.

இதைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய உள்துறை அமைச்சர் அத்வானிக்கு வைகோவின் பேச்சைச் சுட்டிக்காட்டிக் கடிதம் எழுதினார். அதில், 'எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு, எப்போதுமே விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை இந்த மாநிலத்தில் பொறுத்துக்கொள்ள இயலாது என்று வலியுறுத்தி வந்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமாக இந்திய அரசால் அறிவிக்கப்பட்டுத் தடை செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கவே மத்திய அரசால்"பொடா" சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டே மத்திய அரசின் அதிகாரத்தையே கேள்விக்குரியதாக்கிச் சவால் விடுகிறார். வைகோவின் பேச்சு சந்தேகத்திற்கு இடமின்றி "பொடா" சட்டத்தின் பிரிவுகளின்படி குற்றமாகும். எனவே, வைகோவைக் கைது செய்வதைத் தவிர வேறு வழியில்லை,'என்று தெளிவாக, திட்டவட்டமாக ஜெயலலிதா தமது கை படக் கடிதம் எழுதி, வீடியோ ஆதாரத்துடன் மத்திய உள்துறை அமைச்சருக்கு அனுப்பிய கையோடு பத்திரிகையில் இந்த விவகாரத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

தற்போது அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவரும் வைகோ ஜூலை 12ஆம் தேதி தமிழகம் வரும்போது தமிழக அரசால் கைது செய்யப்படக்கூடும் என்ற சூழல் நிலவுகிறது.

இந் நிலையில் மத்திய அரசு தமிழக அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க.வை ஆதரிக்கவில்லை.


உள்துற அமைச்சர் அத்வானி ஒரு பேட்டியில், "இது தமிழக அரசு சம்பந்தப்பட்டது. இதில் நான் என்ன கூற முடியும்? அவர் மீதான புகார் குறித்து உள்துறை அமைச்சகத்திடம் அறிக்கை கேட்டுள்ளேன்" என்றுதான் கூறியுள்ளார். அத்வானியின் இப் பேச்சு ம.தி.மு.க வினர் மத்தியில் கலக்கத்தை உண்டு பண்ணியுள்ளது.

இந் நிலையில் ஜார்ஜ் பெர்ணாண்டஸ் தங்களை ஆதரிப்பார் என்று ம.தி.மு.க. வினர் நம்பினர். ஆனால் அவரோ, "இது சட்டப் பிரச்சனை", என்று சொல்லி ஒதுங்கிக் கொண்டார். இத்தனைக்கும் அமெரிக்காவில் இருந்து வைகோ ஜார்ஜ் பெர்ணாண்டஸுடன் தொடர்பு கொண்டு பேசினார். ஆயினும் அதில் பலனில்லை. பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் அருண்ஜெட்லியும் வைகோவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

வைகோ மீது தமிழக அரசால் முதல் தகவலறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வைகோவைக் கைது செய்யத் தமிழகக் காங்கிரசும், தமிழ் மாநில காங்கிரசும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஆனால், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி,பழ.நெடுமாறன், போன்றோர் எதிர்க்கிறார்கள். தி.மு.க.தலைவர் கருணாநிதி, வைகோ கைது செய்யப்படுவதை ஆதரிக்கவில்லை. அதே சமயம் கடுமையான எதிர்ப்பையும் காட்டிக் கொள்ளவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு சிறு கூட்டம் விடுதலைப் புலிகளை வீரர்களாக, தியாகிகளாகச் சித்தரித்துக் கொண்டே உள்ளது. ராஜீவ் கொலையுண்ட பிறகு , சிறிது காலம் பின்வாங்கி, வாய்பொத்தி அமைதி காத்த இவர்கள், மெல்ல, மெல்லத், தங்கள் ஆதரவுப் போக்கைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.



சில மாதங்களுக்கு முன்பு பிரபாகரனின் பேட்டி வெளியான போது, அதை ஜெயலலிதா கடுமையாக எதிர்த்தார். ஜெயலலிதாவின் எதிர்ப்பைக் கண்டு பொங்கி எழுந்த ஆதரவாளர்கள், சென்னை ஆனந்த் திரையரங்கத்தில் ஒரு மாபெரும் கூட்டம் நடத்திப் பிரபாகரனை வானளாவப் புகழ்ந்தும் ஜெயலலிதாவை மிகத் தரந்தாழ்ந்து விமர்சித்தும் பேசினார்கள். இதில் பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அருள்மொழி மற்றும் ம.தி.மு.க.பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இவர்களில் யாருமே, அப்போது கைதாகவில்லை.

வைகோவும் ஏதோ புதிதாகவோ, விவகாரமாகவோ திருமங்கலம் கூட்டத்தில் பேசியதாகச் சொல்ல முடியாது. இந் நிலையில் திடீரென்று வைகோவைக் கைது செய்ய ஜெயலலிதா எடுத்துள்ள முடிவிற்கு வேறு சில உள்நோக்கங்கள் இருக்கக் கூடும் என்றும் அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

ஜூன் 29 இல் வைகோ திருமங்கலம் கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதை விடக் கூடுதலாக, சில தமிழ் இயக்கங்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசி வருகின்றன. புத்தகங்கள் எழுதிப் பரப்பி வருகின்றன. இதுநாள் வரை இவர்கள் மீதெல்லாம் பாயாத "பொடா" சட்டம் வைகோ மீது மட்டும் தற்போது பாய்வதற்கு என்ன காரணம்?

.இந்த விஷயத்தில் மத்திய அரசு என்ன செய்யப் போகிறது?.என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகி உள்ளது. விசாரணைக்குக் கூட இடமின்றி ஒருவரைக் கைது செய்து சிறையிலடைக்க வழி செய்யும் "பொடா" சட்டத்தை மத்திய அரசுதான் கொண்டு வந்தது. சந்தர்ப்பவாதம் ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டு அன்று ம.தி.மு.க.வும் "பொடா"வை ஆதரித்தது. ஜனநாயக அம்சங்களைக் குழிதோண்டிப் புதைக்கும் "பொடா" போன்ற பயங்கரவாதச் சட்டம் ஆட்சியில் அங்கம் வகிப்பவர்கள் மீதே பாயக்கூடும் என்று யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. இப்போதும் கூட மத்திய அரசுக்குத் தனது ராஜ விசுவாசத்தை வெளிப்படுத்தும் வண்ணம் "பொடா" சட்டத்தை ஆதரிக்கிறோம். ஆனால் வைகோ கைதை எதிர்க்கிறோம். விடுதலைப் புலிகளைத் தீவிரமாக ஆதரிப்போம் என்று மத்திய அமைச்சர்களாக இருக்கும் செஞ்சி ராமச்சந்திரன், கண்ணப்பன் போன்றோர் கூறிவருகின்றனர். "ஆமாம் ஆதரிப்போம் என்ன செய்வீர்கள்?" என்று சவாலும் விட்டுள்ளனர்.

தமிழ் நாட்டின் ஒரு அரசியல் கட்சி, இது வரை தமிழக மக்களின் பிரச்சனைகளுக்காக வலுவாகப் போராடியதாகவோ, அக்கறை காட்டியதாகவோ வரலாறு சொல்ல முடியாத ஒரு கட்சி, விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்காகவென்றே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கட்சி உண்டென்றால் அது ம.தி.மு.க.தான்!

இந்திய அமைச்சரவையில் ஒரு அங்கம் வகித்துக்கொண்டு, இந்திய அரசால் தடை செய்யப்பட்ட அந்நிய நாட்டின் பயங்கரவாத இயக்கத்தைப் பகிரங்கமாக ஆதரித்துக் கொண்டு, ம.தி.மு.க. செயல்படுவது வியப்பு! பா.ஜ.க.இனியும் இரட்டை வேடம் போட முடியாது. ம.தி.மு.க. வை அடக்கி வைக்கவேண்டும். அல்லது தூக்கி எறிய வேண்டும். இரண்டுங்கெட்டானாக மத்திய அரசு இருந்தால் மக்கள் மத்தியில் அதற்கிருக்கும் கொஞ்ச நஞ்ச மதிப்பும் தவிடுபொடியாகிவிடும்.

வாய்ச் சவடால் விடுவதை வாடிக்கையாகவும், சந்தர்ப்பவாதத்தை மட்டுமே கொள்கையாகவும் கொண்டு வலம் வந்து கொண்டிருக்கும் ம.தி.மு.க. போன்ற கட்சிகள் இனி எப்படி ஜீவித்திருக்கப் போகின்றன? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில் அவ்வளவு பலம் மிக்க கட்சியான தி.மு.க,வே தற்போது திராணி இழந்து நிற்கும் போது ம.தி.மு.க. என்ன செய்ய முடியும்? மத்திய அரசின் ஆதரவு இல்லாவிட்டால் மறு நிமிஷமே தமிழகத்தில் மறைந்து, காணாமல் போய்விடக் கூடிய கட்சிதான் ம.தி.மு.க. எதிர்காலத்தில் அ.தி.மு.க விற்கும் பா.ஜ.க. விற்கும் நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டுவிட்டால், பிறகு தி.மு.க. வெலவெலத்துப் போய்விடும். புலிவீரம் பேசியவர்கள் கிலி ஜுரம் பிடித்து நடுங்க வேண்டியதாகிவிடும் என்பதுதான் யதார்த்தம். ●

# சீரழிந்தது பொருளாதாரமா? தார்மீக நெறிமுறைகளா?

தாகூர்

ஏற்கனவே பெற்ற இராணுவக் கடன்கள் தீர்க்கவே 8 ஆண்டுகள் செல்லும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் கவர்ச்சிகரமாக இருந்தன. இளைஞர்களுக்கு மோட்டார் சைக்கிள் வீ.சீ.ஆர் கொடுப்பதாகவும், வேலையற்ற இளைஞர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார்.

அப்படித் தெரிவித்த பிரதமரின் வாயிலிருந்து வரண்ட வார்த்தைகள் வருவதை வாக்களித்த மக்கள் விரும்புவார்கள் என்று கருதுவதற்கில்லை.

தெற்கிலுள்ள மக்கள் உண்மையில் நாட்டில் சமாதானம் உருவாகினால் மூச்சைத் திணற வைக்கும் தமது பொருளாதாரப் பிரச்சனைகளுக்குப் பாரிய அளவு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்தார்கள்.

புதிய அரசு பதவியேற்று கடந்த ஆறு மாதங்களில் 2001இன் இறுதிப் பகுதியில் "0"க்குக் கீழே, எதிர் நிலையில் இருந்த பொருளாதாரத்தை அதற்கு மேலே கொண்டு வருவதில் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் இல்லை. ஏறிக்கொண்டிருக்கும் விலை வாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சில வாரங்களுக்கு முன்னர் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன "இப்போதிருக்கும் நாட்டின் பொருளாதார நிலையில் யுத்தம் நினைத்துப் பார்க்க முடியாத விடயம்!" எனப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஜூன் மாதம் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இனப்பிரச்சனைத் தீர்வையும் நிரந்தர சமாதானத்தையும் முதலில் கொண்டு வருமாறு அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

எனவே சமாதானத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட உதவிகள் கிட்டவில்லை.

தேர்தல் வாக்குறுதிகளின் போது இரண்டு வழிகளில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்கள் கிட்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஒன்று யுத்தச் செலவினங்கள் குறைவதன் மூலம் ஏற்படும் சுமைக் குறைவு. மற்றது சமாதானத்தை வலியுறுத்தி வந்த உதவி வழங்கும் நாடுகளிடம் எதிர்பார்க்கப்பட்ட உதவி. ஆனால் துரதிஸ்டவசமாக எதிர்பார்க்கப்பட்டது போல் எதுவும் நடக்கவில்லை.

திருமலையில் இந்தியாவிற்கு எண்ணெய்க் குதங்களை வழங்குவதன் மூலமும் , அமெரிக்காவுடன் பாதுகாப்பு ,தொழில் நுட்ப ஒப்பந்தங்களின் மூலமும், இந்தியாவின் உல்லாசப் பிரயாணிகள்,யாத்திரீகர்கள் வருவதற்கான விசா கெடுபிடிகளைத் தளர்த்துவதன் மூலமும், பாரதியின் "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" கனவுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலமும் இலங்கையின் பொருளாதாரத்தை நிமிரச் செய்யலாம் என்ற முயற்சியுடன் புலிகள் சமாதானப் பாதையிலிருந்து விலகினால் சர்வ தேச சமூகத்துடன் முரண்படவேண்டிய நிலையை புலிகளுக்கு ஏற்படுத்தும் என்ற இராஜதந்திரமும் கையாளப்பட்டது.

எத்தகைய திட்டங்கள் முன் வைக்கப்பட்டாலும் அது பிரதானமாக வர்த்தக சமூகத்தின் நலன்களை முன் நிறுத்தியதாகவே இருப்பது தென்படுகிறது.

இலங்கையின் போக்குவரத்துத் துறையில் 35 வீதத்தை பிரித்தானிய நிறுவனங்களிடம் வீடுவது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது.

ச.தொ.ச, இலங்கை வானொலி, ரூபவாஹினி உட்பட சுமையாக நட்டத்திலியங்கும் இன்னும் பல சேவைத்துறைகள் - கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயப்படுத்தும் நோக்கங்கள் இருப்பது போல் தெரிகிறது.

உண்மையில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள சேவைத்துறைகள் என்று சொல்லப்படுபவை கெடுபிடி நிறைந்தனவாகவும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துபவையாகவும், மனத்தாங்கலை ஏற்படுத்துபவையாகவுமே அமைந்துள்ளன.

தனியாரிடம் கையளித்த பிறகு சேவைகள் நன்றாக இருப்பினும் பணத்தை உறிஞ்சும் நிலை காணப்படுகிறது. ஏனவே பெரும்பான்மையான எமது கிராமப்புற மக்கள் இவற்றின் சேவைகளை, நினைத்துப் பார்க்க முடியாத நிலை காணப்படுகிறது.

பெரும்பாலும் நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தினரை மையப்படுத்திய பொருளாதார நடவடிக்கைகளே. கிராமப்புறத்தின் ஏழை எளிய மக்களைக் கண்டு கொள்ளவில்லை.

கிராமப்புற பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் மானியக் கொடுப்பனவுகளை நிறுத்துவதை ஆட்சேபித்து ஊர்வலம் நடத்தியபோது யாழ்ப்பாண மாணவர்கள் கனவான்கள் போல் நடந்து கொள்கிறார்கள். அவர்கள் இப்படியான கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்துவதில்லை, அவர்கள் கனவான்கள் போல் நடந்து கொள்கிறார்கள் என்று அமைச்சர் ரவி கருணநாயக்க தெரிவித்தார்.

சமுர்த்தியை தொடர்ந்து இயக்குவதில் உள்ள கஷ்டத்தை பிரதமர் தனது உரையில் சூசகமாக தெரிவித்தார். யுத்தத்தின் கொடுரங்களின் நிழலிலிருந்து இன்னும் விடுபடாத வடக்குக் கிழக்கு மக்களின் உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டது. வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் வெறுங்கை முழம் போட்டது போல்தான்.

நிதியமைச்சர் சொக்ஸி எரிபொருள் விலை குறைப்பையும், மருந்துப்பொருட்களுக்கு முற்று முழுதாக வரி விதிப்பளிப்பது பற்றியும், இந்தியாவிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யப்படுவதால் விலை குறையும் சாத்தியத்தையும் தெரிவித்துள்ளார். யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படாவிட்டால் இதுவும் சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

கிராம மக்கள் உயிர் வாழ்வதற்கான நிபந்தனைகளாக பாணையோ அல்லது உலர் உணவையோ உறுதிப்படுத்திக்கொண்டு, சமூகத்தின் மேலடுக்குகளில் உள்ளவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் நிலை காணப்படுகிறது.

வடக்குக் கிழக்கில் பொங்கு தமிழ் நிகழ்வுகளோ கட்டாய வரி வசூல்களோ சாதாரண மக்களின் வாழ்க்கையில் எத்தகைய செழிப்பையும் ஏற்படுத்தவில்லை.

கிழக்கில் சமூகத்தின் கணிசமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இளைஞர், யுவதிகள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அபரிமிதமான கட்டாய வரி விதிப்புக்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் சமூகத்தை நம்பிக்கையிழக்கச் செய்துள்ளன.

அடிமைச் சமுதாய காலத்தில் ஆண்டான்களுக்கு, அடிமைகளை விற்பதற்கும், வாங்குவதற்கும், கொல்வதற்கும் உரிமை இருந்தது.

இதனால் அடிமைகள் உயிர்வாழ்க்கையிலோ அல்லது உழைப்பிலோ நம்பிக்கையற்றிருந்தார்கள்.

சமுதாயத்தில் தலையெடுப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லாத நிலையில் வடக்குக் கிழக்கின் ஜீவாதாரமான பொருளாதார நடவடிக்கைகள் மரணப்படுக்கையில் உள்ளன.

மொத்தத்தில் நாடு பூராவும் சராசரி மனிதர்களின் நலன்கள் முதலில் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும்.

கொழும்பு நகர வீதிகளை அடைத்துக் கொண்டு பல லட்ச ரூபா பெறுமதியான வாகனங்கள் நகர முடியாமல் திணறுகின்றன.

கிராமப்புறங்களில், யுத்தப் பிரதேசங்களில் மனிதர்கள் பங்கிட்டு உணவிற்கும் வேறு ஜீவாதாரத் தேவைகளுக்கும் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

பாரபட்சங்களை ஒரேயடியாகக் களைய முடியாவிட்டாலும் பாரிய ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளிக்கக் கூடாதல்லவா?

பல்கலைக் கழக மாணவர்கள் பொலிசாருடன் வீதிச் சண்டையில் இறங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கக் கோரியும், கல்வியைத் தனியார் மயப்படுத்துவதை எதிர்த்தும் போராட்டம் நடத்துகிறார்கள்.

இதில் சில நியாயங்கள் இருக்கின்றன. சர்வதேச பாடசாலைகளில் கற்ற, இந்த நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஒரு அணியும், இலங்கை அரசின் பாடசாலைகளில் பல்கலைக் கழகங்களில் சுயமொழியில் கல்வி கற்று புதிய நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாத, வேலைவாய்ப்பின்றி அலைகின்ற ஒரு அணியும் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தேசிய இனங்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மாத்திரமல்ல மொத்த சமுதாயத்திலும் வளங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் ஜனநாயகம் வேண்டும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரை சமாதானமும், இனப்பிரச்சனைத் தீர்வும் பொருளாதார நெருக்கடியும் ஒன்றையொன்று சார்ந்தே இயங்குகின்றன. பரஸ்பரம் இனசமூகங்களின் உரிமைகளை அங்கீகரிப்பதிலேயே இந்த நாட்டின் வாழ்வு தங்கியிருக்கிறது. ஏனெனில் யுத்தம் இந்தச் சின்னஞ் சிறிய நாட்டின் மனித உயிர்களை மாத்திரம் காவு கொண்டுவிடவில்லை. நாட்டின் பொருளாதாரத்தையும் விழுங்கிக் கொண்டிருக்கிறது.

சட்டவிரோத பொருளாதாரக் கட்டமைப்பான பாதாள உலகமும் படிப்படியாக வளர்ச்சியுற்று வருகிறது. கூலிக்கு ஆட்களைக் கொல்வது, கடத்தல், கொள்ளை அதிகரித்துள்ளன.

சேவைத்துறையான போக்குவரத்து எரிச்சலூட்டுவதாகவும், பொதுமக்களை வெறுப்பதாகவும் காணப்படுகிறது. அதில் பிரயாணம் செய்பவர்களையும் பிரயாணம் செய்யாத சாதாரண பாதசாரிகளையும் அச்சுறுத்துவதாய் அமைகிறது.

பொலிஸ் துறையில் கிரிமினல்களும், பாதாள உலகக் கோஷ்டியினரும் அதிகரித்திருப்பதாக பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஒருவர் தெரிவித்துள்ளார். பொலிஸ்துறை செல்லரித்துப்போயிருப்பதையே, நோய் கண்டிருப்பதையே இந்தக் கூற்றுகள் காண்பிக்கின்றன.

உண்மையில் இலங்கையின் பொலிஸ் துறை சிறிதளவு மரியாதையைத்தானும் பொதுமக்களுக்கு வழங்குவதில்லை. அது சேவைத் துறை என்பதற்கப்பால் பொதுமக்கள் மீது அதிகாரம் செலுத்தும் கெடுபிடி அமைப்பாகவே காணப்படுகிறது.

இதனால் தான் பொதுமக்கள் சில சந்தர்பங்களில் சட்டத்தைத் தமது கையில் எடுக்கிறார்கள். அண்மையில் தென் பகுதிப் பொலிஸ் நிலையமொன்றில் ஒரு பெண் மோசமான முறையில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக ஆங்கிலப் பத்திரிகைகளும் எலக்ட்ரோனிக் ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தன.

சபுகஸ்கந்தையில் கைது செய்யப்பட்ட ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டதன் எதிரொலியாக பொதுமக்கள் பொலிஸ்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வீதிவிபத்துக்களின்போது மக்கள் சாரதிகளுக்குத் தண்டனை வழங்குவதோடு வாகனங்களைச் சேதப்படுத்துகின்றனர்.

சட்டம் ஒழுங்குத்துறையில் மக்கள் அறவே நம்பிக்கை இழந்ததன் விளைவாகவே இவ்வாறு பிரதிபலிப்புக்களைக் காட்டுகிறார்கள் என்பது மனோவியல் அறிஞர்களின் கருத்து.

கிழக்கில் நடைபெற்ற சம்பவங்களில் பரவலாக பொலிஸ் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இலங்கையில் நேரடி பொருளாதார அச்சுறுத்தல் எழுந்துள்ளது மாத்திரமல்ல சேவைத் துறைகள் என்று சொல்லப்படுபவையும் அவற்றின் உண்மையான அர்த்தத்தை இழந்துள்ளன.

நீதித்துறை, சட்டம், ஒழுங்குத்துறை, சுகாதாரசேவை, கூட்டுறவுத்துறை, கல்வி போன்றனவற்றில் தீவிர மாற்றத்தையும் பெரும்பாலான வர்களுக்கான ஜனநாயகத்தையும் கோரி நிற்கின்றன.

இவற்றுக்கு துறைசார் நிபுணர்களின் பங்களிப்பு அவசியம் பெறப்படவேண்டும். அரசியல்வாதிகளின் கண்ணோட்டத்தில் மாத்திரம் அணுக முற்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

ஏனெனில் கடந்த இரண்டு தசாப்த காலத்தில் அரசியல் வன்முறையும் அடிதடி ஆள் அம்பு முறையும் அதிகரித்துள்ளன.

பொதுமக்களுக்குச் சேரவேண்டிய வசதிகள் சேவைகள் நிதி ஆதாரங்கள் என்பன மேலிருந்து கீழ் நோக்கி வரும்போது இடைவழியில் ஆங்காங்கே வழிப்பறிக்கு உள்ளாகித் தரங்குறைந்தவை அல்லது சொற்பமானவை அல்லது வெறுங்கைகள்தான் பொதுமக்ளை நோக்கி நீழுகின்றன.

நாகரிகமான அரசியல் சமூகப் பண்பு ஏற்பட, பிரதானமாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படப் பொதுமக்கள் சார்ந்த மாற்றங்கள் கோரிக்கைகள் எழுகின்றன. அவற்றைச் சரியாகப் புரிந்து கொள்பவர்கள் மாத்திரமே இந்தச் சூழ்நிலையை வெற்றிகொள்ள முடியும்.

விளம்பரப் பகுதி


# NAVEEN CERAMIC

தரமான

Wall Tiles, Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்*



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka.

Tel : 345197-8 Fax : 335637
Dir : 543256 Mobile : 077-383313
*E-mail- naveence@srilanka.net.*

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



**VIDEO PALACE**

புதிய தமிழ், ஹிந்தி, ஆங்கிலப் படங்கள் (VCD, VHS) வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.

H.L.G.4, DIAS PLACE, GUNASINGHAPURA, COLOMBO-12.



## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.

☎ 067-50349



**Wedding** PHOTOGRAPHER

No. 27/23A, Madampitiya Road, colombo-15.

Stills Vinoth 077-321345

TEL: 527933



தரச் சிறப்பு வாய்ந்த, பழையதும், மிகப் புதியதுமான தமிழ், ஹிந்தி, ஆங்கில VCD, Audio CD, DVD மற்றும் Audio Cassets களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**CD WORLD**

No.618, Galle Road, Kollupitiya, Colombo-03.
Tel :- 581412 Fax :- 074-718152

**கிளை**

No. 505, Galle Road, Wellawatte, Colombo-06.
Tel :- 554481



கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்து விரும்பிய வகையிலான பிறேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்



விழி உங்களிடம்
அதன் ஒளி
எங்களிடம்

**அப்பலோ ஒப்ரிசியன்**

(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

**APPOLO OPTICALS**

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena, Colombo-13.
T.P: 074-610459



## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி
அப்பு: 0065-975 14 941
e-mail: lingam_wedding@hotmail.com



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754



YOUR VICTORY IS OUR SUCCESS



# STUDY IN...

**LONDON, USA, CYPRUS NEW ZEALAND, CANADA, SINGAPORE, IRELAND, AUSTRALIA & JAPAN**

All Courses Available in any field
Basic Qualifications
-G.C.E. (O/L)

Authorised University agent in Sri Lanka

*Visas!!! Visas!!! Visas!!! Visas!!! Visas!!!*

**PERMANENT RESIDENCE VISAS**

NEW ZEALAND/CANADA/AUSTRALIA


A great opportunity for those who are with.
Three (3) years Bachelor's degree/ Diploma / Trade Certificate
Three (3) years work experience.
for FREE Assessment contact the right place

**M.S. Lanka**
**Recruitment & Travels (Pvt.) Ltd.**
(Immigration and Educational consultancy division)
379 2/2, (2nd floor), Galle Road, Wellawatte, Colombo-06
(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)
Tel: 074-513442, 074-517836, 074-518928, 074-519157, Fax: 074-518928
Mobile: Mr. Mansoor 077-374314, Miss. Chathurika - 077-672084
Miss. Thusanthini - 077-480943
E-Mail: mslanka@visual.lk web site: http/www.mslanka.com



# Migrate

*Legally to NEW ZEALAND AUSTRALIA & CANADA*





Now Rules Relaxed.
New Regulations Proposed.
50,000visas per year to NZ
85,000 to Australia,
225,000to Canada.
Famous Consultants since 1987
Well recommended by satisfied clients.
Low professional free.
Excellent 24hrs.service.

For Free Consultancy Contact:

**IEMC Global Group (pvt) Ltd.**
287, Havelock Road.(Near Redimola Junction)Colombo-6
Tel: 595801,598870,077-743370 Fax: 559766



## மலையாள மாந்திரிக வசியம்




உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்தும் தோல்வியா? நிம்மதியில்லையா? உங்கள் ஆசைகள் நிறைவேறவில்லையா? இதோ உங்களுக்கு ரிஷிகள் கையாண்ட மாபெரும் மலையாள மாந்திரிக சக்தி கவசம் என் கையில் உண்டு. கணவன்,மனைவி பிணக்குத் தீர்ந்து சுகபோக வாழ்வு பெற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் கைகூட, தீரா நோய் தீர, குழந்தைப் பாக்கியம் கிட்ட, திருமணம் நடக்க, கல்வியில் பெறுபேறு கிட்ட, குபேர வாழ்வு பெற, அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகக் கணிப்பு என்றுமே பிழைத்ததில்லை. நடப்பது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, இன்று,இந்த மாதம், இந்த வருடம் உங்களுக்கு எப்படி எனத் தெரிந்து அறிந்து செயல்பட ஜாதக ரீதியாகவும், கைரேகை ரீதியாகவும், காண்ட அடிப்படையிலும் அன்றன்றாட நிகழ்வுக்குத் தக்கவாறு அனுசரித்துச் செயற்பட மலையாள மாந்திரிக சித்தர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P அவர்களைச் சந்தியுங்கள். வெளிநாட்டவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. மாந்திரிக சக்திக்குப் பெருமிதம் எமது 39 வருட சேவையே! இவ்வரிசையில் நாம் ஒருவரே!

**இனி என்னைப் பற்றி**

அன்றன்றாடு அருள் சக்தி வழங்கிவரும் அம்மன் துர்க்கையின் அருள் அவ்வப்போது எனக்குக் கிடைக்கின்றது. இவைகளை ஒட்டியே இந்தச் சோதிட மலையாள மாந்திரிக நிறுவனம் ஒரு மாபெரும் P.K.SAMY ASSOCIATE (PVT) LTD வரையறுக்கப்பட்ட நிறுவனமாகச் செயல்படுகின்றது. இதையொட்டியே வாங்கும் பணத்திற்கு ரசீது வழங்குகின்றோம்.

★ அதி விசேஷமாக வெளிநாட்டவர்களுக்கு ஏனோதானோ என்றில்லாது அவர்களின் எண்ணங்களை எண்ணியவாறு செயல்திறனைக் காட்டியதனாலேயே அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசீர்வாதக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன.

★ உண்மைச் சேவை என்பதால் எனக்குப் பேராசிரியர் பட்டம் தந்தார்கள். கலாநிதி பட்டம் கிடைத்தது. அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்தார்கள். கருணாகர பூசணம் பட்டம் கிடைத்தது. பங்களாதேசத்தில் சோதிட ஆராய்ச்சித்துறையில் என்னை அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள். இதற்குக் காரணம் எனது உண்மையான, மனச்சாட்சிக்கு விரோதமற்ற சேவையே! இனி உங்கள் குறை என்ன?



**இத்துறையில் விசா, மாஸ்டர் கார்ட் வசதி மற்றும் இன்ரர்நெட், வெப் சைட், ஈ மெயில், ஃபக்ஸ் வசதிகள் எம்மிடம் மாத்திரமே உண்டு.**

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. நுவரெலியாவில் மாத்திரமே கிளைக் காரியாலயம் உண்டு.

**கொழும்பில்**

162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் வீதி
(லிட்டில் ஃப்ளவர் பாலர் பாடசாலைக்கு முன்),
கொழும்பு-13.
தொலைபேசி: 466271, 466571, 342463, 466620, 431137, 466820
தொலைநகல்: 00941-344831

**நுவரெலியாவில்**

33, டெய்லி ஃபெயார் கொம்பிளெக்ஸ்,
கண்டி வீதி, நுவரெலியா.
தொலைபேசி: 052-22508, 35097, 23093, 23336, 23570
தொலைநகல்: 00945-235097
ஈ.மெயில்: drpksamy@sltnet.lk
வெப் சைட்: www.imexpolanka.com/drsami

அலசுவது-இராஜதந்திரி

# அதல பாதாளத்தில் பொருளாதாரம்!

இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தை எட்டியிருப்பது குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸியும் நாட்டு மக்களுக்கு அறியத் தந்துள்ளனர்.

அரசியல் ரீதியான சவால்களை மட்டுமல்ல, பொருளாதார ரீதியான பிரச்சனைகளையும் அணுகத் தெரியாத நிலையிலேயே இலங்கையின் ஆட்சியாளர்கள் எக்காலமும் இருந்து வருகின்றனர்.

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த போது ஆசியாவில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு நிகரான பொருளாதார நிலையைக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியிலேயே பொருளாதார மேம்பாட்டுக்காக அனைத்துத் துறைகளிலும் பலமான அடித்தளம் போடப்பட்டிருந்தது.

நெடுஞ்சாலைகள், பெருந் தோட்டங்கள், போக்குவரத்து, விமான நிலையங்கள், துறை முகங்கள், மின்சாரம், நீர் விநியோகம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், வர்த்தகம் போன்ற ஒரு தேசத்தின் பொருளாதாரக் கட்டமைப்புக்கான அத்திவாரத்தை பிரிட்டிஷ்காரர்களே போட்டிருந்தனர்.

பிரிட்டிஷாரின் ஆட்சி இலங்கையில் அஸ்தமனமான போது, அவர்களால் அழகாகக் கட்டியெழுப்பப்பட்ட இலங்கை, குறுகிய கண்ணோட்டங்களைக் கொண்ட இலங்கையரிடம், குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்தது போலவே கையளிக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் இன்றுவரை இலங்கையின் ஆட்சியாளர்கள் இத் தேசத்தின் சுபீட்சத்துக்கு எத்தகைய காரணிகள் அடிப்படையானவையோ அக் காரணிகளையே ஆட்டங்காண வைப்பவர்களாகவே செயற்பட்டு வருகின்றனர்.

பொருளாதார மேம்பாடு, அதனோடிணைந்த மானிட மேம்பாடு போன்றவற்றைக் கருத்தில் கொள்வதை விட, குறுகிய இனவாதப் போக்கிற்கே, இலங்கையின் ஆட்சியாளர்கள் முக்கியத்துவமளித்திருந்தனர்.

இதன் காரணமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட இன்றைய தலைமுறை இலங்கையர்கள் அனைவரும் பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய சமாதான - சகவாழ்வைக் கொண்ட ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக, நிறையவே விலை கொடுக்க வேண்டியோராகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினது அரசாங்கத்தின் சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தை எட்டியிருப்பதையே, கடந்த வாரம் பிரதமர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் மூலம் அறிய முடிந்திருந்தது.

சுதந்திரமடைந்த கால கட்டத்தில், இலங்கையில் காணப்பட்ட பொருளாதார வளங்களைப் பேணி, அவற்றைக் கால மாற்றங்களுக்கேற்றாற் போலக் கையாள முடியாதவர்களாக இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்கள் இருந்தனர்.

1970ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டு வரை அரசாண்ட சிறிமாவோ அரசாங்கம் மிக மோசமான கட்டத்துக்கு நாட்டை இட்டுச் சென்றிருந்தது.

இதன் பின்னர் 1977 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கம் புதிய பொருளாதாரத் திட்டங்களை முன் வைத்தது. சிங்கப்பூரைப் போல இலங்கையை மாற்றப்போவதாகவும் ஜே.ஆர்.சூளுரைத்தார்.



அவரது ஆட்சியின் போதே திறந்த பொருளாதாரத் திட்டமென்ற அடிப்படையில் பல்வேறு கைத்தொழில், வர்த்தக நடவடிக்கைகளுக்குத் திட்டமிடப்பட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள், தொழிலதிபர்கள் இலங்கை மீது தமது கவனத்தைத் திருப்பினர்.

ஆனால் ஜே.ஆரின் "சிங்கப்பூர் கனவு" தோன்றிய வேகத்திலேயே மறைந்து போயிருந்தது.

பொருளாதாரத்தை விரிவாகக் கட்டியெழுப்ப ஜே.ஆர். திட்டமிட்டார். ஆனால் அதற்குரிய அத்திவாரமான அரசியல் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்த அவர் தவறியிருந்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது பற்றி நிறையவே திட்டங்களைப் போடலாம். உலக நாடுகளின் உதவிகளையும் பெறலாம்.

ஆனால், அடிப்படைப் பிரச்சனையாக இருக்கும் இனப்பிரச்சனை தீராதவரை இலங்கைக்கு எவ்விதத்திலும் விமோசனம் ஏற்படப் போவதில்லை.

1983ஆம் ஆண்டு முதல் இலங்கையின் இனப்பிரச்சனை ஒரு புதாகரமான போக்கை எட்டத் தொடங்கியது.

இராணுவ ரீதியான வளர்ச்சியே இலங்கையின் பொருளாதாரத்தை இன்று குட்டிச் சுவராக்கி விட்டுள்ளது.

கடந்த இருபது வருட காலத்தில் படிப்படியாக அதிகரித்து வந்த இராணுவத்துறைக்கான யுத்த செலவினம் தற்போது எல்லை கடந்ததாக இருக்கின்றது.

இராணுவ பலத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் இனப் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண முடியுமெனக் கடந்த கால ஆட்சியாளர்கள் கருதினர். ஆனால் இராணுவ ரீதியான அணுகுமுறை வடக்கு- கிழக்கைச் சீரழித்து விட்டுள்ள அதே சமயம் முழு நாட்டையும் மீள முடியாத கடனாளியாக்கிவிட்டுள்ளது.

பாதுகாப்புச் செலவினங்களின் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து கடனாகப் பெற்ற தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு இக்கட்டான நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இரு பெரும் சவால்களைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகி இருக்கின்றது.

அரசியல் ரீதியாக இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண வேண்டியுள்ள அதே சமயம், நாட்டின் பொருளாதாரப் பிரச்சனையையும் கையாள வேண்டியிருக்கின்றது.

அரசியல் சர்ச்சையும், பொருளாதாரப் பிரச்சனையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகவே இருக்கின்றன.

இவ்விரு பிரச்சனைகளையும் வேறுபடுத்தி நோக்க முடியாத நிலையிலேயே நாடு இருக்கின்றது.

கடந்த ஆறு மாத காலமாக நாட்டில் யுத்தமற்ற சூழல் இருந்து வருகின்றது. இதன் காரணமாக நிலவும் சுமுக நிலைவரம் நாட்டு மக்களை ஓரளவு நிம்மதியாக மூச்சுவிட வைத்துள்ளது. இருப்பினும் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் பற்றிய தீர்க்கமான முடிவுகள் காணப்படாத நிலையில் ஓர் இனம் புரியாத பீதி மக்களிடையே நிலவுவதையே உணர முடிகின்றது.

ஆறு மாத கால யுத்த நிறுத்தம் கொண்டு வந்துள்ள சுமுக நிலை தறிகெட்டுப் போயுள்ள பொருளாதார நிலைவரத்தை உற்று நோக்குவதற்கான வாய்ப்பைக் கொடுத்துள்ளதுடன் மீளவும் ஒரு காத்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிரந்தர சமாதானமே இன்றியமையாத தென்பதைத் தெளிவுபடுத்தியுமுள்ளது.

கடந்த வாரங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்,அவரைத் தொடர்ந்து கே.என். சொக்ஸியும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்த விடயங்கள், இன்றைய பொருளாதார நிலவரத்தின் அவல நிலையைச் சுட்டிக் காட்டியிருந்தனவென்று குறிப்பிடுவதை விட, எதிர்காலத்தில் ஒரு குழப்ப நிலை ஏற்படும் பட்சத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி மறைமுகமாக எச்சரிப்பதாகவும் இருந்தனவென்றே கருத முடியும்.

கடந்த இரு தசாப்த கால யுத்த அனர்த்தத்தினால் தோன்றிய பாதிப்புக்கள் இலகுவில் மறைந்து விடக் கூடியவையல்ல. உயிரிழந்தோர், ஊனமுற்றோர், சொத்து சுகங்களை இழந்தோர் என்ற பட்டியல் வெகு நீண்டதாகவே இருக்கின்றது.

இலங்கையின் இன்றைய அரசியல் தீர்வு முயற்சிகளில் சர்வதேச சமூகம் நேரடியாகவே அக்கறை காட்டி வருகின்றது. கடந்த காலங்களில் உலக நாடுகள் இலங்கைக்குத் தாராளமாக உதவிகளை வழங்கின. இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களிலும் அக்கறை காட்டின. ஆனால், உதவி வழங்கும் நாடுகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல இலங்கையில் அபிவிருத்தியோ அல்லது அமைதியோ ஏற்படவில்லை.

இந் நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தோல்வியைத் தழுவுமேயானால் உள்நாட்டில் நிலைமை மோசமடையும் அதே சமயம், வெளிநாட்டு உதவிகளும் பொருளாதார ரீதியாகக் கிடைக்காமல் போகும் துரதிஷ்ட நிலையே தோற்றம் பெறும்.

இலங்கையைப் பொறுத்தவரை மீளவும் ஒரு யுத்தத்துக்கு முகம் கொடுக்க முடியாது.

அத்துடன் இனப்பிரச்சனையை இழுத்தடித்து, காலங் கடத்தி மீளவும் அரசியல் கண்ணாமூச்சி ஆட்டங்களையும் ஆட முடியாது.

எனவே இலங்கையின் ஒரு பரந்துபட்ட பொருளாதார மேம்பாடென்பது சமாதானத்துடன் கூடிய இனப்பிரச்சனைத் தீர்விலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது.

இந்த உண்மை நிலையை, பொருளாதாரக் கஷ்டங்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் நாட்டு மக்களுக்கு விளக்குவதாகவே பிரதமர், நிதியமைச்சர் ஆகியோரின் கடந்த வார உரைகள் விளங்கியிருந்தனவென்று கருத முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



கிழக்கில எல்லா முஸ்லிம்களையும் கட்டுப்படுத்தத் தங்களால ஏலாதெண்டு முஸ்லிம் காங்கிரஸ் சொன்னதுக்குப் பதிலடியா எல்லாத் தரப்பு முஸ்லிம் பிரதிநிதிகளையும் கூட்டிப் பேசியிருக்கினம் ரெண்டெழுத்தார். பிரபாவைத் தவிர வேற எந்தப் புலித் தலைவரையும் சந்திக்க மாட்டானெண்டு ஹக்கீம் சொல்லியிருக்கிறார். பிரபாவும் சந்திக்காட்டில்..... வட் டு டூ?

முஸ்லிம் பெண்களும் ஆயுதம் கேக்கிறார்களெண்ணிறார் ஹக்கீம். ஆக, சமாதானத்தை அடைய எல்லாருக்கும் ஆயுதம்தான் தேவைப்படுகுது... என்று தணியுமிந்த ஆயுத மோகம்...?

இக்கட்டான நேரத்தில தொலைக்காட்சி விவாதத்துக்குப் போய் மாட்டிக்கொண்டார் சம்பந்தர். அவர் என்னத்தைச் சொன்னாரோ அதுக்கு முழுக்க முழுக்க எதிர்மாறா மற்றப்பக்கத்தில ஹக்கீம் சொல்ல... இவர் கப் சிப். தேவையா இது?

நாட்டு மக்களெல்லாரும் கடன் காரரெண்டு ரணில் முதல்நாள் தூக்கிவாரிப் போட மற்ற நாள் சொக்ஸி வந்து விலைகள் சிலது குறையலாமெண்டு மென்று விழுங்கிறார். நான் அடிக்க நீ ஒத்தடம் குடுவெண்டு சொல்லி வைச்சிட்டு வந்து பேசினமாதிரியிருக்கு. தலையை அடகுவைச்சாச்சு, வாலைத் தூக்கிக் காட்டிறதில என்ன புண்ணியம்? அதுசரி ஜனாதிபதித் தேர்தலில வேலையில்லாத இளைஞர்களுக்கு 2ஆயிரம் ருபா குடுப்பனெண்டு ரணில் சொன்னாரே, புருடா எண்டிறது இதத்தானோ?

பிரஜா உரிமை பெறாத மலையகத் தமிழரை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பிறதுதான் வழியெண்டிறார் ஒரு அதிகாரி. உட்துறை அமைச்சர் அதை மறுக்கிறார். பொலிசுக்க கிரிமினல்களும் பாதாள உலகத்தாரும் பலம்பெற்றிருக்கிறதா ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சொல்ல பொலிஸ்மா அதிபர் மறுக்கிறார். என்னங்கடா இது, சனம் எதை நம்புறது எதை விடுறது...?

தம்பியுடையான் படைக்கு அஞ்சானெம்பாங்கள். எந்தப் படைக்கு அஞ்சி சனாதிபதி தன்ர தம்பியையே தனக்கு ஆலோசகரா நியமிச்சிருக்கிறாவோ...? பிளட் இஸ் திக்கர் தேன் வாட்டர் எண்டிறது இதுதான் பாருங்கோ.

சட்டம் யாவருக்கும் சமன். நடுச் சாமத்தில குடியும் குட்டியுமா வண்டியோட்டி அக்ஸிடென்ட் பட்டவர் எயார் மார்ஷலா இருந்தாலும் சட்டம் சமன் தானா எண்ட ஒரு சோதனை சட்டத்துக்கு வந்தது. கடைசியில சட்டம்தான் வெண்டது. சபாஷ்.


யாழ்ப்பாணத்துக்கு 24 மணத்தியால மின்சாரம் வழங்கிறதுக்கு அரசாங்கம் எடுத்த அக்கறையைப் பாராட்டாமல் இருந்தால் நான்தான் நயவஞ்சகன். இது யாழ் மக்களின்ர வயித்தில (மின்சாரமல்ல,) பால் வார்த்த மாதிரி! மக்கள் சார்பாக அரசாங்கத்துக்கு ஒரு தேங்ஸ்!

வைக்கோவுக்கு வலை விரிச்சிருக்கிறா தமிழ்நாட்டு அம்மா. புலியை வலைவீசிப் பிடிச்சாலும் எலியப் பிடிக்க ஏலாது. எலி தப்புதா வலை தப்புதா எண்டத இருந்து பார்த்திட்டாப் போச்சு.

தன்ர நாட்டு சனாதிபதியா வாறதுக்கே பெரும் வாக்குக் குழப்பங்களெல்லாம் செய்ய வேண்டியதாயிருக்க, புஷ், இன்னொரு நாடான பாலஸ்தீனத்துக்கு யார் தலைவரா இருக்க வேணுமெண்டு தீர்ப்புச் சொல்ல வெளிக்கிட்டது ரெம்ப ட்டூ மெச்! நாளைக்கு யாரை யார் கலியாணம் செய்ய வேணுமெண்டும் சொல்லுவார் போல இருக்கு..... பி கெயர் புல்!

# ஒருபடிமேல்நீந்து

சீனாவின் பீஜிங் நகரத்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலை சற்று வித்தியாசமானது. அங்குள்ள சிங்கங்களுக்கும் புலிகளுக்கும் உணவளிப்பதற்காக உயிருடன் மாட்டையும் பன்றியையும் அங்கு வரும் உல்லாசப் பிரயாணிகள், விலைக்கு வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்தக் கொடுமையைப் பார்வையாளர்கள் சுற்றிவர நின்று ரசிக்கிறார்களாம். படத்தில் உல்லாசப் பயணிகளால் விலைக்கு வாங்கப்பட்ட மாடு ஒன்று சிங்கங்களுக்கு இரையாகப் போகப் போகிறது. மாட்டைச் சுற்றிச் சிங்கங்கள் உண்பதற்குத் தயாராக நிற்கின்றன. பார்வையாளர்கள் ரசிக்கிறார்கள். இது கொடுமையிலும் கொடுமை!



## இருதயம் இடம்மாறித் துடிக்கின்றது

உடலில் உள்ள ஏதாவது ஒரு உறுப்பு இடம் மாறிய நிலையில் குழந்தைகள் பிறப்பது இன்று சாதாரண விடயமாகிவிட்டது. ஆனால், இந்தியாவில் பிறந்த ஒரு பெண் குழந்தையின் இருதயம் உள்ளிட்ட முக்கிய உடலுறுப்புகள் இடம் மாறிக் காணப்படுகின்றன.

பெங்களூர் சிவண்ணஹள்ளியைச் சேர்ந்தவர் கே.எம்.மகேந்திரா. இவரது மனைவி சவிதாவுக்கு ஜூன் 21ஆம் திகதி முதலில் ஆண் குழந்தையும் அடுத்து பெண் குழந்தையும் பிறந்தன. மணிகண்டா, ஜோலமணி என்று பெயரிட்டனர். பெண் குழந்தை ஜோலமணி பிறந்ததிலிருந்து அழாமல் இருந்தது. இது டாக்டர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதனால் ஜோலமணியை 'ஸ்கேன்' எடுத்துப் பார்த்தனர். அப்போது இருதயம், கல்லீரல், மண்ணீரல் ஆகியவை இடது பக்கத்தில் இருப்பதற்குப் பதிலாக



வலது பக்கம் இருப்பது தெரிய வந்தது.

'ஸ்கேன்' கருவியில் ஏதாவது கோளாறா என்று சந்தேகப்பட்ட டாக்டர்கள் மற்றொரு கருவியில் 'ஸ்கேன்' எடுத்துப் பார்த்து உறுதி செய்து கொண்டனர்.

இது போன்று 20 லட்சத்தில் ஒரு குழந்தை பிறக்கும் என்று மருத்துவமனை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சில குழந்தைகளுக்கு ஒரே ஒரு உறுப்பு இடம் மாறியிருக்கும் சம்பவம் நடந்துள்ளது. ஆனால், கல்லீரல், மண்ணீரல் ஆகியவை இடம் மாறி இருப்பது குறித்துக் கேள்விப்பட்டதில்லை என்று டாக்டர்கள் அதிர்ச்சி தெரிவிக்கின்றனர். ஜோலமணியுடன் பிறந்த மணிகண்டா ஆண் குழந்தை நலமாக உள்ளது. ஜோலமணியும் இயல்பான குழந்தையைப் போலவே உள்ளது. 'எக்ஸ்-ரே' சோதனையில் ஜோலமணியின் பெருங்குடல் சிறிதே பாதிப்புக்குள்ளாயிருப்பது தெரியவந்தது. உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்து அது சரி செய்யப்பட்டது.

"முக்கிய உறுப்புகள் இடம் மாறியிருப்பதால் குழந்தைக்கு எப்பிரச்சனையும் இருக்காது. ஒரு உறுப்பு மட்டும் மாறியிருந்தால் ரத்த ஓட்டம் தடைப்படும். ஆனால், இந்தக் குழந்தைக்கு முக்கிய உறுப்புகள் அனைத்தும் மாறியிருப்பதால் பிரச்சனை இல்லை" என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மகேந்திராவுக்கு உறவுப் பெண் சவிதா. இதனால் இது போன்ற மரபணுக் குறைபாடுகள் ஏற்பட்டு, குறைபாட்டுடன் குழந்தை பிறந்திருக்கலாம் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். ●

## அண்ணனின் காதலால்....



வழக்கு விசாரணைகளில் வழங்கப்படும் விசித்திரமான தீர்ப்புக்கள் குறித்து ஏராளமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மிருகத்தனமான தீர்ப்புக்கள் குறித்து அறிந்திருக்கிறீர்களா?

இச் சம்பவம் மிகவும் கொடுமையானது. மானிடவர்க்கம் வெட்கித் தலைகுனிய வேண்டியது.

அருகில் உள்ள படத்தில் தனது உடலை முழுமையாக மறைத்துக் கொண்டு அமர்ந்திருக்கும் 14 வயது யுவதியின் பெயர் சலீமா. அருகில் இருப்பவர் அவரது தாய். சலீமாவின் குடும்பம் பாகிஸ்தானின் பஸுன்ந் மாகாணத்தில் உள்ள எல்லைப்புற கிராமமான வீரமாலா ஜாகோன் என்ற இடத்தில் வசித்து வந்தது. சலீமாவின் தந்தை இறந்து விட்டார். வயதுக்கு வந்த ஒரு அண்ணன் இருந்தான். பெயர் ஹுசேன். ஜாகோன் கிராமம் மிகவும் பின்தங்கிய பகுதி. பாகிஸ்தான் அரசின் நீதி பரிபாலனத்தில் இருந்து பெரும்பாலும் விடுபட்டுப் போன பிரதேசம். பழங்குடி சமுகங்கள் அறிவீனத்தின் உச்சியில் நியாய தர்மங்களை மீறி வாழ்க்கை நடாத்தும் ஒரு சமுக அமைப்பில்தான் சலீமாவும் வாழ்ந்து வந்தாள். குலம், கோத்திரம் என்ற பாகுபாடுகள் இந்தப் பகுதிகளில் அளவுக்கு அதிகமான ஆக்கிரமிப்பைக் கொண்டிருந்தன.

சலீமாவின் அண்ணன் ஹுசேன், அவனது குலத்தைச் சாராத உயர்குடி யுவதி ஒருவருடன் காதல் கொண்டான். அவர்களது இரகசியக் காதல் நீண்டநாள் நீடிக்கவில்லை. விரைவிலேயே ஊருக்குத் தெரிந்து போனது. ஊர் வழக்கப்படி குலம் தவறிக் காதலிப்பது கடுமையான குற்றம். அங்கே காதல் என்பது உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல. முற்றிலும் கோத்திரங்களின் கௌரவத்தோடு தொடர்புபட்ட சமாச்சாரம்.

உயர்குலப் பெண்ணுடனான காதல் பகிரங்கமானதும் சலீமாவின் அண்ணன் ஹுசேன், தனது காதலுக்குத் தண்டனையாகத் தன்னைக் கல்லால் அடித்துக் கொன்று விடுவார்கள் என்ற உயிர்ப் பயம் காரணமாகத் தலைமறைவாகி விட்டான். சந்தேக நபர் இல்லாமலேயே வழக்கு பஞ்சாயத்து விசாரணைக்கு வந்தது.

ஹுசேன் இல்லாத நிலையிலே, அவனது காதல் குற்றத்தின் மீதான விசாரணை நடாத்தப்பட்டது. அவனால் காதலிக்கப்பட்ட பெண் விசாரணை செய்யப்பட்டாள். உயர் குடியைச் சேர்ந்தவள் என்பதால் அவள் நிரபராதியானாள். ஒட்டு மொத்தக் குற்றமும் ஹுசேன் மீது சுமத்தப்பட்டது. அண்ணனுக்குப் பதிலாகத் தங்கை, அதாவது சலீமா தண்டிக்கப்பட வேண்டும் என்று ஊர் பஞ்சாயத்துத் தீர்ப்பு வழங்கியது.

அவர்கள் தீர்ப்பில் சொன்ன தண்டனைதான் கொடுமையானது. அதாவது உயர் குலத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் ஒரே நேரத்தில் சலீமாவை வல்லுறவுக்கு உட்படுத்த வேண்டும் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

வழக்கின் தீர்ப்பு சலீமாவுக்கு அறிவிக்கப்பட்டது. தண்டனையை நிறைவேற்றும் நாளும் தெரியப்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் தாயும் மகளும் வீட்டில் இருந்த சமயம் கடந்த ஜூன் 22 ம் திகதி காலை சலீமாவின் வீட்டுக்குப் பஞ்சாயத்துத் தலைவர்கள் சகிதம் சென்ற 6 உயர்குல வாலிபர்கள் சலீமாவைக் கதறக் கதறப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள். பக்கத்து அறையில் இருந்து அழுவதைத் தவிர சலீமாவின் தாயால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

இந்தச் சம்பவம் தற்போது பாகிஸ்தானில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளது. அந்நாட்டு உயர் நீதிமன்றம் தனது இயலாமையை வெளிப்படுத்திப் பொலீஸார் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் படம் ஜூலை 3 ம் திகதி எடுக்கப்பட்டது.

(படம் - ராய்ட்டர்)

# பழையன தேவை




சீன அரசாங்கத்தில் பதிவு செய்யாமல் நடத்தப்பட்டு வந்த இன்டர் நெட் கஃபே ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் அண்மையில் 24 பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்துச் சட்டவிரோத இன்டர்நெட் பாவனைத் தளங்கள் அனைத்தையும் மூடிவிட அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. சீனாவில் சுமார் 30 இலட்சம் பேர் இன்டர்நெட்டைப் பயன்படுத்துகிறார்கள். கம்பியூட்டர்கள் அதிக விலை என்பதால் பெரும்பாலான மக்கள் இன்டர்நெட் கஃபேக்களின் உதவியையே நாடுகிறார்கள். சீனாவில் பழைய கம்பியூட்டர்களுக்கும் நல்ல கிராக்கி நிலவுகிறது. பழைய கம்பியூட்டர்கள் வாங்கப்படும் என்ற விளம்பரத்துடன் பெங்ஜின் வீதிகளில் காத்திருக்கும் வர்த்தகர்களையே இங்கு காண்கிறீர்கள்!



## பதவிப் பிரமாணம்

இத்தாலிக்குச் சமீபமாக இருக்கும் வத்திக்கான், உலகில் மிகச் சிறிய நாடு. பரிசுத்த பாப்பரசர் வசிப்பதால் வத்திக்கானுக்கு ஏகப்பட்ட பிரபல்யம். ஆனால், பாப்பரசருக்கான பாதுகாப்பை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புக் குழு ஒன்றுதான் வழங்கிவருகிறது. 1527ஆம் ஆண்டு மே மாதம் ரோமானிய சாம்ராஜ்ஜியம் நடாத்திய படையெடுப்பொன்றின் போது அப்போதைய போப்பாண்டவரின் பாதுகாவலர்கள் 142 பேர் கொல்லப்பட்டனர். தற்போது 93 பேர் பாப்பரசரைப் பாதுகாக்கின்றனர். அனைவரும் சுவிஸ் நாட்டவர்கள். இவர்கள் றோமன் கத்தோலிக்கர்களாகவும் திருமணம் செய்யாதவர்களாகவும், 1.74 மீற்றருக்கு மேல் உயரமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது வத்திக்கான் விதி! பாரம்பரிய உடையணிந்த பாதுகாப்பு வீரர் ஒருவர் பாப்பரசரிடம் பதவிப் பிரமாணம் செய்துகொள்கிறார்

## கோபம்




அமெரிக்க எதிர்ப்புணர்வு மத்திய கிழக்கைத் தாண்டித் தென் கிழக்காசியா முழுவதிலும் தீவிரமாக வளர்ந்து வருகிறது. பிலிப்பைன்ஸிலும் இந்தோனேஷியாவிலும் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்புகளை வெளியேறுமாறு கோரி அந்த நாட்டவர்கள் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஜப்பானின் ஓகினாவா என்ற இடத்தில் இருக்கும் அமெரிக்கத் தளம் கடந்த காலங்களில் கடும் கண்டனத்துக்கு இலக்காகியது. தென்கொரியாவிலும் அமெரிக்க இராணுவம் நிலை கொண்டுள்ளது. அங்குள்ள அமெரிக்க இராணுவத் தளத்தில் படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது இராணுவ கவச வாகனம் மோதியதில் கொரிய பாடசாலை மாணவிகள் இருவர் பலியாகினர். இந்தச் சம்பவத்தினால் ஆத்திரமடைந்த தென்கொரியப் பிரஜை ஒருவர் அமெரிக்க இராணுவத் தளத்தின் பெயர்ப் பலகையை உடைத்தெறிவதையே இங்கு காண்கிறீர்கள்.

## பார்த்த ஞாபகம் இல்லையோ...? 07



குட்டி நடன மணியாக, பி.யூ சின்னப்பா நடித்த "ஜகதலப் பிரதாபன்" படத்தில் மிகச் சிறப்பாகப் பாம்பு நடனமாடி இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றவர் பேபி (குமாரி) கமலா. பரத நாட்டியத்தில் தனக்கென ஒரு தனிப் பாணியை வகுத்துக் கொண்ட கமலா" நாம் இருவர்", "வேதாள உலகம்", போன்ற திரைப்படங்களில் சிறுமியாகத் தோன்றினார். பராசக்தியிலும் நடனமாதாக வருகிறார். 'ஓ... ரசிக்கும் சீமானே வா... ஜொலிக்கும் உடையணிந்து' என்ற பாடலுக்குக் கமலா ஆடிய பாங்கு தனிச் சிறப்பானது.

கவிஞர் கண்ணதாசனின் "சிவகங்கைச் சீமை"யில் கமலாவின் பாத்திரமே கதாநாயகி எனக் கருதப்படலாம். இப் படத்தில் சிதைவுற்றுக் கிடக்கும் கோட்டை, கோபுரங்களைப் பின்னணியாகக் கொண்ட களத்தின் மீது அவர் ஆடும் ஊழிக்கூத்து மிகவும் அபாரமானது.

இந்தியாவில் பரதக் கலையில் உச்சாரக் கொம்பில் சஞ்சரித்த கமலா, கேலிச் சித்திரக்கலையில் (கார்ட்டூன்) உச்சியில் நிற்கும் ஆர்.கே.லட்சுமணன் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். ஏனோ இருவருக்கும் மன(மண)ப் பொருத்தம் சரிவரவில்லை. இருவரும் பிரிந்துவிட்டனர். கமலா மறுமணம் முடித்து தனது கணவருடன் கொழும்பு மாநகரிலும் சில வருடங்கள் வாழ்ந்தார்.

கமலா இந்தியாவில் தயாரான பிறமொழிப் படங்களிலும் தோன்றி நடனமாடியிருக்கிறார். திரை உலகை விட்டு மறைந்தாலும் அவர் புகழ் நிலைத்து நிற்கிறது.

எம். என். ராஜம். இவர் கலைவாணர் என்.எஸ்.கே.யின் கலைக்கூடத்தில் சேர்ந்து "நல்லதம்பி" படத்தில் சிறுமியாகத் தோன்றினார். பலதரப்பட்ட படங்களில் உப கதாநாயகியாகத் தோன்றி மனதைக் கவர்ந்தவர். "இரத்தக் கண்ணீர்" படத்தில் கதாநாயகியாகத் தோன்றி நடிகவேள் எம். ஆர். ராதாவுக்கு ஈடு கொடுத்து நடித்தார்.




எம்.ஏ திருமுகம் இயக்கத்தில் உருவான "உத்தமி பெற்ற ரத்தினம்" படத்தில் இவ்வாறு தோன்றுகிறார். பல குணசித்திரப் பாத்திரங்களை ஏற்றுத் திறம்பட நடித்த எம். என். ராஜம் இப்போது திரையுலகை விட்டு வெளியேறி விட்டார். சில சின்னத்திரை (தொலைக்காட்சி)த் தொடர்களில் தோன்றியுள்ளார்.

பின்னணிப் பாடகர் ஏ.எல். ராகவனைத் தன் மணாளனாக வரித்துக் கொண்டவர் ராஜம்.



50-60ஆம் ஆண்டுகளில் தமிழ்த் திரையுலகில் தன்னிகரற்றவர்களாகப் பவனி வந்த தாரகைகள், வரிசையாக நிற்பது டணால் தங்கவேலு. "பகிர்ந்தளிக்கத் தயாராக வைத்திருக்கும் கரும்புகளைச் சுவைப்பதற்காகத்தான் " என்று எண்ணிவிடாதீர்கள். "வணங்காமுடி" திரைப்படத்துக்காகத்தான்.

சிவாஜி கணேசன் இப்படத்தில் சிலை வடிக்கும் சிற்பியாகத் தோன்றுகிறார். மன்னன் மகளாக சாவித்திரி. சிவாஜியின் தாயாக கண்ணாம்பா. இப் படத்தில் இடமிருந்து வலமாக கே.ஏ. தங்கவேலு, சிவாஜி கணேசன், ராஜசுலோசனா கண்ணாம்பா மற்றும் சாவித்திரி ஆகியோர் நிற்கின்றனர்.




# கண்களின் மகிமை சொல்லவா...

கண்ணழகு, உதட்டழகு, இடையழகு, தொடையழகு என்று சினிமா நட்சத்திரங்களின் ஏதோ ஓர் அழகு பிடித்துப் போனதால்தான் அவர்களின் பரம விசிறிகளாகி விடுகிறார்கள் ரசிகர்கள். சரி, அந்த நடிகர்-நடிகைகள் தங்களிடம் உள்ள எந்த அம்சத்தை ரசிக்கிறார்கள்? பெரும்பாலானவர்கள் தங்கள் கண்கள்தான் ரசிக்கத் தக்கவை எனக் கூறுகிறார்கள்.



**மீனா:**

என்னைப் பொறுத்தவரை எல்லாருக்கும் என்கிட்டே பிடிச்ச விஷயம் என் கண்கள். அதுதான் எனக்கு அழகுன்னு நினைக்கிறேன். என்னைப் பார்க்கிற எந்த ரசிகரும் என் கண்களை ரசிப்பதைப் பார்த்திருக்கிறேன். நான் விரும்பி ரசிப்பதும் அதைத்தான்.



**ரோஜா:**

என் கண், மூக்கு, இதழ்கள் மூணுமே அழகுதான். மூக்கும் முழியுமா இருக்கிற பொண்ணுதான், தங்களோட படத்துக்கு வேணும் என்று 'செம்பருத்தி'க்குத் தேடியபோது என்னை அவர்களுக்குப் பிடிச்சுப் போச்சு. கண் நல்லா இருக்கு, உதடு நல்லா இருக்கு என்று என்னைத் தெரிவு செய்தார்கள். இத்தனைக்கும் காரணமான மூக்கும் முழியும் உதடும்தான் எனக்கு அழகாகத் தெரியும்.



**பாபிலோனா:**

நான் என்னதான் கிளாமரா நடிச்சாலும் என்னை நேரில் பார்க்கிறவங்க உங்களின் கண் நல்லா இருக்கு. ரொம்ப கவர்ச்சியாக இருக்கு. கண்டி இழுக்குது என்பார்கள். அவ்வளவு பாராட்டுக்கும் சொந்தமான என் கண்கள்தான் எனக்குப் பிடித்தமான அம்சம்.




**சுவலட்சுமி:**

மனித உடம்பில் எல்லாவித உணர்ச்சி பாவங்களையும் காட்ட முடிகிற பகுதி கண்கள் மட்டும்தான். வெண்மை நிறத்துக்குப் பல அர்த்தம். இடத்துக்கு இடம் மாறுபடும். அதே போல பார்வையில் பல பாஷை பேச முடியும். அப்படிப்பட்ட கண்கள் என்னோட ப்ளஸ் பொயிண்ட்.



**சங்கவி:**

எனக்கு எது அழகுன்னு சரியா சொல்லத் தெரியலை. ஆனா என்கிட்டே பல பேர் உங்க உதடுகள் நல்லா இருக்கு. சிரிப்பு நல்லா இருக்குன்னு சொல்வாங்க. அந்தச் சிரிப்புக்குச் சொந்தமான உதடுகள்தான் எனக்கு அழகு.



**ஜோதிகா:**

என் பெயரைச் சொன்னாலே ரசிகர்களுக்கு [illegible] வரும் விஷயம் துறுதுறுப்பு [illegible] கண்கள் "குறும்பான முக்கு" சிரிப்பு என்று என் முக பாவத்தை ரசிப்பவர்கள்தான் அதிகம். கட்டான கவர்ச்சியான உடலமைப்பு என்னுடையது என்று சொல்ல முடியாது. ஆகவே எனக்குப் பிடித்ததே எனது முகம்தான்.



**ஷர்மிலி:**

நான் என்னதான் கிளாமர் பண்ணி நடிச்சிருந்தாலும் என் சிரிப்பு பல பேருக்குப் பிடிச்சிருக்கு. தெற்றுப்பல் இருக்கிறதால, உதடு ஒரு பக்கம் ஏறி இறங்கி இருக்கும். இது பார்க்க அழகா கவர்ச்சியா குழந்தை மாதிரி இருக்கிறதா ரொம்பப் பேர் சொன்னதுண்டு. எனக்குப் பிடிச்சது என் கோணல் உதட்டுச் சிரிப்புதான்.



**மந்த்ரா:**

என்கிட்டே எனக்குப் பிடிச்சது என் சிரிப்புதான்.

எனக்கு ரசிகர்களா இருக்கிறவர்கள் இதை எதிர்பார்த்து இருக்க மாட்டார்கள். ஒருத்தரை ரசிக்கிறதில் ஆளாளுக்கு ஒரு விதம். ஒரு பார்வை. எனக்கு என்கிட்டே பிடிச்சது என் அழகான உதடுகள். அதில் மலரும் புன்னகை வசீகரமா இருக்கில்லை?



**விக்ரம்:**

என் ப்ளஸ் பொயிண்ட்னு என் கண்களைத்தான் சொல்வேன். என் கண்களைச் சரியா பயன்படுத்த 'சேது'வில கத்துக்கிட்டேன். 'தில்'லில் ஆக்ரோஷத்தை கண்ணில் காட்டினேன். 'காசி'யில் ஜீவனற்ற கண்கள். இப்படி நடிப்பின் ஒரு பகுதியை வெளிப்படுத்த உதவும் என் கண்கள்தான் நான் விரும்பும். ரசிக்கும் அழகு!



**அஜித்:**

இதுக்கு நேரடியாக என்னால சரியான பதில் சொல்லத் தெரியலை. எனக்கு எது அழகென்று, மற்றவர்கள் சொன்னால்தான் சரியா இருக்கும் என்று தோணுது. ஒன்பது ஆபரேஷனுக்குப் பிறகும் இந்த அளவுக்கு ஓடியாடி உழைக்க முடியுது. அதற்குக் காரணம் பிளக்கலா என்னோட உடம்பின் ஃப்ளக்ஸிப்பிலிட்டி. அதுதான் என்னோட பலம்!



**சூர்யா:**

நடிக்கிற போது கண்களைச் சரிவர உபயோகப்படுத்தவில்லை. பாதி நடிப்பு வந்தது மாதிரித்தான். 'நந்தா'வில் வசனமே இல்லாமல் பாலா சார் என் கண்களைப் பேச வச்சிருப்பார். உங்க பார்வை பவர்புல்லா இருக்கு. யூஸ் பண்ணுங்கன்னு பலபேர் சொல்லியிருக்காங்க. ஷாருக்கான் போல் சரியாக யூஸ்பண்ணுங்கன்னு சொல்றாங்க. இவ்வளவுக்கு பிறகும் எனக்கு எது அழகு என்று கேட்கிறீங்களா...?

# புதுமுகங்கள்...

புதுமுகங்கள் கதாநாயக[illegible] 'பாய்சன்', சித்தார்த், ரிஷவர் இ[illegible] இண்டர்நேஷனல் பிலிம்ஸ் வழ[illegible] கதாநாயகிகளாக ராகசுதா[illegible] நிஷாவும் நடிக்கிறார்கள். இவர்[illegible] சின்னிஜெயந்த், பாண்டு, வெ[illegible] மூர்த்தி மற்றும் பலர் நடிக்கிற[illegible] மர்மங்கள் நிறைந்த இத[illegible] சினிமாஸ்கோப்பில் உருவாகி[illegible] முழுவதும் கிராஃபிக்ஸ் ஜால[illegible] விளையாட இருக்கிறதாம். இ[illegible] அமெரிக்க நிபுணர்களை வர[illegible] துள்ளனர். கதை, திரைக்க[illegible] வசனம் எழுதி இயக்குபவர் [illegible]




## முகப்பில்

விஜய் (படம்: யூத்)

சம்யுக்தவர்மா (படம்: தென்காசிப் பட்டணம்)

## ரமணாவுக்[illegible]

'ரமணா' படத்தில் வி[illegible] ரமணாவுக்கு அடுத்து [illegible] என்பது சஸ்பென்ஸ் [illegible] போகிறாராம் கேப்டன். [illegible] கதை என்ன? யார் டைரக்[illegible] வரக் காரணம்? இரண்டு [illegible] ஜூலை ஏழு. படம் வெற்[illegible] பெறுவதற்காகத்தான் [illegible] வைக்கவில்லை சினிமா [illegible]

## சிலி[illegible]

தொப்பை [illegible] உடம்பை வளர்த்து [illegible] 'ராஜா' படத்தில் ஜோ[illegible] உடற் பயிற்சி செய்து உட[illegible] மார்க்கெட்டைத் தக்க வைத்துக் கொ[illegible] என்பது இப்போதாவது 'ஜோ'வுக்குப் பு[illegible]

## பாலா இயக்கத்தி[illegible]

'சேது', 'நந்தா' ஆகிய படங்களை இயக்கிய டைரக்ட[illegible] கமலஹாசனை வைத்து ஒரு படத்தை எடுக்கவுள்ளார்.

'சேது' மூலம் விக்ரமையும் 'நந்தா' மூலம் சூர்யாவையும் வெளி[illegible] வந்த பாலா அடுத்து இந்த இரண்டு ஹீரோக்களையும் வைத்து[illegible] படத்தை எடுக்கவுள்ளார்.

படத்திற்கான கதை ரெடியாகி விட்டதாம். விரைவில் ஷூட்டி[illegible] இந்நிலையில் கமலஹாசனை வைத்தும் ஒரு [illegible] ளார் பாலா.

இதற்கிடையே சம்ப காலமா[illegible] ளாக நடித்துக் கொ[illegible] டும் ஒரு வித்[illegible] நடி[illegible]



நடி[illegible] வள[illegible] வித்த[illegible] இளை[illegible] காட்சி[illegible] கிறது.

* கன[illegible] வர் ராஜு[illegible] ஜோடியாக [illegible]

* வித்தியா[illegible] படம் 'சாமி'. [illegible] விக்ரமுக்கு [illegible] றார்கள்.

* மும்தாஜுக்[illegible] என்று யாரோ போ[illegible] நேராகப் போனா[illegible] அதிகமான கொ[illegible] கொண்டாராம்.

* இதுவும் மும்தா[illegible] டன் பகையை வளர்த்[illegible] நெருக்கமாகி விடுவா[illegible] ஷிப்பை வளர்த்துக் கொ[illegible]

சினி விசிட்

## விஜய்க்கு வந்த ஆசை

சினிமா நடிகர்கள் பலரை இருந்த இடம் தெரியாமல் செய்த 'அந்த' ஆசை விஜய்க்கும் வந்து விட்டது. அதாவது டைரக்டராகும் அந்த ஆசை.

விரைவிலேயே ஒரு படத்தை இயக்கிப் பார்த்து விட வேண்டும் என்ற தீவிர முடிவில் இருக்கிறாராம் இளைய தளபதி.

படத்தை இயக்குவதற்கு முன்பு பல விஷயங்களைக் கற்றுக் கொண்டு வருகிறாராம் விஜய். ஷூட்டிங்கின் போது கிடைக்கும் ஓய்வு நேரங்களில் அவர் சும்மா உட்கார்ந்து விடுவதில்லை.

தொழில் நுணுக்கங்களை ஆர்வமாகக் கற்று வருகிறார்.

ஆசை நல்லதுதான் 'அவுட்' ஆகாமல் இருந்தால் சரி.

# திரையுலக மறுபக்கம் 239

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## ன் 'பாய்சன்'

அறிமுகம் ஆகும் படம் ...ம் கதாநாயகர்கள். ஜேஜே. ...படத்தில் ...யில் ...தவிர, ...ஆடை ...படம் ...படம் ...னி

## இளமை துள்ளும் ஷெரின்

'துள்ளுவதோ இளமை' படத்தின் ஹீரோயின் ஷெரின். இப்போது இவர் 'ஜெயா', 'விசில்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இந்த பெங்களூர் பெண் நடித்த கன்னடப் படம் ஒன்றும் ரிலீசுக்கு ரெடியாக இருக்கிறது. தமிழ்ப்பட ஹீரோயின்களில் பேசப்படும் நடிகையாகவும் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வருகிறார். ஷூட்டிங்கில் டைரக்டர் சொல்வதை அப்படியே பிக்கப் செய்வதில் கெட்டிக்காரப் பெண்ணாம். இதற்கெல்லாம் நடிகையின் துள்ளும் இளமைதான் காரணம்.



## ரப்பரின் பிடியில் முன்னாள் 'மிஸ் மெட்ராஸ்'

எப்படி வேண்டுமானாலும் உடலை வளைக்கும் ரப்பர் நடிகரின் பிடியில் கடைசியாகச் சிக்கியிருப்பவர் முன்னாள் 'மிஸ் மெட்ராஸ்' இந்தி 'திரி' நடிகை தற்போது தமிழ்த் திரைப்படம் ஒன்றில் நடித்து வருகிறார்.

கவர்ச்சியால் ரசிகர்களைக் கதிகலங்க வைக்கும் அந்த நடிகையும், ரப்பரும் அடிக்கடி சென்னை புறநகர் ஹோட்டல் ஒன்றில் சந்தித்துக் கொள்கிறார்களாம்.

'முனீஸ்வரா' படத்தில்தான் இந்த அழகி கவர்ச்சி நாயகியாக வலம் வருகிறார். இந்தப் படத்தின் காட்சி ஒன்று சமீபத்தில் பெங்களூரில் எடுக்கப்பட்டது. ஷூட்டிங்கிற்காக இரண்டு நாள் முன்னதாகவே பெங்களூர் கிளம்பிவிட்டார் 'திரி'. ரப்பருக்கு அங்கே ஒரு வேலையுமில்லை. ஆனால் ஏற்கனவே ஒப்பந்தமாகியிருந்த கால் ஷீட்டை கேன்சல் பண்ணிவிட்டு பெங்களூர் பறந்தார்.

முக்கிய புள்ளிகள் மட்டுமே தங்கும் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடிகைக்கு விருந்தளித்தார் ரப்பர். ஹோட்டலின் நீச்சல் குளத்தில் இருவரும் புரிந்த மன்மத லீலைகளைப் பார்த்துவிட்டு வந்த சென்னை வாசி ஒருவர் விஷயத்தை, தமிழ் சினிமா வட்டாரங்களில் பற்ற வைத்துப் போட வயிற்றெரிச்சலில் இருக்கிறார் 'திரி'.

ரப்பருக்கு ஏற்ற விதங்களில் எல்லாம் 'வளைந்து கொடுக்கும்'போது எதைப் பற்றியும் சிந்திக்காதவர் விஷயம் ஊர் முழுக்கப் பரவியதும் எதிர்காலத்தைப் பாழாக்குகிறார்கள் என்று பத்திரிகைக்காரர்களைத் திட்டித் திரிகிறார்.

## ப் பின்...

...சமான செட்டப் விஜயகாந்துக்கு. ...ருக்கு என்ன படம் பண்ணப் போகிறார் ...லை 7 ஆம் திகதி புதிய படத்துக்குப் பூஜை போடப் ...கேப்டன் சினி கிரியேஷன்ஸின் மூன்றாவது தயாரிப்பு இது. ...பது படு ரகசியமாம். பூஜை தேதி மட்டும் முன்னரே வெளி...ருக்கு முன்பு 'வல்லரசு' படத்துக்குப் பூஜை போட்ட நாள் ...மாக அமைந்து வசூல் அள்ளியது. புதிய படம் வெற்றி ...தேதியைத் தேர்ந்தெடுத்தார்களாம். கேப்டனையும் விட்டு ...டிமெண்ட்!

## ...மான ஜோதிகா

...று பெயரெடுக்கும் அளவு, வத்தல குண்டு சைஸில் ...ந்த ஜோதிகா இப்போது சிலிமாகி விட்டார். ...உடல் இளைத்து அழகாகக் காணப்படுகிறார். ...கணிசமாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார். ...உடம்பைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும் ...தே!

## நான் விஜய் ரசிகை

"இன்றைய தமிழ் நடிகர்களில் விக்ரம், விஜய் இரண்டு பேரையும் ரொம்ப ரொம்பப் பிடிக்கும். 'சேது', 'காசி', படங்களைப் பார்த்துப் பிரமித்துப்போனேன். இதையெல்லாம் படத்தில் பார்க்கிறபோது எனது நடிப்பெல்லாம் எங்கே" இப்படிக் கேட்பவர் வேறு யாருமல்ல 'ஷெரீன் ரெட்டி'. 'துள்ளுவதோ இளமை' மூலம் ரசிகர்களின் தூக்கத்தைக் கெடுத்த ஷெரீனுடைய சொந்த ஊர் பெங்களூர். இப்போது கொஞ்சங் கொஞ்சமாகத் தமிழுக்கு அறிமுகமாகிக்கொண்டிருக்கும் இவர் தனது முழுச் செழிப்பையும், செல்வாக்கையும் பிரயோகித்துத் தமிழ் சினிமாவில் ஒரு கலக்குக் கலக்குவேன் என்று சபதம் இட்டிருக்கிறார்.

ரசிகர்களைக் கவருவது எப்படிப்போனாலும், டைரக்டர்களைக் கவர அட்டகாசமான ஐடியாக்களைக் கைவசம் வைத்திருக்கும் ஷெரீனையும் பிழைத்துக்கொள்ளத் தெரிந்த நடிகைகளின் பட்டியலில் சேர்க்கலாம்.

## ் கமல்

...லா விரைவில் ...ருக் கொண்டு ...து மூன்றாவது ...யமாகவுள்ளது. ...தை எடுக்கவுள் ...மெடிப் படங்க ...கும் கமல், மீண் ...மான ரோலில் ...ள்ளார்.




## ரம்யா கிருஷ்ணனின் சபதம்

'ராஜ காளியம்மன்' படத்துக்குப் பிறகு மீண்டும் அம்மன் வேடம் கட்டுகிறார் ரம்யா கிருஷ்ணன். அம்மனாக நடிக்க ஒத்துக்கொண்ட கடைசிப் படம் இது தானாம். இனிமேல் அம்மனாக நடிக்க மாட்டாராம். காரணம் அம்மன் வேடம் போடும்போது கடுமையாக விரதம் மேற்கொள்வாராம். மேக்கப் போட ஆரம்பித்ததுமே உடம்பில் மின்சாரம் பாய்வது போல் உணர்வு வந்துவிடுமாம். அவரை அறியாமல் உடம்பு சிலிர்த்துப் போய்விடுமாம். இந்த மாதிரிப் பரவச உணர்வு ஏற்பட்டால் நான் நானாக இருக்கமாட்டேன். ஏதோ ஒரு சக்தி வந்தது போல் ஆகிவிடும் என்று அருள் வந்தது போல் பேசுகிறார். நடிகையிடம் குறி கேட்டு ரசிகர்கள் கூட்டம் கூடாமல் இருந்தால் சரி!



## கும்தாஜின் சோகம்

மும்தாஜுக்குப் போட்டியாகக் கவர்ச்சிக் களத்தில் இறக்கப்பட்டவர் கும்தாஜ். கவர்ச்சி ஆட்டத்தில் கலக்கினாரோ இல்லையோ நிஜ வாழ்க்கையில் நடிகை மிகவும் கலங்கிப் போயிருக்கிறாராம். கலக்கத்துக்குக் காரணம் நடிகை நடித்த பலான படங்கள்தானாம். இவர் நடித்த சில நீலப் படங்கள் இப்போது காக்கிச் சட்டைக்காரர்களின் கையில் சிக்கியிருக்கிறதாம். எந்த நேரத்தில் காவலர்கள் வந்து கதவைத் தட்டுவார்களோ என்று புலம்பிக் கொண்டிருக்கிறாராம்!

## ...னி சினி

...மனோஜ், ரதி ...படம் 'பல்ல ...ளியிலேயே காத ...ழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ளும் ஓர் ...னைப் பற்றிய கதை. படத்தில் பெரும்பாலான ...'பல்லவன்' பஸ்ஸிலேயே படமாக்கப்பட்டு வரு...

...சன் இயக்கும் படம் 'சதா'. ஹீரோவாக நடிப்ப...கரம். சங்கவி, விலாசினி இருவரும் இவருக்கு ...கிறார்கள்.

...ன கேரக்டரில் விக்ரம் அடுத்து நடிக்கவிருக்கும் ...கோடி ரூபா செலவில் தயாராகும் இந்தப் படம் ...ரு முத்திரைப் படமாக இருக்கும் என்கி...

...டை கூடிவிட்டதால்தான் சங்கவி காட்டில் மழை ...வைத்தார்களாம். சும்மா விடுவாரா மும்தாஜ்? ...ஒரு தனியார் மருத்துவமனைக்கு. அளவுக்கு ...உறிஞ்சி எடுக்கும் சிகிச்சையைச் செய்து...

...செய்திதான். மோனல் விவகாரத்தில் சிம்ரனு...க் கொண்ட மும்ஸ் விரைவிலேயே அவருடன் ...என்று கூறுகிறார்கள். மும்ஸை சந்தித்து பிரஸ் ...சிம்முவும் பச்சைக் கொடி காட்டியிருக்கிறதாம்.

## நெளிவு சுளிவு தெரியாத விஜயலட்சுமி

'பிரண்ட்ஸ்' படத்தில் அறிமுகமானவர் நடிகை விஜயலட்சுமி. நன்றாகத்தான் இருக்கிறார். சிறப்பாகத்தான் நடிக்கிறார். கிளுகிளுப்பும் கவர்ச்சியும் காட்டுகிறார். எல்லாம் இருந்தும் என்ன பயன்? இரண்டாம் பட்ச நாயகியாகத்தான் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறார். இப்போது இவர் நடித்து வரும் படம் 'நிலவினிலே'. இந்தப் படத்தின் மூலம் தன் திறமையை நிரூபித்து ரசிகர்களைத் தன் பக்கம் எப்படியும் கவர்ந்து விடுவது என்பதில் தீவிரமாக இருக்கிறாராம். அழகு இருக்கு, திறமை இருக்கு, கிளாமரும் இருக்கு. ஆனாலும் சினிமாத்துறையின் நெளிவு சுளிவுகளைத் தெரிந்து கொள்ளாத நடிகையாக இருக்கிறாரே!

## சத்யராஜ் நடிக்கும் 'மாறன்'

சத்யராஜ் மூன்று கெட்டப்பில் நடிப்பதாக அறிவிக்கப்பட்ட படம் 'சிவாஜி'. இதே தலைப்பில் நடிகர் சிவாஜி கணேசன் பற்றிய தகவல் படம் ஒன்றை சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கப் போகிறது. சிவாஜியின் மகன்களான ராம்குமாரும், பிரபுவும் தலைப்பை மாற்றும்படி சத்யராஜிடம் சொல்ல, படத்தின் டைட்டில் 'மாறன்' என மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் சத்யராஜுக்கு ஜோடி சீதா. 'மல்லு வேட்டி மைனர்' படத்துக்குப் பிறகு சத்யராஜுடன் ஜோடியாக நடிக்கிறார். இதே 'மல்லு வேட்டி மைனர்' படத்தில் நடிக்கும் போதுதான் பார்த்திபனுக்கும் சீதாவுக்கும் திருமணம் நடந்தது. சத்யராஜுடன் அடுத்த ரவுண்டு நடிக்க வந்திருக்கும் வேளையில் பார்த்திபன் - சீதா உறவில் லேசாகப் புகைச்சல் ஆரம்பித்துள்ளதாம்.



## நண்பனுக்கு...

முறிந்து போனதற்கு
முற்றுப்புள்ளி வைப்பதுதானே
முறையென்றாய்
எனக்கென்னவோ அது
முட்டாள்தனமாய்ப் படுகிறது.

முடிந்ததும் முடிவைப்பதற்கு- என்
காதலொன்றும்
கற்றல்களுக்கு மட்டுமான
புத்தகமல்ல
அகராதி
அடிக்கடி திறந்து- என்
அகவாழ்வின் அர்த்தங்களைப்
புரிந்து கொள்ளுமிடம்

அது என்
கனவுகளின் திறவுகோல்
கவிதைகளின் உற்பத்தித்தானம்
என் வாழ்வில்
விரல்விட்டெண்ணக் கூடியதாய்
விடிந்திருந்த பொழுதுகள்

அது
அடுத்தவர்களால்
புரிந்துகொள்ள முடியாத
சோகங்களின் தொகுப்பு
ஆன்மாவின்
அழுகையால் மட்டுமே
ஆறுதல்படுத்தக் கூடிய
வாழ்வியல் துன்பம்.

தொலைந்து போனதற்காய்
துயர்கொள்ளல்
உடைந்து போனதற்காய்
உருக்குலைதல் எல்லாம்- உலக
விலைகொள் பொருட்களுக்கு
மட்டுமான விதிகளல்ல
விலைபேச முடியாத
இருதயத்தின் தொலைவுகளுக்கும்
இது பொருந்தும்.

மன்னித்துக் கொள்
என்னால்
மரணத்திலும்- அவளை
மறக்கமுடியாது
உனக்குப்
புதிராக இருக்கும்
ஏமாற்றிப் போனவர்களுக்காய்
இவ்வளவு இவன்
ஏங்குகிறானே என்று

வலி
வந்தவனுக்குத்தான் தெரியும்
வார்த்தைகளால்
புரியவைக்கலாம் என்பது பொய்

த.ஜீவராஜ், தம்பலகாமம்.

## தேன் கிண்ணம்

## நீங்காது உன் நினைவுகள்

என் கண்கள் உன்னைக்
காணாத போதும்
கவிதையாய் முத்தம் சிந்திய
என் கவிதைப் பெண்ணே!
நாட்களின் நகர்வுகளில்
நலம் விளங்கத் தொடங்கிய
உன் அழைப்பு
நாளடைவில்
நம்பிக்கையின் ஒளிவிளக்காய் -என்
நரம்புகளை வருடிச் சென்றன!

உன்னை நானும்
என்னை நீயும்
புரிந்ததன் விளைவுகளாய்
ஒருவரை ஒருவர்
காணத் துடித்த துடிப்புக்கள்
எத்தனை?

நதியோர டூயட்டோ
கடலோரக் கவிதைகளோ இன்றிக்
கண்ணெட்டாத் தொலைவில் இருவரும்!...
உன் குரலுக்காய்க் காத்திருந்த காலங்கள்
கனவுலகில் கதை பேசுகின்றன.

உன்னைக் காண்பதற்கான- என்
துடிப்புக்கள்
கல்லைவிட வைரமாய்க்
கடினமான போதும்
கடை நிறைந்த பொழுதில்
கிடைத்த மோட்சமாய்
குரல்வழி ஏக்கங்கள்
எல்லாம்
கண்களின் சங்கமத்தில்
தீர்ந்து போக
குறுகிய கால விடுதலை போல்
எம் சந்திப்பில் ஏதோ ஓர் நிறைவு...
இருந்தும் என்னைச் சுற்றிய
காவற் படையில்
கட்டுண்டு போனதனால்- என்
உள்ளார்ந்த ஏக்கங்களை
வார்த்தைகளாய் வடிக்க முடியாத
போதும்
உன்னை நிஜத்தில்
ஓர் முறையாவது பார்த்தது
என் முற்பிறப்பு பலன்தான்.

மீண்டும் உன்னைப்பிரிந்து
தொலைதூரம் சென்றாலும்
உன் நினைவலைகள்
என்னுள்ளே மீண்டும் மீண்டும்
அலைபாய்கின்றன!
உனக்குள்ளும் இந்த அவஸ்தைகள்
எட்டிப் பார்க்கிறதா?
என்ற ஏக்கங்களுடன்
இவன் உன் ஜீவன்!....

ஷாமினி, பூந்தோட்டம், வவுனியா.

## உயிர் எங்கே

உணர்வின்றி உலகறியாது
வாழ்ந்திருந்தேன்
காதலால் அரவணைத்து
கன்னியெனை கனியவைத்தாய்.
கல்லாயிருந்தவனையும் மாணிக்கமாய்
தீட்டி விட்டாய்!
உறக்கத்திலிருந்த இளமையினை
மட்டுமல்ல- என்
உள்ளுக்குள் ஒளிந்திருந்த
தீப்பொறியையும் ஊதிவிட்டாள்!
கொழுந்து விட்டு எரிகிறதே!
எரியும் தீச்சுடரும்
உன் நினைவை
தீய்ந்த சாம்பலிலும்
உன் நினைவே.
உயிர்தாங்க நான்
மறப்பினும்- உன்
நினைவிற் தாங்க
மறப்பதில்லை!
என்றும் உனை
நெருங்கும் வரை
என் கண்களிற்
தூக்கமில்லை!

குமாரன் பிரசாத் குமார்,
பண்டாரவளை.

## ஒரு குடிசைப் பூவின் குமுறல்

மேகமே!
உனக்குள் மட்டுமே
ஆயிரம் ஆயிரம் நீர்த்திவலைகள்
உண்டெனக் கர்வம் வேண்டாம்.
உனது ஆயிரம் ஆயிரம் நீர்த்திவலைகளும்
என் கண்கள் கணப்பொழுதில் சொரியும்.
கண்ணீரில் கால் பகுதி மட்டுமே.
உன்னையாவது இங்கே
காசுகள் இன்றி கட்டியணைக்க
காற்றலை உன் புருஷர்கள்.
என்னை இங்கே
வரதட்சணை இன்றி வரங்கேட்க
வரவில்லை இதுவரை புதுமைப் புதல்வர்கள்.

நீ பூத்ததால் இங்கே
சிரித்தது சமுதாயம்.
நான் பூத்ததால்
சிரிக்க முடியாமல் என் பெற்றோர்கள்
உன் உறவைப் பகிர்ந்து கொள்ள
இங்கே ஆயிரம் ஆயிரம் உறவுகள்.
என் உறவைப் பகிர்ந்து கொள்ள
இதுவரை இல்லை இரவுகள்.
நீ மலர்ந்ததால்
மலர்ந்தது மழை மணம்.
நான் மலர்ந்தும்
மொட்டாகவே என் திருமணம்.

இராசாவிந்தோட்டம், பப்பா குணம்.

## காதல் பயம்!

தெரியாத விலாசத்தை
விசாரிக்கப் போன இடத்தில்
என் உணர்வுப் பயிரை
நட்டுக் காதலாக அறுவடை
செய்து போனவள் காத்திருந்தாள்
கைகளில் புத்தகங்களுடன்!
ஐம்பது கிலோ உடல்
நிறைதான்
ஐந்து நாள் கழித்த பச்சைக்
குழந்தையின் மன நிலைதான்
அப்போது எனக்கு
கண்டவுடன்! ஆனால்
அவள் நினைவை மட்டும்
உணரும் அறிவு இருந்தது.
தன் தோழி வந்தவுடன்
தொடுத்து வைத்த மலர்
விழுவது போல்.
அசைய ஆரம்பித்தாள்!
அதுதான் சந்தர்ப்பம்.
அவள் குரலையாவது கேட்கலாம்
என நகர்ந்தேன் முகவரியுடன்!
கால்கள் நடக்கிறது மனசு
மட்டும் நொண்டியடிக்கிறது!
காரணம்? காதலைக்
கேட்கப் பயந்தவன் விலாசம்
கேட்பதையும் காதலாக
நினைத்துப் பயந்து விட்டானா?!
இல்லை- நான் அவளிடம்
காதலைச் சொல்ல
இருக்கிறேன் எப்படி
போய் விசாரிப்பது என
குறுக்கால் சிந்தித்தானா?
இதைத்தானா காதல் பயம்
என்பார்கள்?
எதிரிகளின் இடத்தைத்
தாக்கிப் பிடிப்பது போல்.
எப்படியோ கஷ்டப்பட்டு
பக்கத்தில் சென்றுவிட்டேன்!
அப்போது கூட தோழியிடம்தான்
நீட்டினேன் முவரியை!
அசைவை மட்டும் அவளிடம்
காட்டி நின்றேன்!
விலாசத்துக்கு வழி சொன்னதற்கு
செவி மடுத்தானோ இல்லையோ
அவள் மீது கண்களை
படரவிட மறக்கவில்லை!
என்ன தேவைக்கு வந்தேனோ
அதை மறந்துவிட்டு
எண்ணங்களை வளர்த்துக்
கொண்டு போகிறேன்!

ஏ.எப்.எம்.நியாட், முள்ளிப்
பொத்தானை.


## பேனா நண்பர்கள்



பெயர்: ஏ.எம். அன்வர்
வயது: 20
முகவரி:
252, ஆலிம் வீதி,
மாளிகைக்காடு-02,
காரைதீவு.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்: பாலச்சந்திரன்
சசிகரன்
வயது: 21
முகவரி:
த.பெ.இல. 358
புதுக்குடியிருப்பு-05 E.P.
புதுக்குடியிருப்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
ஜி. அருண்
வயது: --
முகவரி:
AL-NISAR MACHINERY
P.O.BOX NO:- 224
DOHA-QATAR.
பொழுது போக்கு:
வழமையானவை.

## நினைத்து, நினைத்து சிரிக்க

"உரலிலேயே ரொம்ப சுலபமா
அரிசி மா இடித்து விடுறியே,
எப்படி?"
"டேக் இட் ஈஸி பொலிஸிதான்.
உரலிலே என் மாமியார் தலையைப்
போட்டு வச்சிருக்கிறதாக் கற்பனை
பண்ணிக்கொண்டு இடிக்க
ஆரம்பிச்சிடுவேன்!"





மதன், சுதன் இருவரும் நணபர்கள். வானை எடுத்துக் கொண்டு உல்லாசமாகப் பொழுதுபோக்கச் சென்றார்கள். கடுமையான உறைபனியால் பயணத்தைத் தொடர முடியாமல் ஒரு பண்ணை வீட்டின் முன்பாக வானை நிறுத்தினார்கள்!

வீட்டுக்குள்ளிருந்து வந்த பெண்ணிடம் அங்கு இரவ மட்டும் தங்கிக் கொள்ள அனுமதி கேட்டனர்.

அவளோ "நான் விதவை! என் கணவர் இறந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை! இந்தச் சூழ்நிலையில் உங்களை வீட்டுக்குள் அனுமதித்தால் பக்கத்து வீட்டுக்காரர்கள் அபாண்டமாகப் பேசுவார்கள்" என்று மறுத்துவிட்டாள்.

"எங்களுக்கு உள்ளே இடம் வேண்டாம். ஸ்டோர் ரூமிலேயே படுத்துவிட்டு விடிந்ததும் கிளம்பி விடுகிறோம்" என்றார்கள்.

ஏறத்தாழ ஒன்பது மாதங்கள் சென்றன. மதனிற்கு விதவையின் வக்கீல் ஒரு கடிதம்அனுப்பியிருந்தார். "சுதனைக் கூப்பிட்டான் மதன்.

"பல மாதங்களுக்கு முன்னால் ஒரு பண்ணை வீட்டில் தங்கியிருந்தோமே நினைவிருக்கிறதா?"

"விதவை வீடுதானே... நினைவிருக்கிறது!"

"நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் நீ எழுந்து அவளுடைய அறைக்குச் சென்று ஆனந்தமாக இருந்தாயே, அதுவும் ஞாபகம் இருக்கிறதா?"

"என்ன மதன்! நான்தான் உன்னிடம் அடுத்த நாளே சொல்லிவிட்டேனே?"

"அது சரி. அவளிடம் உன் பெயரைச் சொல்லாமல் என் பெயரைச் சொல்லியிருக்கிறாய். அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"பயமாக இருந்தது. ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக அப்படிச் சொன்னேன் மதன்! என்னை மன்னித்துவிடு!"

"பரவாயில்லை சுதன்! அந்த விதவை செத்துவிட்டாள். சொத்துக்களை என் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறாள். அதனால் அவளுடைய வக்கீல் எனக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார். நன்றி நண்பா!"

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

*சிங்களத்தில் புதுக்கவிதைகளின் வளர்ச்சிப் போக்குப் பற்றி உதாரணப் படுத்துவதற்கு அநேகமான வெளிப்பாடுகளை முன்வைக்கலாம். தமிழில் போன்றே ஆரம்பத்தில் புறந்தள்ளப்பட்டாலும் இன்று சிங்கள இலக்கியம் புதுக்கவிதையை நிறையவே- நிறைவாகவே கொண்டிருக்கிறது. இங்கு காணப்படுவது இரண்டு புதிய படைப்பாளிகளது படைப்புக்கள்.*

## சமமான மூவர்


நீ துயருறும் போதும் தினம் தினம்
நான் அல்ல என்னுள்ளான
மது நுரை
கடந்த காலத்தைத் தூக்கி எறிகிறது.

துளிக் கண்ணீரையேனும்
வழிய விடாது
நீண்டதொரு பெருமூச்சையேனும்
வெளியே விடாது
கவலையுடன் பார்க்காது
நீ சிரித்துக் கொண்டே அழுகிறாய்
எனது தாயைப் போல!

மாலை இருள் சூழ்ந்த உணவகத்தில்
நானிருக்கும் இடத்தின் பின்பாக
இருக்கும் அவளும் அப்படியே!
"அவள்" அழுதும் சிரித்தவாறுதான்.
ஆம்
நீயும் என் தாயும் ஒருவாறே!
என்ன... அவளது பெயர் என்ன?
ஞாபகத்தில் இல்லையே
ஏன்?...
அது... அது... மோ... மோ...
சரி,
இப்போது ஞாபகத்துக்கு வருகிறது
நீயும் என் தாயும்
"மோனாலிஸா"வைப் போல்!

***லக்ஷாந்த அத்துகோறள.***
***தமிழில்- இப்னு அஸூமத்***

## சிறப்புக் கவிதை



## உண்மையும் மாயையும்

அப்பாவைப் புதைத்த இடத்தில்
காய்ந்து போன இலைகளைத்
தடவியவாறு
அம்மா
இலேசாகச் சிரித்தாள்
எனக்கு ஞாபகமிருக்கிறது.
இரவ சாப்பிட
மரவள்ளிக் கிழங்கேனும்
இல்லாத நாட்களில்
பட்டினியுடன் நித்திரை போக
கதை சொல்லும் போதும்
எனது தாயும் இப்படித்தான்.

மூடிய என் விழிகளுக்குள்
அம்மாவினதும் உனதும்
முகங்கள்.
ஒன்றுடன் ஒன்று மோதும்
சமாந்தரமான
மெல்லிய இரு சிரிப்பு ரேகைகள் போல்
ஒன்றுடனொன்று உரசிச் செல்லும்.

பல்வேறு துன்பங்கள்
மனதுள் இருந்தவாறு
குறட்டை விடும் போது
முகத்தில் தெரியும் சாந்தம்
தொலைந்து போகாதது புதுமை!

சூரியன்
மாண்டு போன வேளை
கால்வாயில் குளித்துவிட்டு
துன்ப துயரங்களைத்
தோளில் சுமந்து
மண்வெட்டியை மாத்திரம்
இறக்கி வைத்துவிட்டு
வீடு நுழையும் அப்பா!

'பெரிய மகள்'என அழைக்கும் முன்பே
மூடி வைத்தேன்
படித்துக் கொண்டிருந்த
"பின் நவீனத்துவம்"
புத்தகத்தை

அப்பா என் தம்பியுடன்
விவசாயத்தின் மகிமையைப்
பகிர்ந்து கொள்கிறார்.
அவர்களது நிலையை
நானெப்படி விளக்குவது?
நேற்றைய எனது விரிவுரை
"விவசாயிகள் சமூகமும்
குறை அபிவிருத்தியும்"
சென்ற போகத்தின் போது
அறுவடையில் நட்டமேற்பட்டது பற்றி
அப்பா
ஒரே மூச்சில் கூறி முடிக்கிறார்.
அம்மா பயபக்தியுடன்
முதல் சோற்றுப் பங்கை
அப்பாவிடம் நீட்டுகிறாள்.
பின்... தம்பியிடம்
அதன் பின் சின்னத் தம்பியிடம்
அதற்கும் பின் என்னிடம்

இது
ஆணாதிக்கக் கோட்பாடு
அல்லவா? என
நினைத்துக் கொள்கிறேன்.
சாப்பிட்டு முடியும் வரை
அவர்களது ஆயிரமாயிரம்
ஓலங்கள்.
அனைத்தும்
நான்கு சுவர்களுக்குள்.
இவை எல்லாவற்றுக்குமிடையில்
ஞாபகம் வருகிறது
எனக்கு
நாளை காலை விரிவுரை
"மோதல் நிலையும்
அரசியல் வன்முறையும்"

***பவித்ரா எஸ். ரூபசிங்ஹ***
***தமிழில்- இப்னு அஸூமத்***

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்ப கால அவஸ்தைகளும் சில தீர்வுகளும்

ஆசை, ஆசையாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'அம்மா' பாக்கியம் கிடைக்கப் போகிறதா? அது இருக்கட்டும். கர்ப்ப காலத்தில் என்னென்ன உடல் உபாதைகள் ஏற்படும். அவற்றை எப்படிச் சமாளிக்கலாம் என்று தெரியுமா?

**இடுப்பு, முதுகுவலி :-**

கர்ப்ப காலத்தில் பெரும்பாலான பெண்களுக்குத் தவிர்க்க முடியாமல் வரும். அதற்கு துவாய் ஒன்றைச் சூடான தண்ணீரில் நனைத்து ஒத்தடம் கொடுங்கள்.

கால்களை நேராக வைத்து நடவுங்கள். குதி உயர்ந்த பாதணிகளைத் தவிர்த்து, சாதாரண பாதணிகளை உபயோகியுங்கள். மேடு பள்ளமற்ற சீரான படுக்கையில் தூங்குங்கள்.

**மூச்சுத் திணறல்:-**

கடைசி மூன்று மாதங்களில் மூச்சு விட அடிக்கடி சிரமப்பட நேரிடும். கனமாக இருக்கும் கர்ப்பப்பை உங்கள் நுரையீரலை அழுத்திக் கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம் நன்றாக இரண்டு முறை மூச்சை இழுத்து விடுங்கள். முடிந்தவரை முதுகைச் சாய்த்து சாய்வு நாற்காலிகளிலேயே அமருங்கள்.

**மலச்சிக்கல்:-**

கர்ப்பம் ஆரம்பித்த முதல் இரண்டு, மூன்று மாதங்களில் மலச்சிக்கல் அதிகம் வர வாய்ப்புண்டு. அதிலும் நீங்கள் இரும்புச்சத்து மாத்திரைகள் அல்லது 'டானிக்' சாப்பிடுபவராக இருந்தால் இது இன்னும் அதிகரிக்கும். நாலாவது ஐந்தாவது மாதங்களில் இது சரியானாலும் மறுபடி கடைசி இரண்டு மாதங்களில் மீண்டும் வரக்கூடும்.

உணவில் நார்ச்சத்து அதிகமுள்ள கீரைகள், பழங்கள் போன்றவற்றை அதிகம் சாப்பிடுங்கள். நீங்களாகவே பேதி மாத்திரை சாப்பிடுவது கண்டிப்பாகக் கூடாது.

**கால் உளைவு:-**

இது விட்டமின் 'பி' அல்லது கல்சியம் குறைவால் பெரும்பாலும் வரலாம். குழந்தையின் தலை, 'பெல்விக்' நரம்புகளை அழுத்தும் போது, உங்கள் கெண்டைக்கால் சதை இழுத்துப் பிடித்துக் கொள்வதுண்டு.

படுக்கும் முன் தரையில் கால்களை அழுத்திச் சிறிது தூரம் நடவுங்கள். விரல்களைக் கீழ் நோக்கி உட்பக்கமாக இழுத்துப் பயிற்சி செய்யுங்கள். வலிக்கும் இடங்களில் 'மசாஜ்' அல்லது ஒத்தடம் கொடுக்கலாம்.

**தலைமுடி உதிர்தல்:-**

பளபளப்பாக இருந்த கூந்தல், 'ஹோர்மோன்' மாறுதல்களால் பிசுபிசுப்பாகவோ, வறண்டோ போகக் கூடும். அதனால் முடி கொட்டவும் சந்தர்ப்பம் இருக்கிறது. வாரம் இரண்டு முறை தலை குளித்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். கவலைப்படாதீர்கள். குழந்தை பிறந்தபின் பழைய மெருகான கூந்தல் உங்களிடமே வந்து சேரும்.

**வாந்தி, நெஞ்சு எரிதல், சமிபாடு:**

ஆரம்ப மாதங்களில் தலைசுற்றி மயக்கம் வருதல், நெஞ்சு எரிதல், வாந்தி வருதல் என்பவை சாதாரணமானவை.காரணம் கருப்பையில் வளர ஆரம்பித்து விட்ட கரு, மேல் நோக்கி நகர்வதால் உருவாகும் அழுத்தம்தான். கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் சமிபாட்டுச் சக்தி மிக மிகக் குறைவாகவே இருக்கும்.

சமிபாடடைவதற்கு அதிக கஷ்டமான அவரை வகை, இனிப்பு வகைகள்,எண்ணெயில் பொரித்த பொரியல் போன்றவற்றைத் தவிர்க்கவும். சாப் பிடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன் சூடாக அரை 'டம்ளர்' பால் குடியுங்கள். அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக நிறையத் தண்ணீர் குடியுங்கள்.


**செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி**

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

**SELVAS**

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** Aa

பெயர்:....................
முகவரி:....................
....................
தொழில்:....................

உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 20- 07-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம்.ஆர். பர்ஸானா பேகம்
38/1, வெலகெதர வீதி, பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

"சீதாவைக் கட்டிக்கிறதா...?"

"ஆமாம்..."

"ஆனந்தா என்ன சொன்னாங்க...?"- மது கேட்டாள்.

"பண்ணிக்க... பண்ணிக்காதேன்னாங்க. தீர்மானம் உன்கிட்ட வரும்னாங்க. அது என்ன அட்வைஸ்...? எனக்குப் புரியலை..."

"இந்தக் கல்யாணம் வேண்டாம்னா வேண்டாம்னு சொல்லிடு... வேற எத்தனையோ செய்யலாம். வேலைக்குப் போகலாம். வேற ஊர்ல, வேற ஜனங்க மத்தியில வாழலாம். எத்தனையோ இருக்குது... இன்னொருக்கா கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லைன்னா வேண்டாம் விட்டுரு..."

"மது... இதை உன் கோணத்துல, உன் தைரியத்துல இருந்து சொல்றே மது! நான் ரொம்பப் பாதுகாப்பா வளர்ந்தவ... என்னைத் தனியா காலேஜ் அனுப்பினதே, எங்க ஃபேமிலில புரட்சி... ஆண் துணையில்லாம ஒரு பெண் தனியா தன் வாழ்க்கையை அமைச்சுக்க முடியும்கிறதுல எனக்குப்




பயிற்சியே இல்லை..." - அனிதா சொல்ல,

"அப்ப சும்மா இதைப் போட்டு எல்லோரையும் குழப்பாதே... சீதாவைக் கல்யாணம் பண்ணிக்கிடு. உன்னைத் தங்கம்போல வெச்சுப்பார்... காப்பாத்துவார்..." - மது சொன்னாள்.

"அதான் பயமா இருக்கு... சீதா ரொம்ப நல்லவன்... ரொம்ப ரொம்ப நல்லவன்... கல்யாணம் ஆனப்புறம் மாறிடுவானா-?"

"இல்லை அனி... சீதா மாதிரி ஆளெல்லாம அப்படி இல்லை. உன்னை அப்படியே பூஜை பண்ற ஆசாமி... உனக்காக எந்த அவமானத்தையும் தாங்கிக் கொள்ளக் கூடியவரு. எந்த மாதிரி தியாகமும் பண்ணக்கூடியவரு... அனி, உன் மனசு ரொம்பக் குழப்பத்துல இருக்கிற இந்தச் சமயத்துல சீதாவினுடைய ஆறுதலும் அரவணைப்பும் உனக்குத் தேவைதான்..."

சீதா உள்ளே வந்து, "என்ன அனி... எல்லாம் தயாரா...?" என்றான்.

சீதா கல்யாணத்துக்குச் சலுகையாகப் பட்டு வேட்டி அணிந்து, நெற்றியில் குங்குமம் இட்டிருந்தான். கையில் இருந்த சிவப்பு சதுரப் பெட்டியைத் திறந்து "தாலி..."என்று கட்டினான். அனிதா அவனிடம் தன் கழுத்தில் இருந்த தாலியைக் காட்டி, "இதை என்ன பண்றது...?" என்றாள்.

"அதுவும் இருக்கட்டும். உனக்கு எப்பத் தோணறதோ, அப்பக் கழட்டிப் போட்டுரு..."என்றான்.

மது, அனிதாவைப் பார்த்து "சொன்னேன் இல்லை...?" என்றவள், "சீதா... நீ போன ஜென்மத்துல யாரா இருந்திருப்பேன்னு யோசிச்சுப் பார்க்கிறேன்..."என்றாள்.

"போன ஜென்மத்துலயும் அனிதாவுடைய கணவனா இருந்தேன்..." என்று சொல்லிவிட்டுப் போனான்.

காரில் போகும்போது உற்சாகமாகவே இருந்தது. பல்லாவரம் தாண்டிப் போகும்போது பவுடர் வாசனை அடித்தது. பெரிய மரங்களில் நிழலில் மக்கள் லாட்டரி டிக்கெட் வாங்கிக் கொண்டிருந்தார்கள். கதம்பம் விற்பவர்களும், ஆடுகளை மந்தையாக ஒட்டிக் கொண்டு செல்பவர்களும், போஸ்டர் ஒட்டுபவர்களும், எங்கோ பார்த்துக்கொண்டு பஸ்ஸுக்கு நிற்பவர்கள் சென்னையின் புறநகர் நியா யங்களுக்கு ஏற்ப இயங்கிக் கொண்டிருக்க... ட்ரங் ரோடைவிட்டுத் திருநீர்மலை போகும் பாதையில் திரும்பி, கொஞ்ச தூரம் போனதும் மலை தெரிந்தது.

செருப்பை காரிலேயே விட்டு விட்டுப் படிகளில் ஏறிய போது, அந்த அர்ச்சகர் சொன்னார்; "ரொம்பப் ப்ராசீனமான கோயில் இது... பாடல் பெற்ற ஸ்தலம்... வைஷ்ணவா கோயில் இது... திருமங்கையாழ்வார் பாடியிருக்கார்- நின்றான்....இருந்தான்... கிடந்தான்... நடந்தாற்கிடம் மாமலையாவது நீர்மலையே'ன்னு! பகவான் அத்தனை விசேஷம்! நின்னுண்டு, உட்கார்ந்துண்டு, படுத்துண்டிருக்கிற பகவான் வேற எங்கயும் இல்லை. மெள்ளக் காற்று விளையாடும் குன்றம்... எட்டாவது நூற்றாண்டில் இருந்தவர் திருமங்கை மன்னன்... அதனால இந்தக் கோயில் ஆயிரத்து நூறு வருஷம் பழசு..." என்றார்.

லவுட்ஸ் ஸ்பீக்கர்களில் அர்த்தமற்ற தமிழ் சினிமாப் பாட்டு காற்றோடு அபஸ்வரம் கலந்து கொடுக்க, மீனம்பாக்கத்தில் இறங்கும் ஜெட் விமானம் ஒன்று வானத்தில் மிதந்து கொண்டிருந்தது. பல பேர் காத்திருந்தார்கள். அனைவரும் கல்யாண நோக்கத்துடன், கறுப்பும்



**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

சிவப்புமாய் ரேஜா மாலையும், சரிகை வேட்டியும் பட்டுப் புடைவையுமாய்... கும்பல் கும்பல்களாகக் கல்யாண உத்தேசங்கள்!

"இன்னிக்கு முகூர்த்த நாள் இல்லையா! அதான், எட்டுக் கல்யாணம்! உங்களுக்கு அவசரமில்லையே...?" அர்ச்சகர் கேட்க,

"அவசரமே இல்லை பட்டாச்சாரிகளே, நிறுத்தி நிதானமாகவே வாரும்..." என்றார் மகாதேவன்.

"ஒரு கடுதாசில பேரு, கோத்திரம், நட்சத்திரமெல்லாம் குறிச்சிடுங்கோ... திருமாங்கல்யத்தையும் புடைவை வேட்டியையும் தட்டுல வெச்சுண்டு, இங்கேயே இருங்கோ... நான் முதல் ஜோடி கல்யாணத்தை முடிச்சுட்டு, டபிள் ஸ்பீட்ல வந்துர்றேன்..."

மகாதேவன், கமலம், சுகந்தி, ராஜாராமன், ஜிம்பு, சீதா, அத்தை பெண் வனிதா, மது, மல்லிகா என்று எல்லோரும் வந்திருந்தார்கள். மல்லிகாவின் அண்ணன் விஸ்வநாதன் வரவில்லை. எல்லோரும் மண்டபத்து நிழலில் உட்கார்ந்திருக்க, அனிதா மட்டும் தனியாக ஒரு தூணருகில் உட்கார்ந்தாள்.

"சுதாதான் வர முடியலை... ஃபோன் மேல ஃபோன் போட்டு, 'ப்ளேன்ல வான்னு சொன்னேன்... அத்திம்பேர் மாட்டேன்னுட்டார் அக்கா..." - சீதா சொன்னான்.

"அவர் ஒரு முசுடு! சீதா மாதிரி ஒரு கணவன் கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும்..." என்றாள். கமலம்

அனிதா எழுந்துகொள்ள....

"எங்கே போறே...?" -கமலம் கேட்டாள்.

"சும்மா காலாற நடந்துட்டு வர்றேன்..."

"மது, நீயும் கூடப் போம்மா... இந்தப் பக்கம் பாறையும்பள்ளமுமா இருக்கு!"

மது, "நானும் வரட்டுமா...?" என்றாள்.

"வாயேன்..." என்றாள் அனிதா.

பாறையைக் கீறிக் கொண்டு ஒரு மரம் முளைத்திருந்தது. அதன் நிழலில் அனிதா உட்கார்ந்து கொள்ள, மது பேசாமல் அருகில் உட்கார்ந்தாள்.

ஒரு சிறுவன் "அம்மா, காசு..." என்று சைகையாகக் கேட்டு, 'பேச வராது' என்று சாடை காட்ட... மது, அந்தப் பையனுக்கு ஒரு ரூபாய் கொடுக்க அவன் ஓடிப் போய்த் தன் குடும்பத்தையே அழைத்து வந்து விட்டான்.

சக்கரவண்டியில் கணவன்! அவன் கைகளில், கால்களில் எல்லாம் பண்டேஜ் போட்டுக் கட்டியிருந்தது. புருவ முடி உதிர்ந்து, உதடுகள் தடித்து, தொழு நோயின் முன்னேற்ற அடையாளங்கள். அவனருகே அவன் மனைவி. அந்த வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்தாள்.

அவள் சரியாகத்தான் இருந்தாள். கர்ப்பமாக இருந்தாள். இரண்டு குழந்தைகளும் அழுக்காக, கரிய கண்களுடன் இருந்தன. அந்த வண்டியின் உருளைகள் எண்ணெய் காணாமல் முனக, அவன் உடைந்த குரலில் "மருந்து வாங்கக் காசு வேணும் தாயி..." என்றான்.


மதுதான் விசாரித்தாள். "ஆஸ்பத்திரிக்குப் போனா, மருந்து எல்லாம் இலவசமாகக் கொடுப்பாங்களேப்பா...?"

"அதை ஏன் கேட்கிறீங்க...?! செங்கல்பட்டு பக்கத்துல பரனூர் ஆஸ்பத்திரிக்குப் போனா, நல்லா சோறுபோட்டுப் பார்த்துக்கிறாங்க... குணம் கூட ஆயிடும்கறாங்க. இவருதான் போகமாட்டேங்கறாரு. இவரு தோஸ்துங்கள்லாம் குரோம்பேட்டைல இருக்காங்க. இவருக்கு மொண்ணைக்கையை வெச்சுக்கிட்டு சீட்டாடணும். கானாப் பாட்டுப் பாடணும்... பீடி பத்தவைக்கக்கூட பெண்டாட்டி தேவை... அம்மா, ஏதாவது பழைய சீலை இருந்தாக் கொடுங்கம்மா!" என்றாள்.

[அனிதா வருவாள்...]



பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் ஸதியென்ற நாமமும்.
–சுப்பிரமணிய பாரதியார்–



## கடலை இளவரசி

பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். மகன் மிகவும் அழகான துடிப்பான இளவரசன். அதிபுத்திசாலி. அதனால், தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் இளவரசியும் மிகவும் அறிவுத்திறன் நிரம்பியவளாகவும், நுண்ணறிவு, நுண்திறன் மிக்கவளாகவும் இருக்கவேண்டும் என்று விரும்பினான்.

அதிலும் "இளவரசி என்றால் ஆபத்துகளும் நிறைந்திருக்கும், எனவே மிகவும் விழிப்பாக இருக்கக்கூடிய இளவரசியைத்தான் மணப்பேன்"என்று பிடிவாதம் பிடித்தான். பெற்றோரும் எத்தனையோ இளவரசிகளைக் கொண்டுவந்து மகன் முன் நிறுத்தினர்.

அவன் வைத்த சின்னப் பரீட்சையிலேயே அனைவரும் தோற்றுப் போகவே பெற்றோர் மனம் வெறுத்தனர். "இனிமேல் நம் ஒரே மகனுக்குத் திருமணம் ஆகாதா... இந்தப் பரந்த தேசத்தை ஆள வாரிசு இல்லாமல் போய் விடுமோ" என்று மனம் கலங்கினர்.



ஆனால், இளவரசனோ, "என் விருப்பப்படி இளவரசி எனக்குக் கிடைப்பாள். அவளுக்காக நான் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் காத்துக் கொண்டிருப்பேன்," என்று பிடிவாதம் பிடித்தான்.

ஒரு நாள்-

பயங்கர இடியுடன் கூடிய மழை பெய்தது. அப்போது பட்... பட்... என்று கதவு தட்டும் சப்தம் கேட்டது.

ஒரு இளவரசி முற்றிலும் நனைந்த உடையுடன் ஈரம் சொட்டச் சொட்ட, உடல் நடுங்க நின்று கொண்டிருந்தாள். அவளை அழைத்து வந்து புத்தாடை கொடுத்துச் சிறப்பான உணவை அளித்தனர்.


தோழியருடன் விளையாட வந்த இடத்தில் வழி தவறி வந்து விட்டதாகக் கூறினாள் இளவரசி. இரவில் அவளது கட்டில் மீது ஒரு கடலையைப் போட்டு அதன் மீது இருபது மெத்தைகள் போட்டு, மெத்தைகள் மீது இருபது படுக்கை விரிப்புகள் விரித்து, அதில் இளவரசியைப் படுக்கச் சொன்னார்கள்.

அடுத்த நாள் காலை எழுந்ததும் இளவரசியிடம் "சுகமாக உறங்கினாயா?" என்று கேட்டார் ராணி. "இல்லையம்மா... நான் சிறிது கூடக் கண்மூடவில்லை. என் படுக்கை அடியில் என்ன இருக்கிறதோ தெரியவில்லை... ஒரே உறுத்தலாக இருந்ததால் சரியான தூக்கமில்லை" என்றாள்.

அசந்து போன ராணி விஷயத்தைத் தெரிவிக்க... இளவரசன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். இதுவரை எத்தனையோ இளவரசிகள் கண்டுபிடிக்காத விசயத்தை இவள் கண்டுபிடித்ததால் இந்த இளவரசியிடம் ஆழமான நுண்ணறிவும், சிறிய விடயங்களையும் நுணுக்கமாக அறியும் திறனும் இருப்பதனைக் கண்டு இளவரசியை ஆசையுடன் மணந்து கொண்டான். பெற்றோரும் மனம் மகிழ்ந்து இளவரசனையும் இளவரசியையும் ஆசீர்வதித்தனர்.

நாமும் நமது சூழலிலே நடைபெறுகின்ற சிறு விடயங்களையும் தேவையற்றவை எனப் புறந்தள்ளி விடாமல் அனைத்து விடயங்களிலும் நமது நுண்ணறிவைப் பயன்படுத்தி வெற்றிபெற வேண்டும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.07.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **453**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 451**

பரிசுக்குரியவர்:
**எம்.எஸ்.எம். பாஹிம்**
138/4, கிருங்கதெனியா, மாவனல்லை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **அஸனார் மாஜித்,** அல்-ஹாமியாமு.ம.வி.மாங்குளம்,நேரியகுளம், வவுனியா. | **முஹம்மத் றபீத் நளீம்,** முதலாவது ஒழுங்கை, ஸ்பீல் வீதி, புத்தளம். |
| **ஜயதீப் விஜயகுமாரன்,** கொபுனுமெண்டால் த.வி, கொழும்பு- 14. | **யோ. பிருதிவிகா,** சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழு.-06. |
| **எல். பாராத்,** தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | **பி. நிவேதிகா** உயர்தர பாடசாலை, ஹட்டன். |
| **செல்வி. ஆர். சுவஸ்திகா,** அம்பிகா ஸ்டோர்ஸ், பிரதான வீதி, கலஹா. | **தே. துஷாந்த்,** திரு ஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை. |
| **ஜெனீபா** கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கொழும்பு-15. | **ரி. திவாகரன்** ஆத்தர் சிறிசேன மாவத்தை,அப்புத்தளை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. பல பேர் கட்டிய வீடு, ஒருவன் கண் பட்டு உடைந்தது, அது என்ன?
2. ஒட்டை வாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை. அது என்ன?
3. அலறி அலறிக் கூப்பிடுவான்; தொட்டால் அடங்கி விடுவான். அவன் யார்?
4. அழகு காட்டும் சக்கரம்; அச்சு இல்லாத சக்கரம். அது என்ன?
5. அடி மேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான். அவன் யார்?
6. ஒரு லீட்டர் தண்ணீரில் ஒய்யாரி ஆட்டம் போடுகிறாள். அவள் யார்?
7. கல்லிலே காய்க்கும் பூ; தண்ணீரில் மலரும் பூ. அது என்ன?
8. பஞ்சைத் தின்றவன் படுத்தே கிடக்கிறான். அவன் யார்?
9. வெள்ளை மாளிகையில் மஞ்சள் தேர் அது என்ன?
10. உயர உயர சிறக்கும்; உயர்ந்து விட்டால் எரிக்கும் அது என்ன?

**விடைகள்**

1. தேன் கூடு 2. சீப்பு
3. தொலைபேசி 4. வளையல்
5. மிருதங்கம் 6. தயிர்-மத்து
7. சுண்ணாம்பு 8. தலையணை
9. முட்டை 10. சூரியன்

## மிருக வழிபாடு



★ பர்மா, தாய்லாந்து மற்றும் புத்தர்கள் மிகுதியான நாடுகளில் யானைக்குப் பாத பூஜை செய்து வழிபடும் வழக்கம் இருந்து வந்தது.



★ பழங்கால எகிப்தியர்கள் பூனையைத் தங்கள் தெய்வமாக வழிபட்டனர். அந்த நாட்களில் பூனையைக் கொல்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.



★ மாட்டுப் பொங்கலன்று இப்போதும் இந்தியக் கிராமங்களில் பசுக்களுக்கு விசேஷ அலங்காரம் செய்யப்படுகிறது. "கோமாதா" என்று அழைத்துப் பசுவை வணங்குபவர்களும் இருக்கிறார்கள்.

## சுற்றுப்புறச் சூழல்




**சி**ல தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் குளோரோ புளோரா கார்பனால் ஓசோன் வாயு மண்டலம் மெலிந்து வருவதை விஞ்ஞானிகள் சில ஆண்டுகளுக்கு முன்பு உறுதிப்படுத்தினார்கள். அண்டார்டிகாவின் மேற்புறப் பகுதியில் ஓசோன் வாயு மண்டலத்தில் ஓட்டை விழுந்திருப்பதையும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்து இருக்கிறார்கள். ■



**ம**னிதன், நாகரிக வளர்ச்சி மென்மேலும் அதிகரிக்க அதிகமான பொருட்களை உபயோகிக்கத் தொடங்கிவிட்டான். இதனால் அவனைச் சுற்றிக் குப்பை கூளங்களும் நிறைந்துவிட்டன. ■

## இந்த வாரப் புதிர்

இங்கு எட்டு ஆங்கில எழுத்துக்கள் வரிசையாக உள்ளன. இவற்றை, ஒரு எழுத்தின் அருகே அதன் அடுத்த எழுத்து வராதபடி வட்டங்களுக்குள் மாற்றியமைக்க வேண்டும். உதாரணமாக ஏயின் அருகே பி வரக் கூடாது. பி யின் அருகே சி வரக்கூடாது. இப்படி எட்டு எழுத்துக்களையும் மாற்றியமைக்க வேண்டும். எங்கே மாற்றியமையுங்கள் பார்க்கலாம்.




## அறிவுத்தேடல்

**சென்றவாரப் புதிருக்கான விடை:**

19 சதுரங்கள் உண்டு



# ஆவலோடு

நிஷாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. நேரம் பதினொரு மணியாகி விட்டது. தபால்காரன் வருவானா? வரமாட்டானா? இரண்டு கேள்விகளையும் அவள் மனது மீண்டும் மீண்டும் அசைபோட்டுக் கொண்டது. போன வெள்ளிக்கிழமை தினேஸ் போனில் கதைக்கும் போது கடிதம் போட்டிருப்பதாகச் சொன்னான். அவளுக்குத் தெரியும் புதன்கிழமை எப்படியும் கடிதம் வரும் என்று. அது யாரிடமும் கிடைத்து விடக்கூடாது என்றுதான் அவள் வாசலுக்கும், முன் "கேற்று"க்குமாக இது வரை ஐந்து தடவைகள் நடந்துவிட்டாள். தபால்காரன் வரவேயில்லை.

நீண்ட நேர இடைவெளிக்குப் பிறகு தபால்காரனின் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டு ஓடினாள் நிஷா. விலாசம் சரியாகவும், பெயர் வித்தியாசமாகவும் ஒரு கடிதம். "வம்புக்குத்தான் தினேஸ் பெயரை மாற்றி எழுதியிருப்பான்" என்று நினைத்தவள் கடிதத்தை எடுத்துக்கொண்டு தனது அறைக்குள் ஓடிவிட்டாள். கடிதத்தை ஒருமுறை கொஞ்சிக் கொண்டவள் பிரித்துப் படிக்கலானாள்...

"அன்புள்ள அம்மாவுக்கு, உங்களின் அன்புச் செல்ல மகன் ரமேஸ் எழுதிக் கொள்வது, நான் நலம். ஊரில் நீங்களும் சுகமாக இருக்க இறைவன் துணை இருக்கட்டும். இந்தக் கடிதம் கிடைத்ததும், உங்களுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருக்கும்."

நிஷாவுக்கு உண்மையிலேயே அதிர்ச்சியாகவும் குழப்பமாகவும் இருந்தது. வேறு யாருக்கோ உரியதென்பது புரிந்தும் உருக்கமான ஆரம்பத்தைக் கொண்டிருந்த அந்தக் கடிதத்தை இடையில் விடுவதற்கு அவளால் முடியவில்லை. தொடர்ந்து வாசிக்க முற்பட்டாள்.

"தொண்ணூறாம் ஆண்டு நான் வீட்டைவிட்டு வந்த பிறகு முதன் முதலாக இந்தக் கடிதத்தை எழுதுறன். நான் ஆனையிறவுச் சண்டையில் இறந்திட்டதாகக் கேள்விப்பட்டிருப்பியள். ஏன் என்றால் அந்தச் சண்டையில் எங்கட கிராமத்தைச் சேர்ந்த



பெடியன், அவனுக்கு இயக்கப் பெயர் ரமேஸ்தான். அவன் இறந்து போயிட்டான்.

நான் உயிரோடு இருந்தும் ஏன் ஒரு கடிதம்கூடப் போடவில்லை என்று கோபப்படுவியள். நான் இயக்கத்தில் இருக்கிறன் எண்டு தெரிஞ்சா உங்களுக்குப் பிரச்சனை எண்டுதான் சும்மா இருந்திட்டன். அந்த நேரம் நீங்கள் எவ்வளவோ சொல்லியும் நான் கேக்கவில்லை. இயக்கத்துக்கு வந்திட்டன். அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். உங்கள் மடியில் கிடந்து முடியுமான வரைக்கும் அழ வேண்டும் என்பதற்காகவே என்னை உயிரோடு வைக்கக் கடவுளிட்ட மண்டாடிக்கொண்டிருக்கிறன்.

தங்கச்சி என்னுடைய முகத்தையே மறந்திருப்பாள். உண்மையைச் சொன்னால் எனக்குக் கூட அவளைச் சரியாக ஞாபகம் இல்லை. அவளைப் பார்க்க வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருக்கிறது.

இந்தப் பன்னிரண்டு வருசமா நான் உங்களை ஒரு நிமிசமும் மறந்து இருந்தது கிடையாது. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக ஒரு சுமுகமான நிலைமை உருவாகி இருக்கு. என்னோட இருக்கும் பல பெடியள் அவையட சொந்த ஊருக்குப் போய் வருகினம். எனக்கும் உங்களைப் பார்க்க வேண்டும்போல இருக்கு. எனவேதான் இந்தக் கடிதத்தை அனுப்புறன். கடிதத்தைக் கண்டவுடன் வருவியள் என்று நம்புறன்.

நீங்கள் நினைப்பியள் நான் வந்திருக்கலாம் தானே என்று. அது நியாயம்தான். ஆனால் என்னால் முடியாது. உங்களுக்குத் தெரியக் கூடாது என்றுதான் இவ்வளவு நாளா நினைச்சிருந்தன். இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களைப் பார்க்காட்டி இனிமே பார்க்கமுடியாமலும் இருக்கலாம். எப்படி எழுதிறது எண்டே எனக்குத் தெரியவில்லை.

'சூரியக்கதிர்' நடவடிக்கையில என்னுடைய வலது கால் பறிபோய் விட்டது. எனக்கு முழங்காலுக்குக் கீழ் இல்லாத நிலையில்தான் இருக்கிறேன். ஆனால், ஜெய்ப்பூர் கால் பொருத்தி இப்பொழுது கொஞ்சம் என்னால் நடக்க முடியும். நீங்கள் பெரிசாக எதையும் நினைத்துக் கவலைப்பட வேண்டாம். காயம் எல்லாம் இப்போது எனக்குப் பூரண சுகம். இருந்தும், இந்த நிலையில் ஊருக்கு வர நான் விரும்பவில்லை. எனவே எனது நிலைமையைப் புரிந்து கொண்டு என்னைப் பார்க்க வருவீர்கள் என்று ஆவலாக இருக்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களைப் பார்க்க முடியாமல் போனால், சில சமயம் அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெறும் சிறு சிறு பிரச்சனைகள் பெரிதாக வெடித்துப் பெரிய யுத்தம் வெடிக்கலாம். அப்படி போர் வந்தால், இப்போது காலை இழந்திருக்கும் நான் உயிரையும் இழக்க வேண்டி வரலாம் என்று எனக்குத் தெரியும். எனவேதான் அம்மா உங்களை ஒருமுறை பார்த்து விட வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன். அப்படி என்னைப் பார்க்க வருவதாக இருந்தால், ஊரில் கொழும்புக்குப் போவதாகச் சொல்லி விட்டு வரவும். வரும்போது தங்கச்சியையும் கூட்டிக் கொண்டு வரவும். புதுக்குடியிருப்புக்கு வந்து எங்கட காவல் துறை அலுவலகத்துக்கு வாங்க. நான் அங்குதான் இருக்கிறேன். நான் மட்டும் அல்ல. என்னைப் போல கை, கால் ஏலாத பெடியள் இப்படித்தான் இருக்கினம். அவையளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எனக்கு எவ்வளவோ நல்லம். சில சமயம் நான் இப்படித்தான் நினைப்பேன், அதாவது எனக்குக் கால் இல்லாமல் போனதற்கே நாம் இவ்வளவு வருத்தப்பட்டால் ஒருவேளை நான் இறந்து போயிருந்தா என்ன செய்வது. நான்... இல்லை... நீங்கள்... செய்த புண்ணியம்தான் என்னை இதுவரையும் காப்பாற்றி இருக்கிறது.

இத்தனை வருசமும் தனிமையில பனை மரங்களோடும், காடுமேடுகளுடனும் பேசி, உங்களை விசாரித்த நான், இந்தக் கடிதத்தை எழுதி அனுப்புறன். உங்களை வேதனைப்படுத்தும் வகையில் நான் எழுதியிருந்தால் என்னை மன்னிக்கவும்.

சிலவேளை இந்தக் கடிதம் கிடைக்காமல் போனால், இந்த ஜென்மத்தில் உங்களைச் சந்திக்க முடியாமல் போன நான், அடுத்த ஜென்மத்தில் சரி உங்களுக்கு மகனாகப் பிறக்க வேண்டும். உங்களைக் கடைசி வரை பார்க்க வேண்டும் என்று இறைவனிடம் மண்டாடியபடி இந்த மடலை நிறைவு செய்கிறேன்.

மீண்டும் ஒரு பிறப்பில் உங்கள் மகனாகப் பிறக்க விரும்பும் மகன்
ரமேஸ்."

படித்து முடித்த போது, நிஷாவின் கண்கள் பனித்திருந்தன. அவளுக்குத் தெரியாமலே அவளது மனது இறுகிப் போய் இருந்தது. முகமே தெரியாத ரமேஸுக்காக பரிதாபப்பட்டாள். ரமேஸின் அம்மா இறந்து வருடங்கள் மூன்று கழிந்துவிட்டன. அவனது தங்கை கல்யாணமாகிப் போய்விட்டாள். அவளிடம் இந்த வீட்டை நிஷாவின் அப்பா வாங்கி இரண்டு வருடத்திற்கும் மேலாகி விட்டது. யாரிடம் தகவல் சொல்வது என்று புரியாத நிஷா, ரமேஸ் ஆரோக்கியமாகவும் நலமாகவும் வாழ வேண்டி இறைவனிடம் தன் மனச் சுமையை இறக்கி வைத்தாள். இந்தச் சந்தர்ப்பத்தையாவது சமாதானம் தனது வருகைக்கான வசந்த காலமாக மாற்றிக்கொள்ளாதா? என்ற ஏக்கப் பெருமூச்சால் அவளது நெஞ்சு உயர்ந்து தணிந்தது.

**எம். ஸ்டாலின் – திருமலை**

# புதுக்கூடைக் கயிறு

மார்கழி மாதக் குளிர்காற்று சில்லென்று வீசியது. விடியற்காலை 5.30 மணியளவில் எழுந்த அஞ்சலி, வாசலில் சாணம் தெளித்து, மெழுகிக் கோலமிட்டு வீட்டை அலங்கரித்தாள். அந்த நீண்ட லயத்தின் தனது வீட்டுக்கருகில் ஏனைய வீட்டுப் பெண்களும் இப் பணியைச் செய்துகொண்டிருந்தனர். வீட்டு பீலிக்கரையை நாடிநின்ற அஞ்சலியும் ஏனைய பெண்களும் தமது கைகளில் பாத்திரங்களை வைத்துக் கொண்டு கழுவுவதற்காக நின்று கொண்டிருந்தனர். அஞ்சலி பாத்திரங்களைச் சாம்பலில் தேய்த்துக் கொண்டிருந்தாள். அவளது தளிர்க் கரங்களைத் தேயிலைத் தளிரின் சாயம் வெடிக்கச் செய்திருந்தது. வெடிப்பினுள் சாம்பல் பட்டதும் சொல்ல முடியாத எரிச்சல். என்ன செய்ய! விதியை நொந்து கொண்டு பாத்திரங்களைக் கழுவி முடித்ததோடு அடுப்புக் கரித்துண்டால் தன் பற்களைத் தேய்த்து முகத்தையும் கழுவிக் கொண்டாள்.

அடுப்பை மூட்டித் தண்ணீர் சுட வைத்துத் தேனீர் போட்டுக் கொண்டு தன் கணவனை எழுப்பச் சென்ற போது பாயில் சுருண்டு படுத்திருந்த அவனது முகத்தின் பொலிவைக் கண்டு பழைய நினைவுகளை மீட்டத் தொடங்கினாள்.

அஞ்சலி அத் தோட்டத்துத் தொழிலாளியின் மகள் என்றாலும் அவளது தந்தை அவளைப் படிக்க வைத்தான். பத்தாம் வகுப்புவரை படித்த அவள் தந்தையின் இறப்பின் பின் தாயின் நலத்திற்காகவும், தன் தாய்க்கு ஒரே பிள்ளையானபடியாலும் தோட்டத்தில் கூலி வேலை செய்யவேண்டிய நிலைக்குள்ளானாள். செட்டியும் ஓரளவு படித்து விட்டுத் தோட்டத்தில் வேலை செய்து வந்தான். அவன் சாக்கு வேலை செய்வதால் அஞ்சலியை அடிக்கடி சந்திக்க வேண்டியிருந்தது. அவன் அஞ்சலியை அடிக்கடி பார்த்து மௌனமாகச் சிரிப்பான். அஞ்சலியும் கொழுந்துச் சாக்குகளை நிறுக்கச் செல்வதால் செட்டி அஞ்சலி மேல் பரிவு கொண்டான். பரிவு பாசமாகி காதலானது. தாயின் அனுமதியுடன் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

அஞ்சலிக்கு முதற்குழந்தை அழகேசன் பிறந்து இரு வருடங்களில் அஞ்சலியின் தாயை குமரேசனின் தந்தை அழைத்துச் சென்றான்.

அஞ்சலி பெரும் துயர் கொண்டாள். செட்டி அஞ்சலியைத் தேற்றி அன்பு செலுத்தினான். செட்டி அஞ்சலி மேல் உயிரையே வைத்திருந்தான். அது போல அஞ்சலியும் அவனில் அன்பு செலுத்தினாள். இப்போது அஞ்சலிக்கு இரண்டு குழந்தைகள். பெரியவனுக்கு வயது பத்து. இரண்டாவது பெண் குழந்தைக்கு வயது ஏழு.



பழைய வாழ்க்கையை நினைத்தவள் தன் கணவனை எழுப்பித் தேனீர் கொடுத்து பிரட்டுக்குப் போகச் செய்துவிட்டு, பிள்ளைகளை எழுப்பிப் பாடசாலை செல்ல ஆயத்தங்களைச் செய்ததோடு, காலை உணவான றொட்டி சுட்டாள். அப்போது வந்த செட்டி "இன்னைக்கு கவ்வாத்துக்குப் போகணும்" என்றான். அஞ்சலியும் "கவ்வாத்து என்றால் விறகு கொண்டு வாருங்க" என்று கேட்டுக் கொண்டாள். அழகேசனையும் மகள் அமுதவள்ளியையும் பாடசாலைக்கு அனுப்பிவைத்தாள். விடைகொடுக்கும்போது இருவரின் கன்னங்களிலும் பாசமாக முத்தமிட்டு விட்டு "எங்களைப் போல் தோட்டக் காட்டில் வேலைசெய்ய உங்களை அனுப்பமாட்டேன். ராசா மாதிரி இருவரும் படிச்சு பெரிய உத்தியோகம் பார்க்கணும்" என்று சொல்லும் போது அஞ்சலியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

செட்டி அவளைப் பார்த்து "அஞ்சலி இன்னைக்கு சம்பளம் போட்டதும் சம்பளத்தை சாமியிடம் கொணார்ந்து வைச்சிட்டு எடுக்கணும். அதோட இன்னைக்கு ரெண்டு வேளைக்கும் சேர்த்தே ரொட்டி எல்லாம் தட்டி வைச்சிடு. நான் பத்து மணிக்கு வர்றப்போ ஒனக்குத் தேத்தண்ணி அனுப்பறன்" என்றான். அதற்கு அஞ்சலி, "இன்னைக்குச் சம்பளம் போட்டதும் சாமானெ எல்லாம் வாங்கணும். அது சரி, நீங்க ஏங்க கஷ்டப்படறீங்க. நான் காலை அக்கா வூட்டு தேத்தண்ணி குடிக்கிறன். இப்போ ஏவுட்டு கூடையிலிருந்த கயிறு நேத்து அறுந்துபோச்சி. அதக் கொஞ்சம் கட்டித் தாறீங்களா?"

கூடைக் கயிற்றைப் போட்டு அவளின் தலையில் கூடையை மாட்டினான். அஞ்சலி செல்லமாகத் தடுத்து கீழே வைத்தாள். செட்டி அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து "அஞ்சலி... உன்னை அடைய நான் என்ன புண்ணியம் செஞ்சேனோ? வீட்டிலையும் ஒனக்குக் கஷ்டம். மலையிலையும் கஷ்டம்" என்றான். அதற்கு "நம்ம புள்ளைங்கள வளர்க்க நாம கஷ்டப்படுத்தான ஆகனும்" என்று கூறிவிட்டுத் தன் கூடைக் கயிற்றைத் தலையில் மாட்டிக்கொண்டு மலையை நோக்கி விரைந்து சென்றாள். அவள் போகும் அழகையும், அவளது கட்டான உடலையும் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றுவிட்டு வீட்டைப் பூட்டிச் சாவியை ஜன்னலின் ஓரத்தில் வைத்துவிட்டு கவ்வாத்துக் கத்தியுடன் மலையை நோக்கி நடந்தான் செட்டி.

அஞ்சலி கொழுந்து எடுக்கச் சென்ற மலையில் ஏகப்பட்ட கொழுந்து. மலையை அடைந்த அஞ்சலி ஒரு பிடி கொழுந்து பறித்துக் கொண்டு கங்காணி கருப்பையாவிடம் "அண்ணே! பொலி சொல்லுங்க. இன்னிக்கு நெறையக் கொழுந்து எடுக்கணுமுன்னு சொல்லுங்க". கங்காணி "பொலி, பொலி, பொலி, பொலியோ" எனச் சத்தமிட அனைத்துப் பெண்களும் கூடையில் கொழுந்தைப்போட்டுக் கொண்டனர். அஞ்சலி மிகச் சுறுசுறுப்பானவள் திடகாத்திரமான உடலைக் கொண்டவள். கறுப்பென்றாலும் நல்ல அழகி என்று சொல்லலாம்.

கொழுந்தெடுக்க ஆரம்பித்து விட்டால் வெயில், மழை என்றாலும் அசராமல் வேலை செய்வாள். அதனால் அந்தத் தோட்டத்து மக்கள் அவளை "கண்ணுமணி" என்று செல்லப் பெயரால் அழைப்பார்கள். எவரிடமும் அன்பாகவும், பரிவாகவும் பேசுவாள். அந்தத் தோட்டத்து மக்கள் அனைவரும் அவளிடம் அன்பாக நடந்து கொள்வார்கள். வேலையில் ஈடுபட்டிருந்த அஞ்சலியைக் கங்காணி கருப்பையாவின் குரல் தடுத்தது. "இந்தா பாரு புள்ள கண்ணுமணி... அந்த நெறையை ஒழுங்கா எடுத்துடு". கண்ணுமணி கூடையுடன் மேலே ஏறினாள்.

அன்று சம்பளம் என்பதால் அரை வேலை. அப்போது எல்லாப் பெண்களும் மடுவத்தைத் தேடி நடந்தனர். "அஞ்சலி... மெதுவா புள்ள ரோட்டுக்கு ஏறிவா" என்று காத்தாயி கூறினாள். அஞ்சலியின் கூடையில் 25 கிலோ கொழுந்து அவளை மேலே ஏறவிடாமல் தடுத்தது.

அஞ்சலி தன் தலையைக் குனிந்து உடம்பை வளைத்து மேலே ஏற முயன்றாள். அவளின் பாரம் நிறைந்த கூடையின் கயிறு நழுவி அவளின் கழுத்துப் பகுதியில் இறுகியது. பின்னே விழக் கூடாது. விழுந்தால் பலமாக அடிபடும் என எண்ணி முன்னே குனிந்தாள். அஞ்சலியின் கூடைக் கயிறு பலமாகக் கழுத்தை இறுக்கியது. மூச்சு முட்டியது. அவள் பின்புறம் அடிபட விழுந்தாள். கண்களில் மயக்கம். ஏதோ சிறிய சத்தம் வாய் வழியே கேட்டது. காத்தாயி, "ஐயோ அஞ்சலி என்னாச்சு?" என்றபடி ஓடி வந்தாள். அஞ்சலிக்கு அது கேட்கவில்லை. ஆனால் செட்டியின் காதுகளுக்குக் கேட்டது. புயலெனப் பறந்து வந்தான். அஞ்சலியின் கழுத்திலே இறுகியிருந்த கயிற்றை, கொழுந்து நிறைந்திருந்த கூடையைத் தூக்கிக் கழற்றினான். "அஞ்சலி! அஞ்சலி!" என்று அவளின் கன்னத்திலே மெல்லத் தட்டினான். காத்தாயி கொண்டு வந்த தண்ணீரை அவள் முகத்திலே தெளித்தான். அஞ்சலி அசைவற்றுக் கிடந்தாள். அவளைத் தூக்கினான். அவள் உடல் துவண்டது. "அஞ்சலீ..." என்று அவன் அலறிய சத்தம் அந்த மலை முகட்டில் மோதி எதிரொலித்துக் கொண்டிருந்தது. செட்டியின் மனைவியின் உடல் வீதியில் கிடத்தப்பட்டிருந்தது. "என் கண்ணு மணி போயிட்டா... என் கண்ணுமணி போயிட்டா..." என்று வீதியில் வருபவர்களிடம் அழுதவண்ணம் கூறிக் கொண்டிருந்தான் செட்டி.

அஞ்சலியின் கூடைக் கயிறு அவளைக் கொன்ற வீராப்பில் கூடையிற் தொங்கிக் கொண்டிருந்தது.

**த. கிரிசாந்த் – பசறை**

# ஒரு கைதியின் டைரி

## 10

"இல்லைம்மா... யோசித்துக் கொண்டிருந்தேன்."

"யாரைப் பற்றிப்பா?"

"நாளைக்கு நான் ஆஜராக வேண்டிய கேஸைப் பற்றிம்மா. நீ ஏன் தூங்கவில்லை அபிதா?"

"இன்டர்நெட்டில் சாட் பண்ணிக் கொண்டிருந்தேன் டாடி. அப்புறம் ஈ மெயிலை செக் பண்ணிக் கொண்டிருந்த போது என் பெயருக்கு ஒரு விநோதமான மெயில் வந்திருக்கிறது, டாடி...."

"என்ன?" பரமேஷ்வர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'நாளை உன்னைக் கடத்தப் போகிறேன்... முடிந்தால் உன் அப்பாவைத் தடுக்கச் சொல்... - சி. எம்...'

பரமேஷ்வருக்கு எதிரே அபிதா அமர்ந்தாள்.

"சி.எம். என்றால் யார் டாடி? முதலமைச்சரா?"

சி.எம்... சி.எம்... பரமேஷ்வருக்கும் புரியவில்லை.

"தெரியவில்லையேம்மா... நீ ஒன்று செய். நாளைக்கு வீட்டோடு இரு... எங்கேயும் வெளியே போக வேண்டாம்."

"என்ன டாடி நீங்கள்? ஈ மெயிலுக்கெல்லாம் போய் பயப்படுகிறீர்கள்?" அபிதா சிரித்தாள். "உங்கள் காரில் ஸ்டிக்கர் ஒட்டியவன் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா?"

ஸ்டிக்கர் ஒட்டியது வரைதான் இவளுக்குத் தெரியும், வீடியோ காஸெட் பார்த்தது பற்றி மனைவி ஜானகி பெரிய மனது பண்ணி



இவளுடன் பகிர்ந்து கொள்ளவில்லை. என்பதே அவருக்கு பெரிய ஆறுதலாக இருந்தது.

"போலீஸில் சொல்லியிருக்கிறேன், அபிதா. இப்போது உனக்கு ஈமெயில் வந்திருக்கிறது என்கிறாய்... இது பற்றியும் சொல்லி விடுகிறேன். அவர்கள் கண்டுபிடிக்கட்டும்."

"ஈ மெயிலை ஏதாவது ஒரு பிரவுஸிங் சென்டரிலிருந்து யார் வேண்டுமானாலும் அனுப்பலாமே டாடி... எவனாவது விளையாட்டிற்கு அனுப்பியிருப்பான். அதைப் பற்றி கவலைப் படாமல் தூங்குங்கள்."

அபிதா பரமேஷ்வரின் முன் தலை முடியை லேசாகக் கலைத்து விட்டு எழுந்தாள்.

"அபிதா... நீ நாளைக்கு எங்கேயும் போக வேண்டாம்."

"ஒரு கிரேட் கிரிமினல் அட்வகேட்டின் மகள் ஒரு அற்பமான ஈமெயிலுக்கு பயப்படலாமா? குட்நைட்."

அவள் சட்டென்று போய் விட்டாள்.

பரமேஷ்வர் அடுத்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

சி. எம். என்றால் யார்?

டி.எஸ்.பி.யிடம் பேசலாம் என்று செல் ஃபோனை எடுத்தபோது இன்கமிங் காலிற்கான வெளிச்சம் ஒளிர்ந்தது.

காதில் வைத்தார்.

"ஹாய் பரமேஷ்!"

அவனேதான்!

"உன் மகளை இன்றைக்கே நன்றாகப் பார்த்துக் கொள்... நாளைக்கு அவள் என் வசம் இருப்பாள்..."

"ஏய் யார் நீ?"

"என் பெயர் ஏய் இல்லை... சி.எம்!"

ஃபோன் தொடர்பு அறுந்தது.

பரமேஷ்வர் தன் உள்ளங்கையெல்லாம் வியர்த்திருப்பதைப் பார்த்தார். ச்சே... ஏன் இப்படி பயப்படுகிறேன்?

டி.எஸ்.பி. கஜேந்திரனை ஃபோனில் பிடித்தார்.

"சி. எம். என்றா சொன்னான்? நாளைக் காலை பத்து மணிக்கு உனக்கு விவரங்கள் தருகிறேன்" என்றார் கஜேந்திரன்.

"கஜா... இன்னொரு விஷயம்."

"என்ன?"

"என் மகளைக் கடத்தி விடுவேன் என்று ஈமெயில் அனுப்பியிருக்கிறான். அவள் தைரியசாலிதான் ஆனாலும்"

"ஆனாலும் அப்பன் மனசு பயப்படுகிறதாக்கும். கவனித்துக் கொள்கிறேன்... எத்தனையோ வக்கீல்கள் தூக்கத்தைக் கெடுத்தவன் நீ. இப்போது நீயே தூக்கமில்லாமல் இருப்பது ஆச்சரியமாயிருக்கிறது."

"கோர்ட்டில் எத்தனை எமன்களை வேண்டுமானாலும் சந்திப்பேன். கஜா... ஆனால் பெண்டாட்டிக்கு காஸெட் அனுப்பி மகளுக்கு ஈமெயில் அனுப்பி குடும்பத்திற்குள் நுழைந்து விட்டால் அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

"நாங்கள் எல்லாம் இருக்கிறோம். கவலைப்படாதே... தூங்கு..."

பரமேஷ்வர் ஃபோனை மெல்ல அணைத்தார்.

★★★

கிருஷ்ணதாஸ் காரிலிருந்து இறங்கினார். சைகை செய்ததும், டிரைவர் காரை பார்க்கிங் பகுதிக்கு ஓட்டிப் போனான்.

கிருஷ்ணதாஸ் மணிக்கட்டு நேரத்தைப் பார்த்தார். விடிகாலை 5.45

கடற்கரைச் சாலையில் இந்த நேரத்திலேயே நிறைய வாகனங்கள் வந்திருந்தன.

காலையில் நடை பயில்பவர்களுக்காக ஒதுக்கப்பட்ட நடைபாதையில் பல்வேறு மனிதர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணதாஸ் அந்தக் கூட்டத்தோடு நடப்பதில்லை. கடற்கரை மணல்வெளியை ஒட்டி உட்புறம் இருந்த சாலையில் அவர் நடப்பது வழக்கம். அங்கே அவர் தோளோடு யார் தோளும் இடிக்காது. பரிச்சயமான முகங்கள் எதிர்ப்பட்டு தேவையற்ற பேச்சு கொடுக்காது.

காலை நேரத்து குளிர் இதமாயிருந்தது. தொடுவானத்தை கடல் நனைத்துக் கொண்டிருந்தது. ஆரஞ்சு சூரியன் மேக விளிம்புகளில் வர்ணம் பூசி எழும்பிக் கொண்டிருந்தது.

கிருஷ்ணதாஸ் நடப்பதற்கென்றே பிரத்தியேகமாக தருவித்திருந்த பருத்தி உடை அணிந்திருந்தார். கடற்காற்று குளிராகவும், சூரிய ஒளி ஒத்தடம் கொடுப்பது போலவும் இருக்க கிருஷ்ணதாஸ் நடக்கத் துவங்கினார்.

அவரைப் போலவே உட்சாலையைத் தேர்ந்தெடுக்கும் வேறு சிலரும் அந்தச் சாலையில் அங்கங்கே நடந்து கொண்டிருந்தனர்.

கிருஷ்ணதாஸ் இருநூறடி நடந்திருப்பார்.

கடற்கரை மணல் வெளியிலிருந்து ஏதோ நிழலாய்த் தாவி வருவது போல் தோன்ற அவர் அந்த திசையில் திரும்பினார்.

விர்ர்ர் என்று ஒரு மடக்கிய முஷ்டி பறந்து வந்தது. அவர் சுதாரிக்கும் முன் அது அவருடைய முகத்தில் மோதியது.

கிருஷ்ணதாஸ் எந்த வயதிலும் அப்படி ஒரு மோதலை எதிர்கொண்டதே இல்லை.

மூக்கு ஒட்டைகளில் ரத்தம் எட்டிப் பார்த்தது. தடுமாறி அந்த தார்ச் சாலையின் சொரசொரப்பில் அவர் மல்லாந்து விழுந்தார்.

அவர் முகத்தில் கையை வீசியவன் இப்போது அவர் அருகே ஒரு கோபுரம் போல் நின்றான். அவருடைய கோணத்திலிருந்து பார்த்தபோது அவனுடைய முக அமைப்பு புரியாமல் முகவாயின் கீழ்ப் பகுதிதான் தெரிந்தது. அந்தக் கோணத்தில் அவனுடைய கால் எழும்பிய போது கப்பலில் இயங்கும் கிரேன் எழும்பினாற் போலிருந்தது.

பாதுகாப்புச் செயலாக அனிச்சையாக அவர் கை உயர்ந்து அவனது தாக்குதலைத் தவிர்க்கப் பார்க்க, அந்த பூட்ஸ் கால் ஓங்கியது. வேகமாக இறங்கியது அவருடைய முழங்கையைத் தாக்கி நெஞ்சில் தொம்மென்று இறங்கியது.

கிருஷ்ணதாஸின் கண்முன் பூச்சிகள் பறந்தன.

### எழுதுவது சபா

"ஹெல்ப்!" என்று கத்துவதற்கு அவர் வாய் திறந்தவுடன் பூட்ஸ்கால் அந்த வாயில் ஒரு முறை 'தப்'என்று முத்திரை குத்தியது.

அவருடைய குரல்கேட்டு எங்கிருந்தோ யார் யாரோ ஓடிவர ஆரம்பிக்க, அவரைத் தாக்கியவன் சரேல் என்று திரும்பினான்.

அவரை விட்டு விட்டு ஓடினான்.

★★★

தனியார் மருத்துவமனை.

. கிருஷ்ணதாஸின் முகத்தை டாக்டர்கள் கையாண்டனர்.

மூக்கு எலும்பு விரிசல் விட்டிருந்தது.

மேல் வரிசைப் பற்களில் முன் பற்கள் இரண்டும் உடைந்து உள்வாங்கி கன்னத்துத் தசையைக் கிழித்திருந்தன. வாய்க்குள் மணல், கற்கள் ஒட்டிக்கொண்டிருந்தன.

(கைதியின் கதை தொடரும்)


# ஆறுமனமே ஆறு!

## உயிர்கொல்லி எயிட்ஸ்

சுகந்தனுக்கு இரவு முழுவதும் கடுமையான காய்ச்சல். அவன் தூக்கமின்றி படுக்கையில் முனகிக் கொண்டேயிருந்தான். அவன் மனைவி சித்திரா அடிக்கடி எழுந்து கணவனைத் தொட்டுப் பார்த்து பனடோல் மாத்திரைகளைக் கொடுத்தாள். காய்ச்சல் விட்டபாடில்லை.

"விடியட்டும். விடிந்த பின் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு போகலாம்"என்று எண்ணியவாறு சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள்.

விடிந்ததும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்காக காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த போது சுகந்தனுடன் வேலை



செய்யும் சேகர், சுதாகர், ரஜனி மூவரும் சுகந்தனை வேலைக்குக் கூட்டிச் செல்ல வந்தார்கள்.

"அக்கா! சித்திரா அக்கா! சுகந்தன் இன்னும் வெளிக்கிடயில்லையே." என்றான் சேகர்.

"சேகர்! இவருக்கு இரவிரவாகக் கடுமையான காய்ச்சல். பனடோல் குடுத்தும் குறையயில்லை. இண்டைக்கு வேலைக்கு வரமாட்டார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேணும்"

"என்னக்கா? இன்னும் சுகந்தன் எழும்பவில்லையே சுகந்தன்! சுகந்தன்" என்றவாறு சேகர் சுகந்தன் படுத்திருந்த பாயில் போய் இருந்து அவனைத் தொட்டுப் பார்த்தான்.

"என்னக்கா! நெருப்பாயெல்லே காயிது. சுகந்தன்! எழும்பனப்பா. முகத்தைக் கழுவி தேத்தண்ணியைக் குடிச்சிட்டு ஆஸ்பத்திரிக்குப் போவம் எழும்பு" என்றான் சேகர்.

சுதாகரும் ரஜனியும் படுக்கையிலிருந்த சுகந்தனைத் தூக்கி எழுப்பினார்கள்.

சித்திரா வெந்நீர் கலந்து கொண்டு வந்தாள். சுகந்தன் முகம் கழுவி துடைத்துக் கொண்டதும் சித்திரா எல்லாருக்கும் தேனீர் வழங்கினாள்.

சேகர், சுதாகர், ரஜனி மூவரும் சுகந்தனை மதுரை அரச மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

சுகந்தன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். கடுமையான காய்ச்சலுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டாலும் காய்ச்சல் விடவில்லை. இரத்தம், பரிசோதனை செய்யப்பட்டு எச்.ஐ.வி. பொசிற்றிவ் என்று வைத்தியர்களால் உறுதி செய்யப்பட்டது.சுகந்தன் வைத்தியர்களின் அறிக்கையைப் பார்த்ததும் கலங்கிப் போய்விட்டான்.

எயிட்ஸ் நோயுள்ள ஒருவருக்குப் பாவித்த ஊசியை வேறொருவருக்குப் பாவித்தால்; அல்லது எயிட்ஸ் நோயுள்ள ஒருவருடன் ஆணாயினும் பெண்ணாயினும் உடலுறவு வைத்துக் கொண்டால், அல்லது தன்னினச் சேர்க்கையினால் எயிட்ஸ் நோய் பரவும். சுகந்தனுக்கு எவ்வாறு எயிட்ஸ் ஏற்பட்டிருக்கலாம் என்பதை வைத்தியர்கள் சுகந்தனை விசாரித்ததில் அறிந்து கொண்டார்கள். சுகந்தன் தொடர்ந்து எவ்வாறான கட்டுப்பாடுகளுடன் இருக்க வேண்டும், மனைவியுடனான உடலுறவு, வேறெவருடனுமான உடலுறவு, மனைவி, பிள்ளைகளுக்குரிய பரிசோதனை போன்ற பல ஆலோசனைகளை வழங்கினர்.

காய்ச்சல் ஓரளவு குணமானதும் மருத்துவமனையிலிருந்து வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டான். கணவனைப் பார்க்க வந்த சித்திராவை வைத்திய அதிகாரி அழைத்து

"உங்கள் கணவருக்கு எச். ஐ. வி. பொசிற்றிவ். எயிட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளது. நீங்கள் அவருடன் உறவினை வைத்துக் கொண்டால் அது உங்களையும் பாதிக்கும் மிக அவதானமாய் இருங்கள்" என்று கூறினார். சித்திராவுக்கு உலகமே இருண்டு விட்டது போல் இருந்தது.

"அத்தோடு இந்தக் கடிதத்தை உங்கள் முகாம் நலப் பணியாளரிடம் கொடுங்கள்" என்று ஒட்டிய கடிதம் ஒன்றைக் கொடுத்தார்.

### எஸ்.பி.லெம்பட்

கடிதத்தைப் பெற்றுக் கொண்டு சுகந்தனும், சித்திராவும் முகாமுக்கு வந்தனர். சுகந்தன் இடிந்து போய் உட்கார்ந்திருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகிக் கொண்டேயிருந்தது. மனைவி சித்திராவை நிமிர்ந்து பார்க்கவே மனம் கூசினான்.

சித்திராவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கணவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு மருத்துவமனை வைத்திய அதிகாரி, முகாம் நலப்பணியாளரிடம் கொடுக்கும்படி கொடுத்த கடிதத்தை எடுத்துக் கொண்டு சென்று நலப் பணியாளரிடம் கொடுத்தாள்.

நலப் பணியாளர் வைத்திய அதிகாரியின் கடிதத்தைப் பார்த்தார்.

"உங்கள் முகாமில் வாழும் சுகந்தனுக்கு எச். ஐ. வி. பொசிற்றிவ். எயிட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளது. முகாமில் வேறு ஆட்களுக்கும் இருக்கலாம். இந்நோய் வராது தடைசெய்யக் கருத்தரங்குகளுக்கு ஒழுங்கு செய்க."


கடிதத்தைப் பார்த்த நலப்பணியாளர் கடிதத்தோடு எனது அலுவலகத்தில் வந்து என்னைச் சந்தித்தார். கடிதத்தைக் காட்டினார்.

"சுகந்தன் முகாமில்தான் இருக்கிறார். ஒரு தடவை நீங்கள் வந்து அவரைப் பார்க்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரோடு சுகந்தனின் முகாமுக்குச் சென்றேன். நாம்அங்கு சென்ற போது சுகந்தனும் மனைவி சித்திராவும் அழுதபடி சோகமே உருவாக சோர்ந்து போய் இருந்தனர்.

(தொடர்ந்து வரும்...)

நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எமது பரஸ்பர நம்பிக்கை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் ஏராளமான காரியங்கள் நடைபெற்றாக வேண்டும். முதலில் எங்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான துன்புறுத்தல்களையும் நிதி சேகரிப்புகளையும் நிறுத்த வேண்டும்.



**கே:- உங்களுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் கடந்த ஏப்ரல் மாதம் ஒரு உடன்பாடு காணப்பட்டது. ஆனால் கடந்த சில நாட்களாக கிழக்கில் இடம்பெற்ற வன்முறைகளின் பின்னர் அந்த உடன்பாட்டின் நிலை என்ன?**

ப:- அன்று கூட்டறிக்கை ஒன்றின் மூலம் எமக்கிடையிலான உடன்பாட்டைப் பகிரங்கப்படுத்தினோம். தமிழ் முஸ்லிம் உறவில் இந்த ஒப்பந்தம் ஒரு முக்கிய மைல்கல் என அன்று தமிழ், சிங்கள மக்களும் குறிப்பாக முஸ்லிம் மக்களும் கருதினார்கள். ஆனால், துரதிஷ்ட வசமாக அன்றைய கூட்டறிக்கையின் ஊடாக வழங்கப்பட்ட சில உத்தரவாதங்கள் அமுலாகவில்லை. வாக்குறுதிகளைப் புலிகள் இயக்கம் மீறிச் செயற்பட்டுள்ளது.

**கே:- எவ்வாறான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை?**

ப:- குறிப்பாக முஸ்லிம் மக்களிடமிருந்து பலவந்தமான நிதி சேகரிப்புத் தொடர்பான உடன்பாடு அமுலாகவில்லை.

**கே:- கப்பம் வாங்குதல் என்றால்...?**

ப:- நாங்கள் அதனை நிதி சேகரிப்பு என்றே பயன்படுத்தினோம். ஏனெனில் புலிகள் அதனை வரி அறவீடு என்கிறார்கள். தமிழ் மக்களின் விடுதலைக்காக மாத்திரம் போராடும் ஒரு அமைப்பு முஸ்லிம்களிடமிருந்து வரியாகவோ கப்பமாகவோ பணம் வசூலிப்பது நியாயமில்லை. நாம் இது குறித்துப் பிரபாகரனிடம் எடுத்துக் கூறினோம். இவ்வாறான நிதி சேகரிப்புகளை நிறுத்தும்படி அவரிடம் கேட்டோம். அந்தக் கோரிக்கை உரிய முறையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தொடர்ச்சியாக மீறப்பட்டு வந்தது. இது குறித்து புலிகளின் வன்னித் தலைமைக்குப் புகார் செய்தோம். கண்காணிப்புக் குழுவுக்கும் புகார் செய்தோம். ஆனாலும் நிலைமை சீராகவில்லை. சில சந்தர்ப்பங்களில் மட்டும் நிலைமை ஓரளவு சீர் செய்யப்பட்டாலும் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்ந்தன.

நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இன்னொரு தடவை முஸ்லிம்களின் பாதுகாப்பிற்குப் பிரச்சனை ஏற்பட்டால், புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கும்வரை அவர்களுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டாம் எனக் கூற வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

**கே:- இதன் காரணமாக புலிகளுக்கும் உங்களுக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடு முறிந்து விட்டதாகக் கருத முடியுமா...?**

ப:- அந்த நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எமது பரஸ்பர நம்பிக்கை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் ஏராளமான காரியங்கள் நடைபெற்றாக வேண்டும். முதலில் எங்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான துன்புறுத்தல்களையும் நிதி சேகரிப்புகளையும் நிறுத்த வேண்டும்.

இதற்கு மேலாக இப்போது முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சனைகளும் எழுந்துள்ளன.

**கே:- முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு யாரிடமிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது?**

ப:- அதற்கு இலகுவாக முஸ்லிம்களை நோக்கியே விரல் நீட்ட முயற்சிக்கிறார்கள். முஸ்லிம்களே முதலில் ஹர்த்தால் ஏற்பாடு செய்தார்கள். அதனையடுத்தே வன்முறை தோன்றியது என்று கூற முற்படுகிறார்கள். ஒன்றை ஞாபகம் வைத்திருக்க வேண்டும். ஒரு பக்கத் தேவையை அடிப்படையாக வைத்து இதுவரையில் 11 ஹர்த்தால்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை நடத்தியது புலிகள் என்பதை யாவரும் அறிவர். அவற்றில் பலவந்தமான முறையில் முஸ்லிம்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். மறைமுகமாக இதற்கான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டது. முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சனை இருக்கையில் ஒரு பக்கத் தேவையின் நிமித்தம் மேற்கொள்ளப்படும் ஹர்த்தால்களில் அவர்களைப் பலவந்தமாக ஈடுபடுத்துவது முஸ்லிம்களின் சுய கௌரவத்திற்குப் பலத்த அடி. அதனைப் பொறுத்துக் கொண்டு இந்த ஹர்த்தால்களுக்கு இதுவரையில் பூரண ஆதரவ வழங்கப்பட்டது.

**கே:- கிழக்கு நிலைமை இப்போது உங்களால் கட்டுப்படுத்த முடியாத அளவில் இருப்பதாகக் கூறப்படுகிறதே?**

ப:- தங்காலைச் சம்பவத்தை வைத்து அங்கு அரசாங்கத்தின் கட்டுப்பாடு கிடையாது என்று கூறுவது போலத்தான் இதுவம். இது பிழையான கருத்து. ஒன்றைக் குறிப்பிட வேண்டும், நாம் ஒரு அரசியல் கட்சி. ஆயுதம் ஏந்திய அரசியல் இயக்கம் அல்ல. எமக்கும் புலிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புலிகள் பலம் வாய்ந்த ஆயுதம் ஏந்திய ஒரு இயக்கம். இப்போது அது அரசியல் ரீதியில் பலம் பொருந்திய அமைப்பாக மாற முயற்சிக்கிறது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும் அளவுக்கு இன்று அவர்கள் நிலைமையைத் தமதாக்கிக் கொண்டுள்ளார்கள். முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒரு அரசியல் கட்சி. உத்தரவு முறையைக் கடைப்பிடிக்கும் ஒரு அமைப்பல்ல.

**கே:- இத்தகைய பின்னணியில் பொது இடங்களில் இருந்து படையினரை வெளியேற்றுவது குறித்தும் பிரச்சனை எழுந்துள்ளதா...?**

ப:- ஆம்... இப்போதைய நிலைவரப்படி எமது பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள்.

**கே:- ஆனால், இராணுவ முகாம்களை அகற்றி வேறு இடங்களில் அவற்றை அமைக்க வேண்டும் என்பதில் பிரதமர் உறுதியாக இருக்கிறாரே...?**

ப:- மாற்றுத் திட்டம் ஒன்றை வழங்கி விட்டு முகாம்களை அகற்றினால் பிரச்சனையில்லை. மாற்று வழி ஒன்றைத் தந்து விட்டுத்தான் அதனைச் செய்ய வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் இந்தப் பிரச்சனை மேலும் வலுவடையும். அது தவிர இந்த நிலைமை மேலும் பாரதூரமானால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்யுமாறு கோர வேண்டி வரும்.

**கே:- இப்போது அவ்வாறான கோரிக்கை ஒன்றை நீங்கள் முன் வைக்கவில்லையா...?**

இன்னொரு தடவை முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் பிரச்சனை ஏற்பட்டால் ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கோர வேண்டி ஏற்படும் என்றுதான் நாம் கூறுகிறோம்.

நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இன்னொரு தடவை முஸ்லிம்களின் பாதுகாப்பிற்குப் பிரச்சனை ஏற்பட்டால், புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரை அவர்களுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டாம் எனக் கூற வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

---



# காற்றுவாக்கில்... 6

## தனியார் மயமாக்குதல்

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நாட்டின் தற்போதைய இக்கட்டான பொருளாதார நிலை குறித்து விளக்கமளித்த பின்னர், நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி அவர்கள் அந்நிலையிலிருந்து மீட்சி பெறுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து அறிவித்துள்ளார். அவற்றுள் ஒன்று அரச ஊடகத்துறை சம்பந்தப்பட்டதாகும். அதாவது, நட்டத்தில் இயங்கும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் தனியாருக்கு விற்பனை செய்யப்படும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டும் நட்டத்தில் இயங்கி வருகின்றன என்பது புதிய சங்கதியல்ல.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவையும் நட்டத்திலேயே இயங்குகின்றது. இவ்வாண்டில் முதல் ஐந்து மாதங்களில் ஏற்பட்ட நட்டம் சுமார் ரூ. 17 மில்லியன் என்பது தெரியவந்துள்ளது. இச் சேவை ஒரு பொது (அரச) கம்பனி; அதன் 100% பங்குகளைத் திறைசேரியே கொண்டுள்ளது. ஆக, புதிய அறிவிப்பின் மூலம் இம் மூன்று நிறுவனங்களும் தனியாருக்கு விற்பனை செய்யப்படும் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டும். தனியார் மயமாக்கலுக்கான முஸ்தீபுகள் பற்றி ஏற்கனவே 'காற்றாடி' இங்கு குறிப்பிட்டுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்த் தேசிய சேவைக்கு ஏற்பட்ட கதி இரகசியமானதல்லவே. இரவிலே, மிக அமைதியான நேரத்தில், ஒரு மணிநேர இசைக் கச்சேரியைக் கேட்டு மகிழ்ந்த அந்தக் காலம் இனி எப்போதுதான் வருமோ? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டதே!

## பின்னணி என்ன?

ஆளும் கட்சிக்கு, வேறு விதத்தில் கூறுவதானால், அரசாங்கத்திற்கு அரச வானொலியும், அரச தொலைக்காட்சிகளும் இனித் தேவையில்லையா? எந்த அரசாங்கமுமே இவ்விரண்டு சேவைகளையும் தனது பிரசாரப் பீரங்கிகளாகப் பாவித்துவருகின்றன. ஆனால், இந்த அரசாங்கத்திற்கு அது தேவையற்றுப் போனது ஏன்? இதில் விஷயம் இல்லாமலில்லை. இந்நிறுவனங்களைப் பொறுப்பேற்ற புதியவர்கள் நிறுவனங்களின் வங்குரோத்துத் தன்மையை உரியவர்களிடம் எடுத்துக் கூறி, சிறிது காலத்திற்கு நிதியுதவி கோரினார்களாம். 'கஜானா' காலி, எங்கிருந்து நிதி தருவது? எனப் பதில் வந்ததாம். அதனுடன் சேர்ந்து சொல்லப்பட்ட இன்னொரு காரணம் தான் சீர்திருத்தம் என்ற அடிப்படையிலான தனியார் மயமாக்கலுக்கு வித்திட்டது என்பது 'காற்றாடி'யின் கணிப்பு. அந்தக் காரணம் இதுதான்; "எமது அரசாங்கம் பதவிக்கு வர இந்த நிறுவனத்தினர் உதவி செய்தார்களா? இல்லையே, எனவே அவை எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. எமக்குத்தான் தனியார் வானொலி, தொலைக்காட்சிகள் இருக்கின்றனவே, அவை போதும்" இக் கூட்டுத்தாபனங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் எல்லாமே இக்கருத்தினைப் பின்னணியாகக் கொண்டவைதான் என்பது புலனாகும்.

## ஒளிப்பதிவில் தாமதம்

நாட்டின் பிரதமர் மக்களுக்கு தற்போதைய பொருளாதார நிலை பற்றித் தொலைக்காட்சியில் தோன்றி விபரம் தந்தார் அல்லவா? இப்பேச்சு கொழும்பிற்கு வெளியே ஒளிப்பதிவு செய்யப்பட்டதாம். அந்த ஒளிப்பதிவைச் செய்வதற்கு அரச தொலைக்காட்சியினர் சுமார் 90 நிமிடங்கள் தாமதமாகத்தான் சென்றார்களாம்.

இதனால் சீற்றமடைந்த பிரதமர், "நீங்கள் போகலாம்" என்று கூறிவிட்டுத் தனியார் தொலைக்காட்சியினரை வைத்து ஒளிப்பதிவைச் செய்தாராம். ஒளிப்பதிவுக் குழுவினரை நேரகாலத்திற்கு அனுப்பி வைக்கக்கூடவா புதிய அதிகாரிகளுக்கு முடியவில்லை?

ஒரு வேளை தனியார் மயமாக்கலுக்கு உரமூட்டுவதற்குப் பிற்புலமாக இவர்கள் செயற்படுகிறார்களா?

## புதிய சுவர்ணஒலி?

'கலைஒலி', 'சுவர்ண ஒலி'யாகிப் பின்னர் 'ஒலி' இழந்த நிலை ஏற்பட்டு, வாய்மூடி மௌனியாகிவிட்டது. ஆனாலும், அது மீண்டும் தொடங்கப்படுமாம் ஆனால், அதற்குரிய அறிகுறிகள் எதனையும் காணோம். இது சம்பந்தமாகக் 'காற்றுவாக்கில்' சேதி ஒன்று கிடைத்துள்ளது. இலங்கை வானொலித் தமிழ்த் தேசிய சேவை அலைவரிசைகளைப் பெற்று, தமிழ் (வணிகச்) சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு யாழ் நகரில் 'புத்தாண்டின் பெருணால்' கொண்டாடியவர்களினால் திரைமறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவாம். எரிகிற வீட்டில் சுருட்டுப்பற்றவைப்பது வணிகத் துறையில் ஒன்றும் புதியதல்ல. அப்படியானால் மிஞ்சப்போவது 'தென்றல்' மட்டும்தானா?

## அந்த ஒலிபரப்பிகள்!

ஊடகத்துறை அமைச்சர் சமீபத்தில் யாழ் நகருக்கு விஜயம் செய்திருந்தார் அல்லவா? அப்பொழுது ஒரு கூட்டத்தில் வட பகுதி மக்கள் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்கக் கூடியவாறு இரண்டு ஒலிபரப்பிகளை (Transmitters) அங்கு நிறுவப்போவதாக அறிவித்திருந்தார். நல்ல விஷயம். ஆனால்,

காற்றாடி

இது எப்பொழுது நடக்கும்?

கூட்டுத்தாபனத்திடம் பணமில்லை; திறைசேரியில் பணமில்லை. வேறு எங்கிருந்து பணத்தைப் பெறுவது? போகட்டும், நல்லது நடந்தால் சரிதான்.

## மலைநாட்டுச் சேவையெங்கே?

கண்டியின் 'மஹநுவர சேவைய' என்ற சிங்கள மொழிச் சேவையில் தமிழில் ஒலிபரப்பான மலைநாட்டுச் சேவை, குற்றுயிரும் குறையுயிருமாகத் தத்தளித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அதன் குரல்வளையை நெரித்துச் சாகடித்துவிட்டார்களாம். அதாவது, அச்சேவையில் ஒலிபரப்பான தமிழ் நிகழ்ச்சிகள் எல்லாமே நிறுத்தப்பட்டுவிட்டன. இது பற்றிக் கேள்விப்பட்ட ஊடகத்துறை அமைச்சர் அச்சேவையைத் தொடருமாறு உத்தரவிட்டார். ஆனால், அங்கு அதிகார மமதையில் கருமமாற்றிக் கொண்டிருக்கும் ஒருவர் அமைச்சரின் உத்தரவையும் அசட்டை செய்துவிட்டுத் தன்னிச்சையாக நடக்கிறாராம்.

வேண்டுமென்றால்,ஒரு தமிழ் அறிவிப்பாளர் சிங்கள மொழி அறிவிப்பாளருடன் சேர்ந்து சிங்களத்திலும் தமிழிலும் பேசி பகல் 11 முதல் நண்பகல் 12 மணிவரை நிகழ்ச்சியை நடாத்தலாம் என்று சொன்னாராம். ஆகக்குறைந்தது மாலை 6 மணிமுதல் 7 மணிவரையேனும் தமிழில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப இடந்தாருங்கள் என்று அமைச்சருக்கு வேண்டிய ஒருவர் மன்றாடியும் அது நிராகரிக்கப்பட்டுவிட்டதாம். இலங்கை வானொலியில் தமிழுக்கு உரிய இடம் இதுதானா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

## "எனக்கு என்ன இலாபம்?"

அரச தொலைக் காட்சியில் இப்பொழுது பல (தமிழ்) புதுமுகங்கள் தோன்றுகின்றன. ஒரு சிலர் செய்திகளை நன்றாகவே வாசிக்கிறார்கள். இந்தப் புதியவர்கள் மத்தியில், இப்பொழுது பெரும் பீதி ஏற்பட்டுள்ளதாம்.

இவர்களைத் தெரிவு செய்வதற்குத் தாமே பொறுப்பு என்று பீற்றிக்கொள்ளும் ஒருவர், அவர்களுக்கு இடைஞ்சல்களைக் கொடுத்துவருகிறாராம். தமது நியமனக் கடிதங்கள் பற்றிக் கேட்கப் போனால், அவ்வாறு நியமனக் கடிதங்களை வழங்கினால் தனக்கு என்ன இலாபம்? என்று கேட்கிறாராம். அவர் கேட்கும் அந்த 'இலாபத்தின் அர்த்தம் என்ன?

தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பதற்கும் இலாப நட்டக் கணக்கு எதிர்பார்க்கப்படுகிறதா? நிர்வாகம் இதைப் பொருட்படுத்துவது இல்லையா?

# ஸ்போர்ட்ஸ்

## விம்பிள்டன் ஆண்கள் ஒற்றையர் ஆட்டம்

## 15 வருடங்களின் பின்

## அவுஸ்திரேலிய வீரர் சாம்பியன்



கடந்த ஞாயிறு (07-07-2002) இத்தாலியில் நடைபெற்ற ஆண்களுக்கான டென்னிஸ் ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியிலே அவுஸ்திரேலிய வீரர் லெய்டன் ஹேவிட்(21வயது) 6-1, 6-3, 6-2, என்ற கணக்கிலே ஆர்ஜென்டினா வீரர்டேவிட் நல்வண்டினைத் (20 வயது) தோற்கடித்துக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார். 1987 க்குப் பின் அவுஸ்திரேலிய வீரர் ஒருவர் விம்பிள்டன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளை சனிக்கிழமை இடம் பெற்ற பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியிலே அமெரிக்க வீராங்கனை செரினா வில்லியம்ஸ் தனது அக்காவான லீனஸ் வில்லியம்ஸைத் தோற்கடித்துக் கிண்ணத்தை வென்றெடுத்தார். பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்திலே வில்லியம்ஸ் சகோதரிகள், போலா செளறீஸ் (ஆர்ஜென்டினா)- வேர்ஜினா ருவானோ (ஸ்பெயின்) ஜோடியை 6-2, 7-5 என்ற கணக்கிலே தோற்கடித்து இரட்டையர்களுக்கான கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டனர்.

## இந்தியா–இங்கிலாந்து அணிகள் முக்கோணத் தொடரில் இறுதிப் போட்டிக்குத் தெரிவு!

இங்கிலாந்தில் தற்போது நடைபெற்று வரும் நெற்வெஸ்ற் கிண்ணத்துக்கான முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலே இந்தியா, இங்கிலாந்து அணிகள் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன. இலங்கை, இங்கிலாந்து, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் முதற் சுற்றிலே 6 போட்டிகளில் பங்கேற்க வேண்டிய நிலையில் இந்திய அணி 4 போட்டிகளில் பங்கேற்று தோல்வியே அடையாது 14 புள்ளிகளுடனும், இங்கிலாந்து அணி 5 போட்டிகளில் பங்கு பற்றி 10 புள்ளிகளுடனும் இலங்கை அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 4 புள்ளிகளுடனும் இருக்கும் நிலையில் இறுதிப் போட்டியில் பங்கு பெறும் வாய்ப்பு இலங்கை அணிக்கு இல்லாது போயிற்று.

# ஊடலும் கூடலும் இன்பமே...!

"ராகினி, அதோ பார்த்தாயா... அந்தப் புறாக்கள் ஒன்றுக்கொன்று பேசிக் கொள்வதை" என்று பழைய காலத் திரைப்படங்களின் பாணியில் பேசினான் நகுலன்.

ராகினியும் அதே பாணியில் பேச முற்பட்டு, "நாதா, பார்ப்பதற்காக யாரும் பேசுவதில்லையே... கேட்பதற்குத்தானே பேசுகிறார்கள்..." என்றாள்.

"அற்புதமான கருத்து அம்மணி! எனக்கு அவை பேசுவதைப் பார்க்கத்தான் முடிகிறது. உன்னால் கேட்க முடிந்தால், அவை என்ன பேசிக்கொள்கின்றன என்று எனக்குக் கேட்டுச் சொல்வாயா?"

"பெண் புறா, வீட்டில் எத்தனை தடங்கல்களைச் சமாளித்து, காவல்களைக் கடந்து இப்படியொரு சந்திப்புக்காக வேர்க்க விறுவிறுக்க வர வேண்டியிருப்பதை விளக்கமாகச் சொல்கிறது. ஆண் புறா அதைப் புரிந்து கொள்ளாமல், தாமதமாக வந்ததைக் குற்றமாகவே சொல்லிக் கொண்டிருக்கிறது..."

"புறாவிலும் ஆண் என்றால், வெறுமனே காற்றையும் வெயிலையும் குடித்துக் கொண்டு, வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு காத்திருப்பதிலேயே காலத்தை வீணாக்குவதுதான் விதிபோலும்!"

"அ... அந்தப் பெண் புறா சொல்கிறது, தான் இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் ஒவ்வொரு தடையை மீறுவதற்கும் ஓராயிரம் உளச் சித்திரவதைகளை அனுபவித்து ஆண் புறாவைப் பார்ப்பதற்காக ஓடோடி வரும்போது, எந்தத் தொந்தரவுகளும் இல்லாத ஆண் புறா கொஞ்ச நேரம் காத்திருக்கும் தியாகமாவது செய்யக் கூடாதா? தவிரவும் தாமதமாய் வருவதில் பெண் புறாவுக்கென்ன சந்தோஷம்? என்றும் கேட்கிறது..."

"ஆண் தன்னையே நினைத்துத் துடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அதை ரசிக்கிற குரூர இன்பம் எல்லாப் பெண்களுக்கும்தான் இருக்கிறது..." என்று சொல்லி அருகிலிருந்த சிறு கல்லைத் தூர விட்டெறிந்தான் நகுலன்.

ராகினி துணுக்குற்றாள்.

"உன்னைத் துடிக்க வைப்பதில் எனக்கு இன்பமா?..." கேட்கும்போதே குரல் தழுதழுத்து கண்ணில் நீர்த்திரை படர்ந்தது.

நகுலனுக்குத் தவறு புரிந்தது. அவளது மெல்லுணர்வு மிக்க பகுதி ஒன்றில் தாக்கி விட்டோமென்று தெரிந்தது. மேலும் ஏதாவது பேசினால் அவள் அழுதுவிடுவாள் என்று தோன்றியது. மௌனமானான்.

ராகினியும் தலை குனிந்து அமர்ந்திருந்தாள். கண்களை நிரப்பிய நீர்ப்படலம் துளியாகி வீழ்ந்து விடாதிருக்கவும், கலங்கிய கண்களை அவனுக்குக் காட்ட விரும்பாமலும் இருக்கப் பிரயத்தனங்களைச் செய்தாள்.

ஆங்காங்கே தத்திக் கொண்டிருந்த சிறு குருவிகளின்



ஓசையில் மட்டும் சில நிமிடங்கள் கழிந்தன.

"கோபமா?" நகுலன் மெல்லக் கேட்டான்.

ராகினி நிமிர்ந்தாள். சிவந்திருந்த கண்களோடு சிரித்தாள். இல்லை என்பதாக அவசரத் தலையாட்டினாள். முகத் தசைகள் அவளது சிரிப்பைக் காட்டிக் கொள்ளப் பெரிதும் சிரமப்பட்டன.

நகுலனுக்கு மிகப் பரிதாபமாக இருந்தது. தன்னை நொந்து கொண்டான். பேச்சை வேறு திசையில் செலுத்த விரும்பி, "அதோ இரவுக் காவல்காரனும் மெல்லத் தலையைக் காண்பிக்கிறான்" என்றான்.

அவள் அவன் பார்த்த திசையில் வானத்தைப் பார்த்தாள். நிலாவின் மங்கலான உருவம் தெரிந்தது. சூரியன் இன்னும் மறையவில்லை.

"சந்திரன் முகத்தில் தூக்கக் கலக்கம் தெரிகிறது" என்றாள். குரல் பிசிறாக ஒலித்தது. தன் குரல் அவளுக்கே விநோதமாக இருந்தது.

"இரவு முழுக்கக் காவல் வேலை இருக்கிறதல்லவா? அதுதான் பகல் முழுவதும் நன்கு உறங்கிவிட்டு வருகிறான்..." என்று சிரித்தான் நகுலன். ராகினியும் சிரித்தாள்.

நகுலனுக்குச் சற்று ஆசுவாசம் பிறந்தது.

அவள் உள்ளங்கையைத் தன் உள்ளங்கைக்குள் ஆதரவாக அழுத்திக் கொண்டான்.

"எத்தனை மணிக்கு நீ திரும்ப வேண்டும்?" என்று அவள் காதுக்குள் கேட்டான்.

"அவசரமில்லை. நேரம் இருக்கிறது" என்றாள். அவள் முகத்தில் இப்போது புன்னகை நிரந்தரமாகத் தங்கியிருந்தது.

திடீரென்று ராகினி, "கதிரவன் மஞ்சள் தெளிக்கிறான்" என்றாள், மர இலைகளினூடே நிலத்தில் வீழ்ந்த சூரியக் கதிர்களைப் பார்த்து.

நகுலன் அவளை வியப்போடு பார்த்தான். பிறகு சொன்னான், "இரவு பூமியில் கோலம் போடப் போகிறது. அதற்கு முன் சூரியன் மஞ்சள் தெளிக்கிறான் போலும்..."

ராகினி விழிகள் விரிய அவனைப் பார்த்தாள். உள்ளம் மகிழ்ச்சியால் பொங்குவதை அவனுக்கு உணர்த்திவிடத் துடித்தாள்.

கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு மூச்சை ஆழமாக உள்ளிழுத்தாள்.

"மல்லிகை மலர்கள் எங்கோ பூத்திருக்கின்றன. வாசனை என் மூளையையும் நிரப்பிவிட்டது..." என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டாள்.

நகுலன் அமைதியாக அவள் முகத்தில் தோன்றும் பரவச உணர்வுகளைப் பார்த்தபடி இருந்தான். அவன் தன்னை உறுத்துப் பார்ப்பதறிந்ததும் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். முகத்தில் வெட்கம் பரவியது.

பெண்களின் நாணம் பூத்த முகத்தின் அழகுக்கு இணையாக உவமை சொல்ல உலகில் வேறெந்த அழகும் கிடையாது என்று நகுலனுக்குத் தோன்றியது. அதுபோல, ஊடலின் பின் தோன்றுகின்ற புதிய உலகு, இறப்பின் பின் கிடைக்கும் எனச் சொல்லப்படுகிற சுவர்க்க உலகை விட இன்பகரமானது என்றுணர்ந்தான். இருவரும் புதிய இன்ப உலகொன்றினுள் நுழைந்து விட்டதைப் போல உள்ளம் பொங்கப் பார்த்திருந்தனர்.

இருவரும் தங்களை மறந்த நிலையில் அணைத்துக் கொண்டனர். நிலத்தில் சேர்ந்த நீர்போலப் பிரித்தறிய முடியாதபடி கலந்து விட்டதாய் உணர்ந்தனர். உலகம் அந்த இருவருக்குமாகத் தன்னைப் புதுப்பித்திருந்தது.

புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ
நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து.

(குறள்: 1323)

இலக்கிய நயம் தருவது முழடிஸ்யன்

★ சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து என்ன முயற்சிகள் நடைபெறுகின்றன?

க. கமால்தீன், ஏறாவூர்-3

எவ்வளவு காலத்துக்குப் பேசாமலேயே இழுத்துக் கொண்டு போக முடியும் என்று ஆலோசனை சொல்பவர்களின் காலில் விழுந்து கும்பிட இரு தரப்பும் தயாராயிருக்கின்றன. பேச்சை குறைந்த பட்சம் டிசம்பர் வரைக்குமாவது இழுத்துச் செல்லப் பிரயத்தனம் நடக்கும்.

★✪★

★ தன்னிடம் உள்ள எல்லாவற்றையும் தானம் செய்துவிட வேண்டி வரும் நிலைமைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கை. ரமேஷ், பொத்துவில்.

நினைக்க என்ன இருக்கிறது? குடும்பத்தைக் கொழும்புக்குக் கூட்டி வந்து விட வேண்டும். பேசுவதைக் குறைத்துக் கொள்ளவேண்டும். அமைச்சுப்பதவி முடிந்து போவதற்குள் வியாபாரத்தில் இனி எவ்வளவு தேத்த முடியும் என்று பார்க்க வேண்டியது தான்!

★✪★

★ சிந்தியாவிடம் வந்து தைரியமாக யாரும் "ஐ லவ் யூ" சொன்னதுண்டா? மழுப்பாமல் பதில் சொல்லவும்?

ஷீலா மாணிக்கம், மன்றாசி.

இதில் மழுப்ப என்ன இருக்கிறது. அழகைப் பொருட்படுத்தாமல் அவ்வாறு வந்து கேட்கிற தைரியம் யாருக்கு வரும்?

★✪★

★ வெற்றி பெற்ற ஒவ்வொரு மனிதனுக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்பது பற்றி?

த. பருஷோத்தமன், நாவற்குடா.

ஆமாம், இவனைப் போய் எப்படி இந்த உலகம் இப்படிக் கொண்டாடுகிறது என்ற ஆச்சரியத்துடன்.

★✪★

ச்சரின் உரை கேட்டீர்களா?

எல். நிமலன், கொழும்ப-02.

டிக்கும் வரை பெரிய சிலர் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்ததும் தெரிந்தது. பயத்தில் முழுசாக மகிழ்ச்சிப்பட முடியவில்லை.

★✪★

★ உங்களை எரிச்சலூட்டுவது எது?

ரூமியா, பன்கொள்ளமட.

ஏராளம் உண்டு. இந்தக் கணத்தில் தோன்றுவது இந்தத் தொலைக்காட்சி விளம்பரங்கள். குறிப்பாக நம்நாட்டு விளம்பரங்கள் ஏன் இவ்வளவு சிறுபிள்ளைத்தனமாக இருக்கின்றன! கமெரா முன்னால் தோன்றி தங்கள் பொருளுக்காக... ஏன் இத்தனை அழுத்தமாகக் கூச்சலிடுகிறார்கள்! காட்சியிலேயே சொல்லிவிடுவதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லாமல் விளக்க உரையும் பாட்டும்... அதுவும் போதாதென்று மேலும் மேலும் விவரிப்புமாக விளம்பரத்தை ஒரு கலையாக இன்னும் நாம் புரிந்து கொள்ளவில்லை. தெருவில் லவுட்ஸ்பீக்கர் கட்டிக் கத்திக் கொண்டு போவதையே தொலைக்காட்சியிலும் செய்து நம் கண்களையும் காதுகளையும் ரத்தம் சிந்த வைக்கிறார்கள்.

★✪★

★ வேறு எங்கேனும் ஒரு கிரகத்தில் நம்மைவிடப் புத்திசாலியானவர்கள் இருக்கக் கூடும் என்கிறீர்களா?

இராதாகிருஷ்ணன், மஸ்கெலியா.

ஆம்! அவர்கள் யாரும் நம்முடன் இதுவரை தொடர்பு கொள்ளவில்லை என்பதே அவர்கள் புத்திசாலிகள் என்பதற்கு நிரூபணம்தானே!

★✪★

★ ஞாயிறன்று இங்கிலாந்துடனான போட்டியில் நம் அணியினரின் வெற்றி எப்படி?

பீ. பவானி, அப்படுனாலி.

காட்டில் எறித்த நிலா; கடலில் பெய்த மழை!

★✪★

★ தப்பே செய்யாதவர்கள் உண்டா?

ஜே. நிஹாறா ஜௌபர், புதிய காத்தான்குடி-6.

அது செத்துப் போனவர்களுக்கும், இன்னும் பிறக்காதிருப்பவர்களுக்கும்



திரிஷா



சூர்யா

மட்டுமே உரித்தான சிறப்பு. வாழ வேண்டிய அவசியம் என்று கருதும் எவரும் குற்றவாளியாவதைத் தவிர வேறு வழியில்லை.

★✪★

★ வாழ்க்கை என்பது நாங்கள் நடிக்கிற நாடகமா?

எம். ஹிஸான் நஸீஸ், ஹேனமுல்லை.

அப்படித்தான் இருக்க வேண்டும். எங்களுக்கு அதைப் பார்க்க முடியவில்லையே!

★✪★

★ எனக்குப் பிழையாகத் தெரியும் ஒன்றைப் பெரும்பாலான மக்கள் சரி என்று கொண்டாடுகிறார்கள். எனக்குச் சரியாகத் தெரியும் ஒன்றைச் சொல்ல முற்பட்டால் துரோகம் செய்பவனைப் பார்ப்பது போலப் பார்க்கிறார்கள்... என்ன காரணம் சிந்தியா?

இ. முகுந்தன், வவுனியா.

இன்னும் நிரூபிக்க முடியாத ஒன்றின் மீது நம்பிக்கை வைக்க எவ்வாறு சாத்தியம் இருக்கிறதோ, அவ்வாறே உண்மை என்று நிரூபிக்கப் பட்டதன் மீது அவநம்பிக்கை கொள் வதற்கும் சாத்தியம் இருக்கிறது. இது தான் குழப்பம்.

"தனித்து நின்றால் காணாமல்

## சிந்தியா பதில்கள்

போவாய். எப்போதும் கூட்டத்தோடு கலந்து போய்க் கொண்டிரு" என்று ஆட்டு மந்தைகளுக்குச் சொல்லப்படும் யுக்தியே இந்த உலகில் துரோகிகளாகி விடாமல் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் வழியாக இருக்கிறது.

★✪★

★ 'மேக்கப்' போடுவது நல்லதா கெட்டதா?

எம். வசந்தி, திருகோணமலை.

இதையெல்லாம் பட்டிமன்றம் வைத்தா முடிவு செய்ய முடியும்? வயதைக் குறைத்துக் காட்டுவதற்கு அலங்காரம் உதவுகிறது என்பது உண்மைதானே! உடனேயே ஏன் வயதைக் குறைத்துக் காட்டவேண்டும் என்று கேட்கக்கூடாது.

வயதாவதை விரும்பாதவர்களுக்குத்தான் அது. இதோ ஒரு அழகு நிலையத்தின் வாசலில் இருந்த வாசகம்.

"இங்கிருந்து வெளியே செல்லும் அழகிகளைப் பார்த்து விசிலடிக்க வேண்டாம். அவள் ஒருவேளை உன் பாட்டியாக இருக்கலாம்".

# தன் தலையைக் கொய்த தலைவன்

காசிநகரிலுள்ள பெரும் தனவந்தரான தருமசீலன் செட்டியார், பெயருக்கேற்றாற் போல் தர்ம கைங்கரியங்களைச் செய்து வந்தார். காசி நகரில் போதுமான மழைவீழ்ச்சி இன்மையால் விவசாயத்துக்கும் மக்களின் அன்றாடத் தேவைகளுக்கும் நீர் கிடைக்கவில்லை. இதனால் தருமசீலன் செட்டியார் தன் சொந்தப் பணத்தைச் செலவிட்டு ஒரு குளத்தை வெட்டுவித்தார். எவ்வளவோ ஆழமாகத் தோண்டியும் குளத்தில் நீர் சுரக்கவில்லை.

"முப்பத்திரண்டு இலட்சணங்களும் பொருந்திய ஒருவன், வெட்டப்பட்ட குளத்தின் மத்தியில் நின்று தன்னுடைய சிரசைத் தானே அறுத்து, சிந்தும் இரத்தத்தைக்

## மன்னாதி மன்னன் 112

குளத்தின் தரையில் படவைத்தால் என்றுமே வற்றாத நீர் சுரக்கும்" என்று காளியம்பாள் ஆலயத்தில் அசரீரி கூறப்பட்டது. அசரீரியில் கூறப்பட்டபடி சாமுத்திரிகா இலட்சணங்கள் பொருந்திய ஒருவன் தன்னைத் தானே அர்ப்பணிக்க முன்வருவானால், "குளத்தின் நடுவே நடப்பட்டுள்ள தங்கப் பொம்மை, அதனருகே நடப்பட்டுள்ள தங்கக் கம்பம் மற்றும் கம்பத்தின் மேல் வைக்கப்பட்ட இரத்தினங்கள் பொதிந்த தங்கத் தட்டம் அத்தனையும் அந்த நபரால் குறிப்பிடப்படும் வாரிசுக்கு வழங்கப்படும்" என்று கல்வெட்டு ஒன்றினை செட்டியார் குளக்கரையில் வைத்ததுடன் நாடெங்கணும் தண்டோராப் போட்டு அறிவித்தும் இருந்தார்.

பல நாடுகளுக்கும் சென்று மன்னர் விக்கிரமாதித்தனைப் பற்றிய விமர்சனங்களைத் திரட்டி வந்த வேதாளம், காசிநகர் தருமசீலன் செட்டியார் வெட்டிய குளத்தைப் பற்றியும் மன்னரிடம் தெரிவித்திருந்தது.

தருமசீலன் செட்டியாருடைய நல்லெண்ணம் நிறைவேற தன்னைத் தானே அர்ப்பணிக்க மன்னர் விக்கிரமாதித்தன் துணிந்துவிட்டதை எண்ணி அமைச்சர் பட்டி வியப்படைந்தார்.

ஆனால் விபரீதமான செயலென அவர் கருதவில்லை.

மன்னர் விக்கிரமாதித்தன் வேதாளத்தின் துணையுடன் காசிநகர் சென்றார். தருமசீலன் செட்டியாருக்கோ எவ் விதமான தகவலும் தெரிவிக்காமல் குளத்தின் மத்தியில் அமைக்கப்பட்ட தங்கப் பலகையின் மீதேறி நின்று தனது இடைவாளை உருவி தனது தலையைத் தானே சீவுவதற்கு ஆயத்தமானார். "இந்த உலகில் பிறந்த எந்த உயிரும் என்றேனும் ஒரு நாள் உடலைவிட்டுப் பிரிந்தே ஆகவேண்டும். நாடு நலம்பெற வேண்டும் என்று விரும்பும் தருமசீலன் செட்டியாரின் எண்ணம் போல் இக் குளம் என்றும் வற்றாத நீர் நிறைந்து எல்லோருக்கும் உதவவேண்டும் என்பதற்காக எனது தலையைச் சீவி இரத்தத்தைச் சிந்துவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். தாயே காளிகாம்பிகா, இந்தக் குளம் என்றும் வற்றாத நீரால் நிரம்பி சகலருக்கும் நலம் தர நீதான் அருள் பாலிக்க வேண்டும்" என்று கூறியவாறு தனது தலையை வாளினால் சீவினார். மன்னருடைய உடலிலிருந்து இரத்தம் வெள்ளம் போல் பாய்ந்து குளத்தின் தரையில் பரவியது.

**இராஜகுமாரன்**

இரத்தம் குளத்தின் தரையைத் தொட்டதும் குளக்கரையின் நாலாபுறத்திலிருந்தும் நீர் வெள்ளமென ஊற்றெடுத்துப் பாய்ந்தது. மன்னரின் தலையும் உடலும் தங்க மேடையில் கிடந்தது. மன்னர் விக்கிரமாதித்தனுடைய இஷ்ட தெய்வமான காளிகாம்பாள் தோன்றி, "விக்கிரமாதித்தா!, உன்னுடைய பரோபகார சிந்தையை மெச்சுகிறேன். நீ உயிர் பெற்றெழுந்து உன்னுடைய காலம் முடியும் வரை நாட்டில் நல்லாட்சி செய்வாயாக" என்று கூறியதும் மன்னருடைய துண்டிக்கப்பட்ட தலை அவருடைய உடலோடு ஒட்டியது. தூக்கத்திலிருந்து எழுந்திருப்பவர் போல் எழுந்து அம்பாளைத் துதித்து நின்றார். பின்னர் வேதாளத்தின் உதவியுடன் உஜ்ஜயினி மாகாளி பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

மன்னர் காசிநகருக்குச் செல்லும் போது அமைச்சர் பட்டியிடம் எதுவும் கூறவில்லை. அவருக்குத் தனது நோக்கம் தெரிந்தால் எப்படியாவது தடுத்து நிறுத்தக் கூடும் என்று கருதியமையினால் அமைச்சரிடம் எதுவும் கூறாமல் தனது கைபட ஓலை ஒன்றை எழுதி வைத்திருந்தார்.

சம்பவம் நடைபெற்ற தினம் காலையில் மன்னரைப் பட்டி காண முடியவில்லை. மன்னர் எழுதிய ஓலையையும் அவர் பார்க்கவில்லை. எனினும் "மன்னர் தனது எண்ணத்தைச் செயற்படுத்த காசிநகர் சென்றுவிட்டார்" என்று ஊகித்துக் கொண்டார். எது எப்படியானாலும் மன்னர் விக்கிரமாதித்தனுக்கு எத்தகைய உயிராபத்தும் ஏற்படப் போவதில்லை என்பதை அவர் நன்கு அறிவார். அதனால் அவர் கலவரப்படவில்லை.

மன்னர் அரண்மனை வந்து சேர்ந்ததும் நேராக அமைச்சர் பட்டியின் மாளிகைக்கு வந்தார். மன்னரைக் கண்ட அமைச்சர் இருகை கூப்பி வணங்கி, குறும்புச் சிரிப்பொன்றை உதிர்த்தார். அதிலிருந்தே அமைச்சர் பட்டி, தன்னுடைய அபார சக்தியினால் எல்லாவற்றையும் அறிந்திருப்பார் என்பதையும் மன்னர் தெரிந்து கொண்டார்.

அடுத்த நாட்காலையில் காசி நகர் வாழ் மக்கள் அனைவருக்கும், செட்டியார் வெட்டிய குளத்தில் நீர் சுரந்து நிரம்பிவிட்டது என்ற தகவல் எட்டியது. அவர்கள் எல்லோரும் குளத்தை வந்து பார்த்து மகிழ்ச்சி வெள்ளத்தில் குதித்தனர். தருமசீலன் செட்டியாருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டதும், தனது குடும்பத்தாருடன் குளக்கரைக்கு வந்தார். அங்கு அவர் கண்ட காட்சி அவரைப் பிரமிக்க வைத்தது. அங்கிருந்து நேராக காளிகாம்பிகா கோயில் சென்று பக்தி மேலீட்டால் விம்மி விம்மி அழுதார். "தாயே, உன்னுடைய கருணையினால் என் கனவு நனவானது, இருப்பினும் இத்தகைய தயாள சிந்தையுடன் தன்னைத்தானே அர்ப்பணித்த அந்த மகானுபவானுடைய சடலத்தைக் கூட எவராலும் காண முடியவில்லையே!" என்று பிரலாபித்தார்.

காளிகாம்பாளின் அசரீரி ஒன்று அப்பொழுது எழுந்தது "பக்தனே! இத்தகைய காரியத்தைச் செய்தவன் எனது பக்தனான மாமன்னன் விக்கிரமாதித்தன்தான். அவன் உயிர் பிரியவில்லை. அவனுக்கு உயிர் கொடுத்து, அவனது நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளேன்" என்று அசரீரி கூறியது.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

வணக்கம், சலாம், ஆயுபோவன்,

நாட்டு மக்களுக்கு உரையாற்றுவது ஒரு நல்ல முயற்சி பாருங்கோ. அதாலதான் எங்கட பிரதமர் நாட்டு மக்களுக்கு உரையாற்ற முன்வந்தவர். அவர் பேசினது கனபேருக்கு விளங்கேல்லை எண்டபடியால நான் இப்ப அவருக்குப் பதிலா உங்களுக்கு உரையாற்றி உங்கள மகிழ்விக்கப் போறன்.

அதாவது பாருங்கோ, அவர் என்ன சொன்னவரெண்டால், பொருளாதாரம், பொருளாதாரம், பொருளாதாரம்... திரும்பத் திரும்பப் பொருளாதாரம், திரும்பினாலும், நிமிந்தாலும் பொருளாதாரம். திரும்பின இடமெல்லாம் பொருளாதாரம். திரும்பி வராத பொருளாதாரம். பொருள் இல்லாத பொருளாதாரம். பணம் இல்லாத பொருளாதாரம். வரவில்லாத பொருளாதாரம். பலமில்லாத பொருளாதாரம். பதிலில்லாத பொருளாதாரம். மீட்சியில்லாத பொருளாதாரம்...

இதைவிட இன்னும் சில சொல்லுகள அவர் இதுக்கு முந்தி அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தவர். ஆனால், அதுகள் எங்கயோ கலவரத்துக்குள்ள துலைஞ்சு போனதால, இந்தமுறை சொல்லாமல் விட்டிட்டார். சமாதானம், புரிந்துணர்வு, பேச்சுவார்த்தை, எண்டதுகள்தான் அந்தச் சொல்லுகள். நீங்கள் ஆரெண்டாலும் வழியில கண்டெடுத்தா, தயவுசெய்து பிரதமர் செயலகத்துக்கு ரெஜிஸ்ரர் போஸ்ட்டில அனுப்பிவிடுங்கோ எண்டு தயவாக் கேட்டுக்கொள்ளுறன்.

உங்களக் கடனாளியெண்டு சொல்லி, நீங்கள் ஒவ்வொருத்தரும் எண்பத்தி மூவாயிரத்துக்குக் கடன்பட்டிருக்கிறியள் எண்டு, அவர் சொன்னதக் கேட்டு, கனபேருக்குத் தூக்கிவாரிப் போட்டுது. "எப்படாப்பா நான் கடன்பட்டனான். வயிறு காஞ்சாலும், கஞ்சியைக் குடிச்சுக்கொண்டு காலம் கடத்துவனே தவிர, ஒரு சதம் ஆரிட்டையும் கடன் கேட்டிருக்கிறனே" எண்டு என்ர ஆச்சியும் என்னட்டக் கேட்டவ. ஆனா, அடுத்த வீட்டு அங்கிள் பாடு வலு குஷி. மகனைக் கனடாவுக்கு அனுப்ப ஏழெட்டு லச்சத்துக்குக் கடன்பட்டிட்டு, எப்பிடி அடைக்கிறதெண்டு முழுசிக்கொண்டிருக்க, பிரதமரே சொல்லிப்போட்டார், ஆக எண்பத்து மூவாயிரம் மட்டும்தான் ஒவ்வொருத்தருக்கும் கடனெண்டு. ஆனபடியா, அதை அடுத்த மாசம் மகனனுப்பிற காசில சிம்பிளா அடைச்சுப்போட்டு, வலு கூலா இருக்கலாமெண்ட கனவில இருக்கிறார். ஆனா, அவருக்குத் தெரியாது, மொத்தக் கடனுக்கு மேலாலதான் இந்த 83 எண்ட சங்கதி. இதத்தான் எங்கட பழசுகள் பிறவிக் கடனெண்டு சொல்லியிருக்கினம்போல.

சரி, இப்ப, பிரதமரின்ர உரையால மனம் சோர்ந்து போனவைய? மகிழ்ச்சிப்படுத்திற முயற்சியில, அவர் சார்பில என்ர விளக்க உரையத் தாறன்.

அதாவது கண்டியளோ, எனது அன்பார்ந்த மக்களே! இலங்கை போல ஒரு சின்ன நாட்டில சாதனைகள் செய்யிறதெண்டது பெரும் கஷ்டம். முக்கி முக்கி ஒரு கிறிக்கெட்டில, ஒரு முறை உலகச் சம்பியன் பட்டம் வாங்கினம். ஆனால, அடுத்த கணமே கிறிக்கட் போட்டுக்குள்ள குத்துவெட்டுப்பட்டு, இப்ப கிறிக்கெட் ஃபீல்டுக்கு வெளியால நிக்கிறம். வேறெதில நாங்கள் சாதனை செய்ய ஏலுமெண்டு பாத்தா, ஒரேயொரு வழி, கடனில சாதனை செய்யிறதுதான்.

எங்கட நாடுதான் கடனில முதலிடம் வகிக்கிற நாடெண்ட பெருமையை மிக விரைவில ஈட்டிக் கொள்ளுவமெண்ட செய்தியை உங்கள் கரகோஷங்களுக்கு மத்தியில, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுறன்.

இதேவேளையில, நாங்கள் ஏன் ஊழியர் சேம லாப நிதியில இருந்து 98 வீதத்தைக் கடனா எடுத்திட்டமெண்டதையும், நான் சொல்லுறது உங்களுக்கு மகிழ்ச்சியாயிருக்குமெண்டு நினைக்கிறன். இதால, ஓய்வு பெறுகிறவை பென்ஷன் ஒபீசுக்கு அலைய வேண்டியதில்லை. ஏனெண்டா, அவையளுக்குக் குடுக்க அங்க நிதி இருக்காது. அதால, அவையள் அலைச்சலில்லாம ஓய்வா இருப்பினம். ஓய்வு பெறுகிறவையளுக்கு ஓய்வுதானே முக்கியம்.

சிலர் அந்த 2 சதவீதத்தையும் ஏன் விட்டு வச்சனெண்டு கேப்பினம். அது வேறெதுக்குமில்லை. அடுத்த முறை கடனெடுக்க, அடிச் சட்டியில எண்டாலும் கொஞ்சம் இருக்க வேணும் எண்டதுக்காகத்தான். நான் இப்பிடி முன் எச்சரிக்கையா இருக்கிறதை, நீங்கள் மெச்சுவீயள் எண்டதில சந்தேகமில்லை.

இதேவேளையில, இன்னொரு முக்கியமான விசயத்தையும் நான் இப்ப சொல்ல வேணும். இண்டைக்கு சமாதானம் வந்து, ஒரு துவக்குக் குண்டை வீணாக்காமல் விட்டாலும் நாங்கள் இதுவரை வாங்கின போர்த் தளபாடக் கடனை 2008ம் ஆண்டுவரை குடுக்க வேண்டியவர்களாக இருக்கிறம் எண்டதுதான். இதில, முக்கியமான விசயம் என்னவெண்டு கேப்பியள். அதாவது பாருங்கோ, இந்த நாட்டில, சமாதானத்துக்காக பலர் பல வழிமுறைகளைக் கொண்டுவந்தவை. சிலர் சமாதானத்துக்காக பேச்சுவார்த்தை நடத்தினவை. சிலர் சமாதானத்துக்காகப் பணமும் ஆயுதமும் கொடுத்தவை. சிலர் சமாதானத்துக்காக ஊர்வலங்கள், யாத்திரையள் நடத்தினவை. சிலர் சமாதானத்துக்காக பாடல்கள், நாடகங்கள் நடத்தினவை. சிலர் சமாதானத்துக்காக யுத்தம் நடத்தினவை. நானோ, சமாதானத்துக்காகக் கடன் வாங்கிறன்.

எனவே, மக்களே! இந்தக் கடன் சும்மா கடனில்லை. சமாதானத்தின்ர கடன். "என் கடன் பணி செய்து கிடப்பதே" எண்டதுக்குப் பதிலா, "என் பணி கடன் செய்து கிடப்பதே" எண்ட புது மொழியை நான் கடைப்பிடிக்கிறன். சமாதானத்தின்ர பெயரால கடன் வாங்கிறதெண்டது சமாதானத்துக்கே கடன்படுகிற மாதிரி. இது சமாதானத்தையே கடனாய்ப் பெறுகிறதுக்கு ஒப்பானதாகும். நாங்கள் சமாதானக் கடனைச் சுமக்கிறதில பெருமைப்படவேணும். இந்தப் பாக்கியம் வேறை ஆருக்கும் கிடைக்காது. இதால, நீங்கள் ஒவ்வொருத்தரும் சமாதானத்துக்குப் பங்காற்றினவையள் ஆகிறியள். எண்டதால மக்களே! நாங்கள் செய்த பிறவிக் கடனை இண்டைக்குத்தான் உண்மையில காணுறம்.

கடன் வாழ்க!, சமாதானம் வாழ்க! எண்டு சொல்லி விடைபெறுகிறன். வணக்கம்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

14.07.2002 தொடங்கி 20.07.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

மிதுனம் - சூரியன், கர்க்கடகம் - வியாழன், செவ்வாய், புதன்
விருட்சிகம் - கேது, இடபம்- சனி, இராகு,
சந்திரன் சிங்கம், கன்னி, துலாம், இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விருத்தியுடன் முன்னேற்ற நிலையுண்டு. பணவரவு திருப்திகரமாக அமைவு பெறும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் சிலர் மாற்றங்களைப் பெறுவர். விவசாயிகள்,வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்
அதிஸ்ட இல.: 1.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) இனசன நன்மையும், மனமகிழ்ச்சியும் உண்டு. வெளியிடப் பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகத்தர்கள் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள்,வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 6.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில்நிலை உயர்ச்சி. பணவரவு. காரியானுகூலம். இனசன மகிழ்ச்சி உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த நன்மைகள் பெருகும். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் சிறப்பு. பணக் கஷ்டம் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் இருக்கவும்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 4.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம் தீரும். குடும்பத்தில் வீண் பகையுண்டாகும். பெரியோர் உதவியுண்டு. பணவரவு சுமாராக அமையும். உத்தியோத்தர்கள் சிறிது பிரச்சனைக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், உரிய இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 2.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக்குறை நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வந்தடையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் கஷ்டங்கள் நீங்கும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் சிறிது தளம்பல் நிலை உருவாகும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 6.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) மனக் குறை நீங்கும். மகிழ்வு ஏற்படும். குடும் பத்தில் மகிழ்ச்சியுண்டாகும். பெரியோர் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் நன்னிலையுண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 7.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலில் உயர்வும், முயற்சியில் சிறிது தடையும் உண்டு. பெரியோர் பகை கொள்வர். உத்தியோகத்தில் சிறிது மாற்றத்தினைச் சிலர் அடைவர். மாணவர்கள் கல்வியில் மந்த நிலையடைவர். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 4.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலில் உயர்ச்சியும் பணவரவும் உண்டாகும்.உத்தியோத்தர்கள் எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 2.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) பணவரவு சிறிது தாமதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும். பெரியோர் உதவி கிடைக்கும். உத்தியோகத்தர்கள் எதிலும் கவனமுடன் செயற் படுவது நன்மை தரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 4.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் சிறப்பும், பணவரவு, கௌரவம் உண்டாகும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வி உயர்ச்சி உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 1.

